# கலைக்கேசரி
KALAIKESARI

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 09 ISSUE : 01 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 86 / News / 2017



## தம்பலகாமம் – ஊர்ப்பெயர் ஆய்வு

## கந்தளாய் திருக்குளத்து வேள்வி

## The Saiva Paripalana Sabai

www.kalaikesari.com / January 2018

ISSN 2012-6824

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 125.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..........CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக தரமான நவநாகரீக ஆடைகளை மிக விரைவாக தெரிவு செய்திட...

# BudgetStore.lk

இப்பொழுது உங்களுடைய ஆடைகளை
வீண் அலைச்சலின்றி வீட்டிலிருந்தவாறே
கொள்வனவு செய்துகொள்ளுங்கள்



இந்திய
பாரம்பரிய
கண்கவர்
வடிவமைப்புக்களை
உடைய ஆடை
தெரிவுகள்

எமது புதிய காட்சியறை:

#298, GALLE ROAD, COLOMBO 06.
Hotline: 077 3629626 / 077 6176709 | Facebook.com/budgetstore.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE MOST TRUSTED TRANSACTIONS
## நம்பிக்கையான கைமாற்றத்துக்கு



REAL ESTATE
**LIVING CITY**
THE MOST TRUSTED TRANSACTIONS

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

**வீண் அலைச்சலின்றி உங்கள் இருப்பிடத்திலிருந்தவாறே உங்கள் வசதிக்கு தேவையான வீட்டையும் நிலத்தையும் வர்த்தக நிலையத்தையும் விற்பதற்கு, வாடகைக்கு விடுவதற்கு, வாடகைக்கு பெறுவதற்கு, வாங்குவதற்கு, குத்தகைக்கு கொடுப்பதற்கு / எடுப்பதற்கு இன்றே அழையுங்கள் குறைவான சேவை கட்டணமே அறவிடப்படும்.**

**Hotline: 077 987 59 59**

| விற்பனைக்கு (SALE) | வாடகைக்கு கொடுக்க / எடுக்க (RENT) | வாங்குவதற்கு (BUY) | குத்தகைக்கு கொடுக்க / எடுக்க (LEASE) |
|---|---|---|---|

**No. A 14, NHS Flat, Thimbirigasyaya Road, Colombo 05.**
**E-mail :** livingcity.srilanka@gmail.com | **Web :** www.livingcity.com
**Facebook :** livingcitysrilanka | **Twitter :** livingcitysrilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contents





## அட்டைப்படம்

**ஜெய்ப்பூரின் பழைமைமிக்கதும் சிறந்த கட்டடக்கலைக்கு பெயர் பெதும் உல்லாசப் பயணிகளை மிகவும் கவர்ந்த ஓர் இடமாகவும் விளங்கும் ஆமெர் கோட்டையின் ஒரு காட்சி.**
**(விபரக்கட்டுரை உள்ளே...)**






51 தெரிந்த பெயர் தெரியாத விபரம் – மஞ்சள் குங்குமம்

54 ராஜஸ்தானின் கவர்ச்சிமிகு ஆமெர் கோட்டை

60 வண்ணத்துப்பூச்சி காதலர்கள்







தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு 06

மலையக இலக்கியத்தின் பலமான தளத்திற்கு வளம் சேர்த்த ஏ.பி.வி.கோமஸ் 14

நூற்றாண்டு காலம் கல்விப் பணி செய்த கரவை விக்னேஸ்வரக் கல்லூரி 18

இசைப்பேரறிஞர் சங்கீத பூஷணம் வி.கே.குமாரசுவாமி 25

கந்தளாய் திருக்குளத்து வேள்வி 28

கலைத்துவம் பேணிவாழும் சூதுவாதற்ற பாலித்தீவு மக்கள் 34

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயம் 40

மகிழ மரம் 44

பரத நாட்டிய நிருத்த உருப்படி மரபின் ஆரம்பம் அலாரிப்பு 46

64 ஓவியக்கலையில் நாட்டியக்கலை

68 எகிப்தின் மிகப்பெரிய அருங்காட்சியகம்

81 The Saiva Paripalana Sabai



**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. : +94 11 7322732
Fax : +94 11 2327827
kalaikesari@expressnewspapers.lk
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
luxmi.rajadurai@yahoo.com

**CONTRIBUTORS**
Prof. Saba Jeyarasa
Dr. T.Jeevaraj
Dr. Arumainathan Satheeskumar
Mrs. Vasantha Vaithyanathan
Mrs. Pathma Somakanthan
Mrs. Thilaka Wijayaratnam
Dr. Vivian Sathiyaseelan
Subashini Pathmanathan
Rasiah Siridaran
Shanmugasarma Jeyaprakash
R.Sadagopan
V.Selvarasa
Amutha

**PHOTOS**
S.M.Surendran
Sarmini Sadagopan
M.Sugitha Kumar
M.Newton

**LAYOUT**
M.Sritharakumar

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING & SUBSCRIPTIONS**
V.Shivakumar - 071 6845751
shivan@encl.lk

**CIRCULATION**
T.Ravi - 077 7751021

**ISSN 2012 – 6824**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

Editor's Note



வணக்கம் கலைக்கேசரி வாசகர்களே! To our esteemed readers,

**January, 2018**

அன்பார்ந்த வாசகர்களே!

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை கலைக்கேசரி முதலில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. 2018 ஆம் ஆண்டு புதிய வருடப்பிறப்புடன், கலைக்கேசரியும் தனது ஒன்பதாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். தமிழ்ப் பாரம்பரியம், கலை, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றினை மேம்படுத்த, கலைக்கேசரி மேற்கொண்டுவரும், கனமும் காத்திரமுமான பணி, வாசகர்களின் ஆதரவினால் மேலும் தொடரும்.

இவ்விதழில் இடம்பெறும் கிழக்கின் பழைமை வாய்ந்த தமிழ்ப்பகுதியும் தமது பிறப்பிடமுமான தம்பலகாமத்தின் வரலாற்றுத் தொன்மையை டாக்டர்.த.ஜீவராஜ், வரலாற்று ஆதாரங்களுடன் விளக்கும் கட்டுரையும், கிழக்கு மாகாணத்தின் மற்றொரு பண்டைத்தமிழ்ப் பிரதேசமான கந்தளாய் வேள்விப் பாரம்பரியச் சிறப்பையும் அதனை மீள ஆரம்பிக்கும் நிகழ்வையும் டாக்டர். அ. சதீஷ்குமார் விளக்கும் கட்டுரையும், நிச்சயம் வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும் எனலாம்.

காலம் கறங்குபோல் சுழன்று காட்சிகள் மாறுவது இயல்பேயாயினும், காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப் படும் திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் தமிழர் தம் பண்டைய சிறப்பை மூடி மறைக்க முயற்சிப்பதையும் காண முடியும். வாசகர்கள் இவற்றையிட்டுச் சிந்திக்க வேண்டும்.

அவ்விதமே எமது அனுபவமிக்க அறிஞர்கள் தரும் தமிழ்க்கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், இலக்கியம் தொடர்பான ஆய்வு ஆக்கங்களுடன் ஜெய்ப்பூரில் **(இந்தியா)** அமைந்திருக்கும் பண்டைய ஆமெர் கோட்டையின் கட்டடக்கலையழகின் சிறப்பை யும், இற்றைவரை இந்து கலாசாரப் பண்பாடுகளைப் போற்றிவாழும் பாலி மக்களின் வாழ்வியலை சித்திரிக்கும் அரிய பயணக்கட்டுரையையும் சீன தேசத் தின் மனம் கவரும் பழம்பெரும் காதல் காவியம் ஒன்று பற்றியும், இவ்விதழில் நீங்கள் படித்து இன்புறலாம்.

மீண்டும் சந்திப்போம்

நன்றி வணக்கம்.

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை

Kalaikesari wishes all its readers a Happy New Year. At the same time, we like to share with you happily and proudly, the message that Kalaikesari is entering its 9th year of publication this year with your support.

With its unique characteristics of extolling the historic values of Tamil traditions, culture, art and the world's various traditions and uniqueness, Kalaikesari is enjoying a special place in the world of Tamil magazines. We hope that it will reach many more readers in the future.

In this issue, on the one side while Dr. T. Jeevaraj gives you an analytical article of his home place, Thambalagamam, an ancient Tamil territory with so many historical anecdotes, on the other side Dr. Arumainathan Sathiskumar gives you elaborately the renewal of a traditional Hindu celebration with deep historical background. Certainly their ancient traditions give the local people a pride of place in their existence. Though it is an undeniable fact that time brings unexpected scenerios in the stage of nation's life, there were instances of well planned activities to distort the truth of the real historical background. Readers should give deep thought to this.

And at the same time with somemore analytical articles by our experienced writers you can find an article regarding the extra ordinary architectural beauty of the ancient Amer Fort, Jaipur and a descriptive account on the life of Bali island people, who even now follow the ancient Hindu cultures and traditions with utmost piety, and a scintillating love story from an ancient Chinese folklore.

Please read and enjoy.

Thank you.

Annalakshmy Rajadurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு

Dr. த.ஜீவராஜ் (MBBS, MCGP)

**ஊ**ரின் பெயர் தம்பலகமமா? இல்லை தம்பலகாமமா? என்ற கேள்வி என் மனதில் எழுந்த நாளில் இருந்து இடப்பெயர்கள் மேல் ஓர் அதீத ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது. நாள்தோறும் காணக் கிடைக்கும் இடப்பெயர்களின் பின்னால் எல்லாம் மனம் ஓடிக்கொண்டிருந்தது. சந்திக்கும் ஒவ்வொரு இடப்பெயரும் அதற்கே உரித்தான தனித்துவமான ஒரு நீண்ட சுவாரஷ்யமான வரலாற்றைக் கொண்டிருந்தது. இடப்பெயர்கள் பற்றிய தொடர்ச்சி யான தேடல் வரலாற்று எழுத்தியலில் அது கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினை உணர்த்துவதாக இருந்தது.



புதைபொருட்களும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், நாணயங்களும், மட்பாண்டங்களும், முதுமக்கள் தாழிகளும், இலக்கியங்களும் ஒரு நாட்டின் வரலாற்றையும், பண்பாட்டுச் செய்திகளையும் எவ்வாறு எடுத்துச் சொல்கின்றனவோ அது போலவே இடப்பெயர்களும் அவ்விடத்தின் வரலாற்று ஆய்வு களுக்கு உறுதுணை செய்கின்றவையாக அமைந்திருக்கின்றன என்பதனைப் புரிந்து கொள்ள இத்தேடல் முயற்சி உதவி புரிந்தது.


மேற்குறிப்பிட்ட தொல்பொருட்கள் எல்லாம் பண்டைய நாட்களில் அறிவு சார்ந்த நிபுணர்களால் உருவாக்கப்பட்டவையாக இன்று அகழ்வாராய்ச்சிகள் மூலம் எமக்குக் கிடைக்கின்றன. ஆனால் புராதன காலம் முதல் வழங்கப்பட்டுவரும் இடப்பெயர்கள் நுணுக்கமான அறிவின்றி சாதாரண பொதுமக்களால் படைக்கப் பட்டவையாக இருக்கின்றன. எனவே தான் மனித வாழ்வின் பொதுவான அம்சங்களை தொல்பொருட்களைவிட இடப் பெயர்கள் மிகச் சிறப்பாக உணர்த்தும் வல்லமை கொண்டவையாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடப்பெயர்

நாடோடிக் குழுக்களாக வாழ்ந்த ஆதிகால மக்கள் ஒரு குறித்த இடத்தில் தங்களை நிலைநிறுத்தி வாழ முற்பட்டபோது இடப்பெயர்கள் தோற்றம்பெறத் தொடங்கியது எனலாம். அடையாளப்படுத்தலின் தேவையுடன் உருவான புராதானமான இடப்பெயர் கள் பெரும்பாலும் ஆதிமனிதன் இயற்கையுடன் கொண்டிருந்த மிக நெருங்கிய தொடர்புகளை வலியுறுத்துவதாக அமைந்திருந்தன. அதனால் அவை நீர்நிலை, நிலப்பண்பு, தாவரம், விலங்கு, பறவை என்பவற்றால் அடையாளப்படுத்தப்பட்டது. காலப்போக்கில் ஏற்பட்ட நாகரீக வளர்ச்சியைத் தொல்காப்பியர் கூற்றுக்கமைய அங்கு வாழ்ந்த மக்களுடன் தொடர்புடைய வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்ற தன்மை வாய்ந்தவையாக அமைந்திருந்தன.

அவ்வாறு அவர்களால் சூட்டப்பட்ட பெயர்களை அவற்றின் பொதுவான தன்மையின் அடிப்படையில் பல வகைகளாகப் பிரிக்கலாம். அந்த வகைகளுக்கு இங்கு உதாரணமாக காட்டப்பட்டிருக்கும் இடப் பெயர்கள் முன்னர் தம்பலகாமப் பற்று (இன்றைய தம்பலகாமம், கிண்ணியா, கந்தளாய்) பிரதேச த்திற்குள் அடங்கியிருந்த சில ஊர்கள், குளம், ஆறு, வயல்நிலங்கள் என்பவற்றிற்குச் சொந்தமானவை


By Edward Frederick Kelaart
1819-1860
Royal College of Surgeons of England
Publication date 1857

REPORT

ON THE

TAMBLEGAM PEARL OYSTER FISHERY.

The Oyster found in the Tamblegam lake, and from which Pearls are obtained, is the *Placuna placenta*, "Vitre Chinoise" of some French writers, and the "Window Oyster" of English travellers in China,—the shells, from their semi-transparency, being used for windows. The *Placuna* belongs to the same family of Conchiferous Molluscs as the edible Oysters of Europe and of this country. It has no resem-

**நாடோடிக் குழுக்களாக வாழ்ந்த ஆதிகால மக்கள் ஒரு குறித்த இடத்தில் தங்களை நிலைநிறுத்தி வாழ முற்பட்டபோது இடப்பெயர்கள் தோற்றம்பெறத் தொடங்கியது எனலாம். அடையாளப்படுத்தலின் தேவையுடன் உருவான புராதானமான இடப்பெயர் கள் பெரும்பாலும் ஆதிமனிதன் இயற்கையுடன் கொண்டிருந்த மிக நெருங்கிய தொடர்புகளை வலியுறுத்துவதாக அமைந்திருந்தன.**

தொடர்ந்து புராண, இதிகாச, இலக்கிய, கதாபாத்திரப் பெயர்களும், கடவுள் பெயர்களும், சாதி, தொழில் முறைப்பெயர்களும், அரசர், தலைவர்கள், அதிகாரிகள் பெயர்களும் இடப்பெயரில் இணைந்து கொண்டது. இவற்றோடு வரலாற்று நிகழ்வுகள், பிறநாட்டு அரசியல் தொடர்புகள், சமய நடவடி க்கைகள், அபிவிருத்தி வேலைகள் என்பனவும் இடப்பெயர் ஆக்கத்தில் முக்கியபங்கு வகித்தன.

## இடப்பெயர் ஆய்வு

இடப்பெயர்களின் பொருள், பயன்பாடு, தோற்றவரலாறு, வகைப்பாடு என்பன பற்றி ஆய்வு செய்யும் துறை இடப்பெயர் ஆய்வு (Toponymy) எனப்படுகிறது. இடப்பெயர் ஆய்வானது வரலாறு, மொழியியல், தொல்லியல் போன்ற துறைகளுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. இவ்வாய்வு பல காலங்களுக்கு முன்னால் அந்நிலப்பரப்பில் வாழ்ந்த மனிதர்களின் இருப்பைப் பறைசாற்றுவதோடு அவர்கள் தொடர்பி லான பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளவும் நமக்கு உதவுகிறது.

தமிழர்கள் இடங்களுக்குப் பெயர் சூட்டுவதில் சில ஒழுங்குமுறைகளைக் கொண்டிருந்தனர். அவர்களால் சூட்டப்பட்ட இடப்பெயர்கள் 'எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே' என்பதைக் கருத்தில் கொள்க.

1. நீர்நிலைப்பெயர்கள் - குடமுருட்டி ஆறு, காட் டாறு, உப்பாறு, பெரியாத்துமுனை, நடுவூத்து, பரவிப்பாஞ்சான், பொற்கேணி, பேராறு, வட் வனாறு, கரிக்கட்டைமலையாறு, பாலம் போட் டாறு, ஊற்றடி, நெடுங்கேணி , தீனேரி , சாவாறு
2. நிலப்பெயர்கள் (நிலவியல்பு - நிலத்தோற்றம்) - பட்டிமேடு, கள்ளிமேடு, பெரியவர்ணமேடு, சின்னவர்ணமேடு, கரைச்சைத் திடல், மாகாமம், நெடுந்தீவு, குட்டிக்கரச்சை, முனைச்சேனை, பாரதிபுரம், சிப்பித்திடல், குஞ்சரடப்பன்திடல், சம்மாந்துறை, பிள்ளைகொல்லிமணல், வில்லுவெளி
3. தாவரப்பெயர்கள் - ஈச்சந்தீவு, ஆலங்கேணி, மாஞ்சோலை, மாஞ்சோலைச்சேனை, ஈச்சங் குளம், குறிஞ்சாக்கேணி, நடுப்பிரபந்திடல், நீர்நாவற்குளம், தாமரைவில், கண்டல்காடு, முள்ளிப்பொத்தானை
4. பறவைப்பெயர்கள் - மயில் தீவு, காக்காச்சிப்பித்திடல்,
5. விலங்குப் பெயர் - குரங்கு பாஞ்சான் , புலியுத்துக் குளம்,
6. கடவுட் பெயர்கள் - நாயன்மார்திடல், ஐயனார் திடல், பத்தினிபுரம், சிவசக்திபுரம், சுவாமிமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அரசர் அதிகாரிகள் பெயர்கள் - வெண்டரசன் குளம், பூவரசந்தீவு, மணியரசன் குளம், குஞ்சரடப்பன் திடல், பாண்டியன் ஊற்று
8. புராண இதிகாச இலக்கியப்பெயர்கள் - சூரன்கல்
9. தொழில்முறை, சாதிப்பெயர்கள் - வண்ணாத்திடல், கரையான் வயல், பிராமணர்கீத்து, தம்பட்டக்காரன் கீத்து, பிராமணமேடு, குருக்கள் மேடு. முதலியார் வயல். சின்னக் கரையான் வயல், வண்ணான் வயல், குயவனாறு, கொல்லன் மடு, பூசாரிவேட்டை
10. அரசியல், சமய, சமூக நடவடிக்கைகள் தொடர்புடைய பெயர்கள் - கோவில்குடியிருப்பு, தெலுங்கு நகர், பறங்கிக் கீத்து, புதுக்குடியிருப்பு, சமாவைத்ததீவு

மேற்கூறியசிற்றூர்ப் பெயர்களும் ஆறு, குளம், வயல் நிலங்களின் பெயர்களும் விரிவாக ஆராயப்பட வேண்டியவையாகும். இவ்வாறான ஆய்வுகள் இங்கு வாழ்ந்த மக்களின் இருப்பை உறுதிப்படுத்துவதோடு அவர்களது தொன்மையான வரலாற்றுப் பதிவுகளையும் வெளியுலகிற்கு கொண்டு வருவதற்கான சிறந்த வழிமுறையாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## தம்பலகாமம் ஊர்ப்பெயர் வரலாறு

கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீகக்கிராமம் தம்பலகாமம். வயலும் வயல்சார்ந்த மருதநிலப் பிரதேசம்தான் அதன்சிறப்படையாளம் என்றாலும் அதற்குச் சற்றும் குறைவில்லாத அளவில் கடல் மலை, காடு, குளம் போன்ற அனைத்து வளங்களையும் தன்னகத்தே நிறைவாகக் கொண்டமைந்த இயற்கை எழில் நிறைந்த பூமி தம்பலகாமம்.

மிக நீண்டகாலம் இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தம், திட்டமிட்ட குடியேற்றங்கள், பாரிய உள்நாட்டு வெளிநாட்டு இடப்பெயர்வுகள், இயற்கை அழிவுகள், படுகொலைகள், வன்செயல்கள் என்று பல்வேறுபட்ட காரணங்களால் மிக அதிகளவில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவுமொன்று.

'தம்பலகாமம்' என்ற பெயர் இன்றைக்குச் சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்பாகவே வழக்கில் இருந்துவரும் ஊர்ப்பெயர். இதனைப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட 'தம்பலகாமம் கல்வெட்டு' ஆதாரப்படுத்துகிறது. 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்த இக்கல்வெட்டில் 'தம்பலகாம ஊர்' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தம்பலகாமம் என்ற ஊரின் பெயர் காலத்துக்குக் காலம் இங்கு மேலாதிக்கம் செலுத்திய ஆட்சியாளர்களாலும், இலக்கிய விற்பன்னர்களாலும் மாற்றப்பட்டதை அறியக்கூடியதாக உள்ளது.

## 'தம்பலகாமப் பற்று'

இலங்கையில் ஐரோப்பியரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்னால் இப்பிரதேசத்தில் சுதந்திரத் தமிழ்ச்சிற்றரசாக இயங்கிய வன்னிபங்கள் இப்பிரதேசத்தின் பெயரினை 'தம்பலகாமப் பற்று' எனப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். பின்னர் அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் வன்னிபங்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு அவர்கள் நிர்வாகிகளாகச் செயற்பட்ட காலத்திலும் அப்பெயரையே பாவித்திருக்கிறார்கள். இலங்கை சுதந்திரமடைந்த காலம் வரை வன்னிபங்களின் முக்கிய ஆவணங்களில் அப்பெயர் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. தம்பலகாமப் பற்று என்பது இன்றைய தம்பலகாமப் பிரதேசத்துடன் கிண்ணியா, ஆலங்கேணி, கந்தளாய் போன்ற இடங்களை உள்ளடக்கிய பரந்த பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாயூர் தம்பலகாமம்

1917ஆம் ஆண்டுக்குரிய இறப்புத் தொடர்பான கள்ளிமேட்டுக் கல்வெட்டு 'தம்.கள்ளிமேடு' என இறப்பு இடம்பெற்ற இடத்தினைக் குறிக்கின்றது. தம்பலகாமத்தைச் சேர்ந்த கள்ளிமேடு என்பதனையே இது சுருக்கமாகச் சொல்கின்றது. இதன் மூலம் தம்பலகாமத்தில் இருந்த சிற்றூர்களை அடையாளப் படுத்தும் போது 'தம்' என்று அவற்றின் தாயூரான தம்பலகாமத்தைக் குறிக்கும் வழமை அக்காலத்தில் இருந்ததை இது உறுதிப்படுத்துகிறது.

இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட வீடு, வயல், காணி உறுதிகளிலும், நீதிமன்ற வழக்குகள் தொடர்பான தமிழ் ஆவணங்களிலும் 'திரு.தம்.கந்தளாய், திரு.தம்.கிண்ணியா, திரு.தம்.ஆலங்கேணி' போன்ற சொற்றொடர்களைக் காணலாம். அத்துடன் இன்று வழக்கொழிந்து போய்விட்ட 'புறோநோட்டு' என்றழைக்கப்பட்ட கடன் பத்திரங்களிலும் இவ்வகையிலேயே தம்பலகாமப்பற்றின் கீழிருந்த சிற்றூர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன.

## தமனதோட்ட 'Tamanatota'

1658 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்த்துக்கீசர் இலங்கைமீதான ஆதிக்கத்தினை இழந்த வேளையில் கண்டி இராச்சியம் திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










தம்பை நகரப்படலம் (செய்யுள் - 41 பக்கம் -364)

கரிய குவளைத் தளிர் மேய்ந்து
கடைவாய் குதட்டித் தேன் ஒழுக
எருமை கிடந்து மூச்செறியும்
எழிலார் தம்பை வள நாட்டில்
(குவளை – அல்லி)

> **"காலவோட்டத்தில் இனவன்முறை, இடப்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள் என்ற அலைக்கழிவுகளைத் தொடர்ந்து மீள் குடியேற்றம், வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்ற சுழல்களுக்குள் இக்காலகட்டத்தில் அண்ணாவிமார்களின் காலம் பற்றிய மீட்டுப்பார்ப்புகள் தம்பலகாமத்தில் அருகிப்போய்விட்டது."**

மீது தனது மேலாதிக்கத்தினைச் செலுத்தியது. அக்காலப்பகுதியில் கண்டி இராச்சியத்தில் பல மாகாணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று 'தம்பன் கடவை'. தம்பன் கடவையின் துறைமுக நகரமாக தம்பலகாமம் சில காலம் செயற்பட வேண்டி இருந்தது. கடல்வழி வணிகத்திற்கும், போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்பட்ட திருகோணமலையின் பகுதிகளில் ஒன்றாக தம்பலகாம குடாக்கடல் முக்கியத்துவம் பெற்றிருந்தமை இதற்கான காரண மாகும். கண்டி அரசின் மேலாதிக்கம் காரணமாக இப்பகுதி அவர்களால் 'Tamanatota' என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

## Tamblegam , Tampalagam

இதனைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தர், பிரித்தானியர் மேலாதிக்கத்தின் போது இப்பிரதேசம் உச்சரிப்பு (ஒலி) பிரச்சினையால் Tamblegam, Tampalagam போன்ற பெயர்களால் அழைக்கப் பட்டிருக்கிறது.

## 'தம்பை நகர்', 'தம்பலகமம்'

ஊரின் பெயர் ஆட்சியாளர்களால் மட்டுமல்ல அங்கு வாழ்ந்த அறிஞர்கள், இலக்கிய வாதிகள், சமூக அமைப்புக்கள் என்பனவற்றினாலும் மாற்றம் பெறுவதுண்டு. அந்தவகையில் 17 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் இவ்வூரின் பெயரினைப் பின்வருமாறு பதிவு செய்கிறது. திரிகோணாசலப் புராணம் 'தம்பை நகர்' என்றும் வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் அதனை 'தம்பலகமம்' என்றும் பதிவு செய்திருக்கிறது. 'தம்பை நகர்', 'தம்பலகமம்' எனத் தமிழ் மக்களால் இவ்வூர் அழைக்கப்பட்ட சமகாலத்திலேயே இப்பிரதேசத்தின் மீது அதிகாரம் செலுத்திய கண்டி, ஐரோப்பிய அரசுகள் 'Tamanatota' Tampalagam , Tamblegam என இப்பிரதேசத்தை அடையாளப் படுத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

## தம்பலகமுவ (Thambalagamuwa)

2014 ஆம் ஆண்டுக் குடித்தொகை கணக்கெடுப்புகளின்படி 17153 முஸ்லீம்களும் 7785 சிங்களவர்களும் 6232 தமிழர்களுமாக 31170 பேர் வாழ்கின்ற இப்பிரதேசம் இன்று தம்பலகமுவ (Thambalagamuwa) என்று அழைக்கப்படுகிறது. இப்பெயர் மாற்றம் சில தசாப்தங்களுக்கு முன்னால் செய்யப்பட்டு இன்றுவரை அரச நிர்வாக ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிரதேசத்தில் அடங்கியிருக்கும் 12 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒரு கிராமத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதனமான 'தம்பலகாமம்' என்ற பெயர் இன்றும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி சுமார் 75 வீதமான தமிழ்பேசும் (தமிழர்கள், முஸ்லிம்கள்) மக்கள் இப்பிரதேசத்தினை தம்பலகமம், தம்பலகாமம் என அழைக்கின்ற சமகாலத்திலேயே அரச நிர்வாக ஆவணங்களில் தம்பலகமுவ (Thambalagamuwa) என்று இப்பிரதேசம் அடையாளப்படுத்தப்படுவது கவனிக்கத்தக்கது.

## தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு

ஓர் ஊர்ப்பெயருக்கு அளிக்கப்படும் விளக்கம் முதலில் அப்பகுதியின் வரலாற்றாராய்ச்சியில் இருந்தே தொடங்கவேண்டும். அவ்வூரின் பெயர் ஆகப்பழைய ஆவணத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதைத்தான் முதலில் தேடவேண்டும் என்று கேரள நாட்டுப்புறவியல் ஆய்வாளர் பேராசிரியர் திரிவிக்ரமன் தம்பி அவர்கள் பதிவு செய்திருக்கிறார். அத்துடன் ஒருபோதும் ஒரு புராதன இடத்தின் பெயர் 'வைக்கப்பட்டது' என்ற கோணத்தில் ஆராயக்கூடாது என்றும் 'உருவாகிவந்தது' என்ற கோணத்திலேயே ஆராயவேண்டும் என்றும் சொல்கிறார் அவர். பெரும்பாலும் இடப்பெயர்கள் மக்கள் வழக்கிலிருந்து உருவானவையாகவே இருக்குமேயன்றி அறிஞர்கள் உருவாக்கியதாக இருக்காது என்பதுதான் அவர் கூற்றின் பொருள்.



தம்பலகமுவ என்ற பெயர் அரச ஆவணங்களிலும், பொது நிறுவனங்களிலும் வலுவாகக் காலூன்றி வரும் காலகட்டத்தில், புதிது புதிதாகத் தோன்றி வரும் புத்தர் சிலை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய வாசல்வரை வந்துவிட்ட சூழ்நிலையில் எண்ணூறு வருடப் பழமை வாய்ந்த தம்பலகாமம் கல்வெட்டு என்னும் சாசன ஆதாரத்தினை தம்பலகாமம் என்னும் வரலாற்றுப்புகழ் கொண்ட ஊரின் பெயர் ஆய்வின் ஆதாரமாகக் கொள்கிறது இக்கட்டுரை.

தம்பலகாமம் என்னும் ஊரின் பெயரினைக் குறிப்பிடும் முதலாவது தமிழ் ஆவணமான இக்கல்வெட்டு இன்றைக்கு சுமார் 800 வருடங்களுக்கு முற்பட்டது. இச்சாசனம் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. எனினும் இச்சாசனத்தில் அரசனின் பெயர் அடையாளங் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


தம்பலகாமம் கல்வெட்டின் மைப்படியான பிரதியினை ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் அதனை ஓர் அடி ஏழு அங்குல நீளமுள்ள கற்பலகைச் சாசனமாகப் பதிவு செய்கிறார். எல்லாமாகப் பதினொரு வரிகளைக்கொண்ட துண்டமாகி விட்ட தம்பலகாமம் கல்வெட்டில் முதல் நான்கு வரிகள் தெளிவற்று இருக்கிறது. அதன் ஐந்தாவது வரி முதலான சாசனப்பகுதி கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளதாகப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் வாசித்து ஆவணப்படுத்தி இருக்கிறார்.

5. உடையார் நிச்ச
6. யித்த ஜகதப்ப
7. கண்டன் தாநத்(து)
8. க்கு நிலையாக்(கித்)
9. தம்பலகாம ஊ
10. ரை நான் கெல்
11. லைக்கு தள எல்லை.

என்றமைகிறது கல்வெட்டின் வாசகங்கள். கல்வெட்டின் ஒன்பதாவது வரி (9. தம்பலகாம ஊ) ஊரின் பெயரினைத் தெளிவாக குறிப்பிடுகிறது. இதன் மூலம் இச்சாசனம் தம்பலகாமம் என்னும் ஊரின் பெயரினைக் குறிப்பிடும் முதலாவது தமிழ் ஆவணம் என்னும் சிறப்பினைப் பெறுகிறது. அத்தோடு புராதனமான இப்பெயர் ஏறக்குறைய 800 வருடங்களாக இடையறாது வழங்கி வருகின்றது என்பதற்கு இது ஆதாரமாக அமைந்துவிடுகிறது.

இன்றுள்ள பலர் காமம் என்பதனை இடத்தின் ஈற்றுப்பெயராக ஏற்றுக்கொள்ள சிரமப்படுகிறார்கள். காமம் என்ற இந்த ஈற்றுப்பெயர் மூல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தம்பலகாமம்**
**பிரதேச செயலாளர் பிரிவு**

*1* பாலம்போட்டாறு
*2* புகுக்குடியிருப்பு
*3* பொற்கேணி
*4* தம்பலகாமம்
*5* கோவிலடி
*6* மீரா நகர்
*7* சிறாச் நகர்
*8* முள்ளிப்பொத்தானை வடக்கு
*9* முள்ளிப்பொத்தானை கிழக்கு
*10* முள்ளிப்பொத்தானை
*11* கல்மிட்டியா தொற்கு
*12* கல்மிட்டியா வடக்கு

வடிவத்திலேயே மக்கள் செறிந்து வாழும் ஊர்களைக் குறிக்கும் வழக்கம் இன்று தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் இலங்கையில் உள்ள பல சிற்றுர்களின் பெயர்களில் அது இன்றும் நிலைத்திருக்கிறது.

பெரும்பாலான இலங்கைத் தமிழர் இடப் பெயர்கள் தமிழகத்து இடப்பெயர்க் கூறுகளுடன் ஒப்பிடக்கூடியதாகவும், அதேவேளை சில இடப் பெயர்கள் இலங்கைத் தமிழர் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதாகவும் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறான தனித்துவ அடையாளம் கொண்ட இடப்பெயர்கள் பல இலங்கைத் தமிழர் வரலாற்றின் தொன்மையை நிலைநாட்டும் உறுதியான சான்றுகளைத் தன்ன கத்தே கொண்டவையாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. அவ்வாறு தனித்துவ அடையாளம் கொண்ட இலங்கைத் தமிழர் இடப்பெயர்களில் 'காமம்' என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப் பெயர்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இலங்கையின் மாவட்ட ரீதியில் அவ்விடப் பெயர்கள் வருமாறு;

யாழ்ப்பாண மாவட்டம் - கொடிகாமம், வலிகாமம், வீமன்காமம்

முல்லைத்தீவு மாவட்டம் - பனங்காமம், அம்பாகாமம்

கிளிநொச்சி மாவட்டம் - தம்பகாமம்

அம்பாறை மாவட்டம் - இறக்காமம், சாகாமம் (திருக்கோவில்)

மட்டக்களப்பு மாவட்டம் - பழுகாமம், உறுகாமம்

மொனராகலை மாவட்டம் - கதிர்காமம்

பொலநறுவை மாவட்டம் - சந்தணகாமம் (இன்றைய கல்லோயா)

திருகோணமலை மாவட்டம் - தம்பலகாமம், உரகிரிகாமம், கிரிகண்டகாமம், மேன்காமம், வெல்காமம், மாகாமம்

மன்னார் மாவட்டம் - வலிக்காமம், முதலியான்காமம்

அனுராதபுர மாவட்டம் - அனுராதகாமம் (பழைய பெயர்),கணகாமம்


கண்டி - வத்துகாமம்

மகாவம்சம் - கும்பகாமம், நந்திகாமம், காணுகாமம் (மகாவம்சம் குறிப்பிடும் இவ்விடங்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவை என்று தெரியவில்லை)

இலங்கையின் பல மாவட்டங்களில் காணப்படும் 'காமம்' என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்கள் இலங்கைத் தமிழர் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதாகவும், இவை இலங்கை யில் தமிழர் வாழ்ந்த பிரதேசங்கள் முழுவதும் பரவி இருந்ததை ஆதாரப்படுத்துவதாகவும் அமைந்திருப் பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

காமம், கிராமம் என்ற இலங்கைத் தமிழர் இடப்பெயர்ச் சொல் சமஸ்கிருத '(g)கிராம' என்ற சொல்லிலிருந்து உருவானது என்ற வாதம் பன் னெடுங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. சமஸ்கிருத காமா என்பதே சிங்களத்திலும் (கம, கமுவ), பாலி போன்ற பரகத மொழிகளிலும் பொது வான வேர் கொண்ட சொல்லாகத் திகழ்கின்றது என்பது இதற்கு வலுச்சேர்க்கும் கருத்தாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Source link - http://www.pubad.gov.lk/web/index.php?option=com_findnearest*

கொள்ளப்படுகிறது. ஆனால் தமிழ்மொழியியல் அறிஞர்கள் காமம் என்ற திராவிடச்சொல் தமிழில் இருந்து வடசொல் ஆனது என்கிறார்கள்.

'கமம் நிறைந்து இயலும்' என்றார் தொல்காப்பியர் (தொல். சொல். உரி. 355) கமம் என்ற சொல்லுக்கு பொருள் நிறைவு என்பதாகும். சங்கத் தொடரில் வரும் 'கமஞ் சூல் மாமழை' (திருமுருகாற்றுப்படை) என்பதற்கு சூல்நிறைந்த முகில் என்பதே பொருள். அதோடு அன்பின் நிறைவையே காமம் என்று பழந்தமிழர்கள் அழைத்தனர். 'காமம் மிக்க கழிபடர் கிளவி' (நற்றிணை) என்று தூது இலக்கியம் அதைத்தான் சொல்கிறது.

'கமம்' என்ற சொல்லில் இருந்துதான் 'காமம்' என்ற சொல் உருவானது. கமம் என்பதை உரிச்சொல்லடியாகக் கொண்டு முதல் நீண்டு வழங்கிய பெயர்ச்சொல்லே காமம்.

காமம் kāmam (அக. நி.) - 1. Village ஊர்.
2. Inhabitant குடி.

இன்று இலங்கைத் தமிழ் இடப்பெயர்களில் வரும் காமம் என்ற ஈற்றுச்சொல் சிற்றூரைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். மக்கள் அன்பாகக் கூடி மனநிறைவுடன் வாழும் இடத்தினைக் குறிக்க இது பயன்படுகிறது. எனவே இடப்பெயர்களில் வரும் காமம் என்ற ஈற்றுச்சொல் காதல் அல்லது பாலியல் சம்பந்தமானது அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

இந்த அடிப்படையில் சேற்று வயல் நிறைந்த விவசாயக் கிராமமான தம்பலகாமம் என்னும் ஊரின் இடப்பெயரினை நோக்கினால்.

'தம்பலகாமம்' என்பது, ( தம்பல் காமம் )

'தம்பல்' - சேறு (தம்பலடித்தல் - பயிரிடுதல், உழவு செய்தல்), (தம்பலாடல் - சேறடித்தல் அல்லது சேறாடல் )


'காமம்' - ஊர் (1. Village ஊர். 2. Inhabitant; குடி.)

'தம்பலகாமம்' என்பது தம்பல் x காமம் என்ற இரு தமிழ்ச்சொற்களின் புணர்நிலைத் தொடராக அமைந்து அழகாகப் பொருளுணர்த்துவதை அறியலாம். இங்கு 'தம்பல்' என்பது சேறு என்னும் பொருளில் வருகிறது. தம்பல் என்பதனை அடிச்சொல்லாகக் கொண்டுவரும் தம்பலடித்தல் என்பது பயிரிடுதல், உழவு செய்தல் என்பனவற்றைக் குறிப்பதாகவும், தம்பலாடல் என்பது சேறடித்தல் அல்லது சேறாடல் என்ற பொருளுணர்த்துவதாகவும் இருக்கிறது. இதன் மூலம் 'தம்பல்' என்பது தம்பலகாமத்தின் நீர்வள, நிலவளச் சிறப்பை நமக்கு உணர்த்தி நிற்கிறது. காமம் என்பது மக்கள் நெருங்கி வாழும் ( உறு - ஊர் போல் ) இடத்தினைக் குறிக்கப் பயன்பட்டிருக்கிறது. எனவே 'தம்பலகாமம்' என்ற ஊர்ப்பெயர் காரணப்பெயராக அமைந்து வரலாற்றுக் காலம் முதல் வழங்கி வருவதை அறியலாம்.

தற்போதுவரை கிடைக்கப்பெற்றிருக்கும் வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில் இவ்வூரின் பெயரை வரலாற்றாதாரம் கொண்ட புராதனமான பெயரான தம்பலகாமம் என அழைப்பதே பொருத்தமானது என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

வரலாற்றை அறிதலும் அதனைப் பேணிக் காத்தலும் வெறுமனே பழம்பெருமை பேசுவதற்காக அல்லாமல் நமது முன்னோர்களின் பண்பாட்டு விழுமியங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் சென்று அதனூடாக நமது சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாய் இருத்தல் வேண்டும் என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா ஜெயராசா

# மலையக இலக்கியத்தின் பலமான தளத்துக்கு வளம் சேர்த்த

# ஏ.பி.வி.கோமஸ்



தமிழ் இலக்கிய வெளியில் மலையக இலக்கியம் தனித்துவமான நீட்சியைக் கொண்டுள்ளது. மலையக இலக்கியம், தேசிய இலக்கியத்தின் தனித்துவமான அடையாளங்களுடன் எழுகோலம் பெற்று நிமிர்வதற் குரிய பங்களிப்பைத் தந்தவர்களுள் ஒருவர் திரு.ஏ.பி.வி.கோமஸ்.

தமிழ்ச் சூழலிலே பின்காலனிய இலக்கியப் பரவலைக் கண்டறிவதற்குரிய தளமாக முன்னணி வகிப்பது மலையக இலக்கியமே. காலனித்துவத்தின் மனித உழைப்புச் சுரண்டலின் நேரடியான அழுத்தங்களுக்கு உட்பட்டது மலையகம் தான். இலங்கையின் ஏனைய பிரதேசங்களைக் காட்டிலும் மலையகமே அந்த அழுத்தங்களைச் சுமந்து நொந்தது.

நவீன திறனாய்வில் விதந்து பேசப்படும் 'பின் காலனிய இலக்கியம்' இலங்கையின் மலையக இலக்கியத்தின் சேர்மானம் இன்றி நிறைவு கொள்ளாது என்பதை உறுதியெழக் கூறலாம்.

மலையக இலக்கிய மரபு கோ.நடேசய்யர், சி.வி.வேலுப்பிள்ளை, கே.கணேஸ், சக்திபாலஐயா, முதலியோரின் பலமான கலைத்தளத்துடன் மேற்கிளம்பியது.

மலையகக் கல்வி நிலையும் இலக்கிய உருவாக்கமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய செயற்பாடுகள். காலனித்துவத்தின் இருமை நிலைப்பட்ட கல்விச் செயற்பாடு மலையகத்தில் ஆழ வேரூன்றியிருந்தது. ஒருபுறம் வளர்ச்சி பெற்றிருந்த நகர்புறப் பள்ளிக் கூடங்களும், இன்னொரு புறம் ஆழப் பின்தங்கியிருந்த தோட்டப்புறப் பள்ளிக்கூடங்களும் என்ற இருமை நிலை நெடுங்காலமாக நீடித்திருந்தது.

வசதிமிக்கவர்கள் நகரப்புறப் பள்ளிக்கூடங்களிலே தரமான கல்வியைப் பெற்றனர். பெரும்பாலான தொழிலாளர்களின் பிள்ளைகள் தோட்டப்புறப் பள்ளிக்கூடங்களில் ஓரளவு எண் எழுத்து, வாசிப்பு ஆகியவற்றை எதுவித உளவியல் பிரயோகமும் அற்ற கடினமான சூழலிலே கற்றுக்கொண்டனர். நாட்டார் கலைகளுடனும் சடங்குகளுடனும் உறவாடிக் கற்றுக் கொள்ளும் முறைசாராக் கல்வியே அவர்களிடத்து மேலோங்கியிருந்தது.

தொடக்ககால மலையக எழுத்தாளர்கள் தரமான கல்வியூட்டத்துடன் ஆங்கில இலக்கியங்கள் பற்றிய ஆழ்ந்த புரிதலும் கொண்டிருந்தனர். அவர்களிடத்துக் காணப்பெற்ற வினையாற்றல் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்புத்தளம், நவீன இலக்கியங்கள், இந்திய விடுதலைப் போர், காலனித்துவ விரிவாக்கம் முதலியவை தொடர்பான அறிக்கைக் கோலங்களோடு உறவாட வைத்தது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களது அவலமான வாழ்க்கையையும் நாளாந்தம் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் ஒடுக்குமுறை யின் நுண்ணிய அலகுகளையும் அவர்கள் இலக்கிய வெளிக்குக் கொண்டுவந்தனர். அத்தகைய பின்புலத்தில் இருந்து மேற்கிளம்பியவரே ஏ.பி.வி.கோமஸ்.

மலையக மக்களின் வாழ்க்கையில் பன்முக மாற்றங்களை வருவிப்பதற்கு அவரும் பன்முக வகிபாகங்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எழுத்தாளராக, கவிஞராக, நாடக ஆசிரியராக, நடிகராக, ஆற்றல்மிகு மேடைப் பேச்சாளராக










வினையாற்றல்மிக்க கற்பித்தலை முன்னெடுத்த நல்லாசிரியராக, பள்ளிக்கூட அதிபராக, சமூக சேவையாளராக அவரது வகிபாகங்கள் பன்மை நிலைப்பட்டிருந்தன.

பன்மைச் செயற்பாடுகள் வாயிலாக மக்களிடத்து நேர்நிலை மாற்றங்களை உருவாக்குதல் அவரது இலக்காக இருந்தது.

இவர் திரு.எஸ். கோமஸ், திருமதி. ஜெயம்மாள் கோமஸ் ஆகியோரின் இளைய புதல்வர். அவரது கல்வி பல்வேறு பள்ளிக்கூடங்களுடன் தொடர்புடைய பன்மைநிலை அனுபவங்களுடன் இணைந்தது. வளர்நிலையில் அவர் பல நிலை வகிபாகங்களை ஏற்பதற்குரிய வளமான பயிற்சிகளும் அவற்றால் கிடைக்கப்பெற்றன.

பொரல்லை சகல புனிதர் கல்லூரி, தெமட்டகொட புனித ஜோன்ஸ் கல்லூரி, கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரி, கோட்டை கிறிஸ்தவக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்வி கற்றவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கல்விகற்ற காலத்தில் பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன் முதலாம் அறிஞர்களுடன் உறவாடியதோடு அவர்கள் தயாரித்த 'துரோகிகள்' மேடை நாடகத்திலும் நடித்தார். அந்த நாடகம் இலங்கையின் முக்கிய நகரங்களில் மேடையேற்றப்பட்டமை ஒரு முக்கியமான செய்தி.

இன்னொரு முக்கியமான செய்தி பின்னாளில் பேராசிரியர்களான க.கைலாசபதியும், கா.சிவத்தம்பியும் அவருடன் நடித்திருந்தமையாகும். அவர்களுடனான நட்பும், ஊடாட்டங்களும், பேராதனை தமிழ்ச் சங்கப் பின்புலத்தில் நிகழ்ந்த கருத்தாடல்களும் கோமஸ் முன்னெடுத்த கலை, இலக்கியச் செயற்பாடுகளுக்கு வளமாக்கிகளாய் அமைந்தன.

கோமஸ் அவர்களின் ஆசிரிய வாழ்க்கை கற்பித்தலையும் கடந்து, பன்முகச் சமூகப்பணி களையும் தழுவியதாக அமைந்தது. கல்விவழி நிகழ்த்தப்படக் கூடிய சமூகமேனிலை யாக்கம் பற்றிய உற்றுணர்வுடன் செயற்பட்டமையை அவரது எழுத்துகள் வாயிலாகவும் கலைச் செயற்பாடுகள் வழியாகவும் அறிந்துகொள்ளலாம்.

எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் கல்லூரி, கேகாலை புனித மரியாள் வித்தியாலயம், மாவனல்லை ஸாஹிரா வித்தியாலயம் முதலியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றி பின்னர் மாத்தளை மந்தண்டாவளை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளத்தில் எழும் எண்ணங்களைக் கள்ள மில்லாது வெளியிடுவதே ஓர் உன்னத கலையாகும். அவ்வாறு செய்வதற்குத் நமக்குக் கலையுணர்வு தேவை. ஆனால், இந்த கலையுணர்வு பிறப்பால் மட்டும் வந்து விடுவதில்லை. முயன்றால் நம்மால் முன்னுக்கு வரும் அளவுக்கு நன்றாக வளர்த்துக் கொள்ள முடியும்".

மலையகக் கல்வியில் மாற்றத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்திய அதிபர்கள் வரிசையிலே அவருக்குத் தனியிடம் உண்டு. ஹட்டன் பிரதேசப் பெருந்தோட்டச் சிறார்களின் கல்வியில் முன்னெடுப்பை மேற்கொண்ட திருவாளர்கள் இரா. சிவலிங்கம், கல்விவழியான சமூக அசைவியத்தை முன்னெடுத்த செந்தூரன், கண்டிச் சூழலிலே விளிம்பு நிலையில் வாழ்ந்த பெருந்தோட்டச் சிறார்களுக்குக் கல்வி வலுவூட்டிய அசோகா நடராஜா முதலியோர் வரிசையிலே மாத்தளைப் புலமும் கல்வியில் மேம்பாடு கொள்வதற்குரிய அறிகைச் செயற்பாடுகள் அவரால் முன்னெடுக்கப்பட்டன.

கல்விச் செயற்பாடுகள் பொறிமுறைப் பாங்கானதாகவும் மாணவரை நெட்டுருச் செய்யும் முயற்சிகளுக்குத் தள்ளுவதாகவும் அமைவதை நிராகரித்த கோமஸ், மலையக இளைஞர்களிடத்து ஆக்கச் சிந்தனையை வளர்க்கும் நோக்கிலும் அவர்களை எழுதத் தூண்டும் இலட்சியத்துடனும் 'எழுத்தார்வம் உள்ளவர்க்கு' என்ற தொடரை எழுதினார். அவற்றை நூல் வடிவிலே தொகுத்து உயன்வத்தை 'ப்ரிய நிலா' வெளியீடாக்கினார்.

அந்நூலின் முன்னுரையில் உயன்வத்தை றம்ஜான் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"ஆக, இந்நூலைப் படித்து இளைய சமூகத்தினர் மத்தியில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரேனும் எழுத்தை ஆளும் ஆற்றலைப் பெற்றுச் சமூகத்துக்கு நல்லதைச் சொல்வார்களேயானால் அதுவே நாம் பெறும் மனநிறைவாகும்"

எழுத்தார்வமுள்ளவர்களுக்கு வழங்கும் சில யோசனைகளின் தொடக்கத்தை கோமஸ் பின்வருமாறு அமைத்துள்ளார்.

"உள்ளத்தில் எழும் எண்ணங்களைக் கள்ள மில்லாது வெளியிடுவதே ஓர் உன்னத கலையாகும். அவ்வாறு செய்வதற்குத் நமக்குக் கலையுணர்வு தேவை. ஆனால், இந்த கலையுணர்வு பிறப்பால் மட்டும் வந்து விடுவதில்லை. முயன்றால் நம்மால் முன்னுக்கு வரும் அளவுக்கு நன்றாக வளர்த்துக் கொள்ள முடியும்".

சிறுவர்களதும் இளைஞர்களதும் அறிகைப் பலத்தை வளர்ப்பதன் வாயிலாக மலையக வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவர முனைந்து, 1960 ஆம் ஆண்டில் 'தமிழமுதம்' என்ற இதழை வெளியிட்டார். இளைஞர்களின் கவிதையாற்றலை வளர்க்கும் நோக்கில் கவியரங்கப் பண்பாட்டினை வளர்த்தெடுக்க முயன்றார். தாமே கவிதைகளை எழுதி முன்மாதிரியை உருவாக்கியதுடன், கவியரங்குகளுக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்று கவிதைச் சுவையை வளர்த்ததுடன், கவிதையை அளிக்கை செய்யும் திறனையும் மாணவருக்குக் கற்பித்தார்.

கோமஸ் அவர்கள் ஈடுபாடு கொண்ட துறைகளுள் ஒன்றாக மலையக நாட்டார் இலக்கியம் அமைந்தது. நாட்டார் பாடல்களையும் கதைகளையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபாடு கொண்டார்.

நாவல் எழுதும் ஆற்றலும் கிராமிய இலக்கிய ஈடுபாடும் இணைந்த வகையில் அவர் மேற்கொண்ட பரிசோதனை வடிவமாக "அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்" குறுநாவல் அமைந்தது. கண்டி கல்கின்ன தமிழ் மன்றத்தால் அந்நூல் 1988 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

அந்நூலின் திறவுரையில் மாத்தளை சோமுவின் பதிவு பின்வருமாறு அமைந்துள்ளது.

"தேசிய இலக்கியத்தில் மலையக இலக்கியத்தைச் சேர்த்து வைப்பதற்கு மலையக இலக்கியத்துக்குக் கிடைத்த புதிய நம்பிக்கை திரு.ஏ.பி.வி. கோமஸ் அவர்களின் 'அங்கமெல்லாம் நெறஞ்சம் மச்சான்' மலையகத்தைப் பொறுத்தவரை புதிய முயற்சியாகவே மலர்ந்துள்ளது."

குறுநாவல் வழியாக வெளியிட முனைந்த மனவெழுச்சிகளைப் பொருத்தமான நாட்டார் பாடல்களுடன் இணைத்துக் கதை பின்னும் செயற்பாடு, ஆரம்ப நிலை வாசகரையும் ஈர்க்கும் எடுத்தியம்பல் நுட்பமாகவுள்ளது. அதில் இடம்பெற்ற ஓர் எடுத்துக்காட்டு வருமாறு.

"முறைத்துப் பார்த்தான். உம், ஒன்றுமே நடக்கவில்லை. ஆதலின் கோபத்தை வெளியிட வேண்டுமே! ஏதாவது சொல்ல வேண்டும் என்று நினைத்தான். உடனே கோபம் வந்ததுபோல் முகத்தைச் சுழித்துக்கொண்டு சொல்லுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக் கொழுந்துக்காரி**
**மடமடத்த சேலைக்காரி**
**மடத்தனத்த விட்டுப்புட்டு**
**குடித்தனத்தைப் பாரடி கண்ணு**

ஆமாம் என்னதான் கோபத்தைக் காட்டிக் கொள்ள நினைத்தாலும் தன்னை அறியாமலே அந்தக் 'கண்ணு' என்ற சொல்வாயில் வந்துவிட்டது." (ப.10)

நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் அவரால் எழுதப்பட்டன. (எஸ்.எம். ஹனீபா, 1988) "வாழ்க்கையே ஒரு புதிர்" என்ற அவரது சிறுகதை நூலும் வெளிவந்துள்ளது. 'துரைவி' பதிப்பகத்தினர் முப்பத்து மூன்று மலையக எழுத்தாளர்களின் சிறுகதைகளை உள்ளடக்கிய மலையகச் சிறு கதைகள் தொகுப்பினை 1997 ஆம் ஆண்டில் வெளியிட்டனர்.

மலையகச் சிறுகதையாசிரியர்கள் பற்றிய ஒரு நீள்முகக்காட்சியைத் தந்த பயனுள்ள ஆக்கமாக அது அமைந்துள்ளது. அதற்குரிய முன்னுரையை எழுதிய தெளிவத்தை ஜோசப் நீள்முகக்காட்சி யைச் செப்பனிட்டுத் தந்துள்ளார். அதில் ஏ.பி.வி. கோமஸ் அவர்களின் சிறுகதையும் இடம் பெற்றுள்ளது.

'அவலம்' என்ற அந்தச் சிறுகதை மனோரதியச் சித்திரிப்பிலே தொடங்கி நடப்பியல் வாழ்வுக்குள் நுழைகின்றது. மனோரதியப் புனைவு பின்வருமாறு அமைகின்றது.

"பொல பொலவென்று விடிந்துகொண்டிருந்தது. பொங்கல் புதுநாள் பூத்துக்கொண்டிருந்தது. பச்சைப் புடவையால் போர்த்தப்பட்டிருந்த விம்மிப் புடைக்க மல்லாந்து படுத்திருந்த மங்கை நல்லாளைப் போன்று காட்சியளித்த தேயிலைச் செடிகளால் தெரியாமல் ஆக்கப்பட்டிருந்த பச்சைப்போர்வையில் துயில்கொண்ட மலைச் சரிவுகளை அப்பிக்கிடந்த இருள் திரையை அகற்றிக் கொண்டிருந்தது. ஆதவனின் பொற்கிரணங்கள்." புவியியலும் இடநிலையமும், மாத்தளை நக்கிள்ஸ் மலைத் தொடரும் அவரது ஆக்கங்களிலே பல நிலைகளில் இடம் பெற்றுள்ளன.

மலையக இலக்கியத்தின் ஒரு சிறப்புப் பிரிவாக அமைவது கட்டுரை இலக்கியம். ஆனால் அத் துறையானது இன்னமும் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவில்லை. கோ.நடேசய்யர், கே. கணேஸ், சி.வி.வேலுப்பிள்ளை, இரா.சிவலிங்கம், செந்தூரன், சாரல் நாடன், தெளிவத்தை ஜோசப், மாத்தளை சோமு, மொழிவரதன், அந்தனி ஜீவா, பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பேராசிரியர் மூக்கையா, வாமதேவன், லெனின் மதிவாணன் என்றவாறு மலையகக் கட்டுரை இலக்கியத்தை வளம்படுத்தியவர்களின் பட்டியல் நீண்டு செல்லும்.

மலையகக் கட்டுரை இலக்கிய வளர்ச்சியில் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்த ஒருவர் ஏ.பி.வி.கோமஸ். பல்வேறு தலைப்புகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகளை அவர் எழுதியதான தகவலை அந்தனி ஜீவா பதிவு செய்துள்ளார். (1988)

கோமஸ் அவர்களின் முக்கியமான ஓர் ஆளுமைப் பரிமாணம் ஆங்கில நூல் வாசிப்பு. ஆங்கில மொழி வாயிலாக அவர் திரட்டிக்கொண்ட அறிவுக்களஞ்சியத்தை தாம் எழுதிய கட்டுரைகள் வாயிலாக தமிழுக்கு அறிமுகம் செய்தார். அவரது கட்டுரைகள் வளம் பெறுவதற்கு ஆங்கில மொழி வாயிலான ஆழ்ந்த வாசிப்பு துணை செய்தது.

சுதந்திரன், வீரகேசரி, தினகரன், முதலாம் இதழ்களில் அவரின் எழுத்தாக்கங்கள் பெருமளவில் வெளிவந்தன. தமது துணைவியுடனும் இரு ஆண் மற்றும் இரு பெண் பிள்ளைகளுடன் வாழ்ந்த அவர் தமது தாயார் மீது கொண்ட மீளா அன்பு காரணமாகத் தாயாரின் பெயராகிய ஜெயம் என்பதைத் தமது புனைப் பெயராக்கி நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதினார்.

எழுத்து இதழோடு தமிழகத்தில் எழுச்சி கொண்ட புதுக்கவிதை இயக்கம் அவர் மீது செல்வாக்குச் செலுத்தியமையால், அத்தகைய கவிதை முகிழ் கோலத்துடன் அவரும் இணைந்து கொண்டார்.

அவரிடத்துக் காணப்பெற்ற நாட்டார் இலக்கியங்களினதும் இசையினதும் செல்வாக்கு கள் அவரின் கவிதைகளிலே பல நிலைகளிலே ஊறியிருந்தமையால் கவியரங்க அளிக்கைகள் சுவையும், கவர்ச்சியும், கொண்டிருந்ததுடன் கேட் போர் தாமும் மீளப்பாடி மகிழும் இயல்புடன் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அது அவருக்குரிய கவிதை மீட்பு வெற்றியாகின்றது.

மலையக இலக்கிய வளர்ச்சியில் ஏ.பி.வி. கோமஸ் அவர்களின் பரவலான எழுத்துகள் வளமான பரிமாணங்களைக் கொடுத்த வண்ணமுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நூற்றாண்டு காலம் கல்விப் பணி செய்த கரவை

# விக்னேஸ்வரக் கல்லூரி

## தோற்றமும் வளர்ச்சியும்

■

**வ.செல்வராசா**
ஓய்வு நிலை மாகாணக்கல்விப் பணிப்பாளரும்,
முன்னாள் அதிபரும்

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசம் தனக்கெனப் பல தனித்துவ குணாம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. இப்பிரதேசத்தில் கரவெட்டிப் பகுதி மிக அகன்ற நிலப்பரப்பை உடையது. கரணவாய், கப்பூது, நவிண்டில், வதிரி, துன்னாலையின் ஒரு பகுதி முதலானவை கரவெட்டியென்ற முகவரியில் அடங்கினாலும், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மேற்கு, கரவெட்டி மத்தி ஆகிய கிராமசேவகர் பிரிவுகளையே கரவெட்டியெனக் குறிப்பிடுவது வழக்கம். ஒல்லாந்தர் காலத்தில் கரவெட்டி உள்ளிட்ட பகுதிகளைக் கட்டைவேலிக் கோயிற்பற்று என்றே அழைத்தனர். ஒல்லாந்தர் காலத்திலே கரவெட்டி யென்ற பெயர் வழக்கிலிருந்தமையைக் காண முடியும். ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் கரவெட்டியில் வாழ்ந்த வேலாயுத முதலியார் மீது கரவைவேலன் கோவையைப் பாடியுள்ளார். வேலாயுத முதலியார் மரபில் வந்த சித்தமணியமென்று அழைக்கப்படும் சிற்றம்பல முதலியார் கரவெட்டியிற் பல பாட சாலைகளை நிறுவினார். சித்த மணியத்தினால் நிறுவப்பட்ட மாணிக்கவாசகர் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விக்னேஸ்வரக் கல்லூரி, சரஸ்வதி வித்தியாலயம், விநாயகர் வித்தியாலயம் முதலியன கரவெட்டிப் பகுதியில் கல்விப்பயிரைக் காத்து வளர்த்த நிறுவனங்களாகும்.

திரு.வீரவாகு சிற்றம்பலம் அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே இந்து கலாசாரச் சூழலில் ஆங்கிலமொழி மூலம் பாடசாலை யொன்றின் அவசியத்தையுணர்ந்து 1917 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நுகவில் வயல்களுக்குக் கிழக்குப் புறத்தில் அமைந்திருந்த சின்னக்குட்டி கந்தப்பு என்பவரின் காணியில் விக்னேஸ்வரக் கல்லூரியை நிறுவினார். ஆரம்பத்தில் கிடுகுக் கொட்டிலிலேயே இப்பாடசாலை இயங்கியது. 06.10.1917 இல் அக்கால வடமாகாண அரசாங்க அதிபராகவிருந்த திரு.பி.எஸ்.ஹோஸ்பேக் (B.S.Horsberg) புதிய கட்டட அமைப்புகளுக்கு அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்து நிரந்தர சுண்ணக்கற் கட்டடங்கள் பல 1936 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்டன. இவ்வகையிற் கரவெட்டிப் பிரதேசத்தில் இந்து கலாசார பாரம்பரியத்தை வேரூன்ற வைத்த பெருமைக் குரியவராக சித்த மணியம் அவர்கள் திகழ்ந்தார்.

### மகுட வாசகம்

உண்மை வெல்லும் TRUTH TRIUMPHS

### நோக்குக் கூற்று

எம்மை நாடி வரும் மாணவர் சமுதாயத்தை உள்வாங்கி, அவர்களது தேர்ச்சிகளை மேலும் விருத்தி செய்வதே எமது நோக்குக் கூற்று ஆகும்.

### தூர நோக்கு

மாறிவரும் உலகிற்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கி அதனை எதிர் கொள்ளக்கூடிய மாணவர் சமுதாயத்தை தோற்றுவித்தலே எமது தூரநோக்கு ஆகும்.

## கல்லூரியின் மகுடவாசகமும் இலச்சினையும்

கரவெட்டியின் மையப் பகுதியில் அமைந்த இப்பாடசாலை உண்மை வெல்லும் (Truth Triumphs) என்னும் உயரிய மகுடத்தைத் தனது உயிர் நாடியாகக் கொண்டது. இக்கல்லூரியின் இலச்சினையின் மேற்பகுதியில் பாடசாலையின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கீழ்ப்பாகத்தில் கல்லூரியின் அமைவிடமான கரவெட்டி பொறிக் கப்பட்டுள்ளது. கல்லூரியின் பெயரை இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கரங்கள் தாங்கி நிற்கின்றன. இவ்விரு கரங்களும் நான்கு முனைகளைக் (விரல்கள்) கொண்டுள்ளன. ஒரு பாடசாலையின் பிரதான அங்கங்களான அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய நான்கையும் இவை குறித்து நிற்கின்றன. இலச்சினையின் மத்திய பகுதியில் மேற்பாகத்தில் உண்மை வெல்லும் என்ற கல்லூரியின் உன்னத மகுட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் இறைவனின் அடையாளமான பூரண கும்பமும், அருகே சுடர்விடும் மங்கல விளக்கும், அதன் கீழ் கல்வியைக் குறிக்கும் வகையிலான நூலொன்றும் உள்ளன. கல்வியறிவைப் பெருக்குவதனூடாக அறிவுச் சுடரை பிரகாசமாக்கி உண்மையை உய்த்துணர முடியுமென்பதை இவை குறித்து நிற்கின்றன.





## முகாமையும் அதிபர்களும்

1917 ஆம் ஆண்டு கல்லூரி நிறுவப்பட்ட காலத்தில் முதலாவது முகாமையாளராக சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை அவர்கள் கடமையாற்றினார். 1920 ஆம் ஆண்டு தாபகர் சித்த மணியத்தின் மைத்துனரான இராசவாசல் முதலியார் கந்தப்பு சின்னத்தம்பி அவர்கள் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவ்வாண்டில் இக்கல்லூரியொரு ஆங்கிலப் பாடசாலையாக அரசாங்கத்தாற் பதிவு செய்யப்பட்டது. திரு.க.சின்னத்தம்பி முகாமையாளராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் கல்லூரி வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணித்தது.

1917 – 2017 வரையான நூற்றாண்டு காலத்தில் இக்கல்லூரியில் 17 பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். இவ்வரிசையில் கல்லூரியின் முதலாவது அதிபராக நவிண்டிலைச் சேர்ந்த V.K.கிருஷ்ணபிள்ளை அவர்கள் பதவியேற்றார். சுமார் ஆறு ஆசிரியர்களின் உதவியோடு பாடசாலையை இவர் வளர்ச்சிப் பாதையிலிட்டுச்சென்றார். V.K.கிருஷ்ணபிள்ளை, பின்னர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபராகவும் பிற்காலத்தில் வட மாநிலப் பிரதம கல்வியதிகாரியாகவும் சேவை யாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ்வதிபரை நினைவு கூரும் வகையில் இல்ல விளையாட்டுப் போட்டியில் கிருஷ்ணபிள்ளை இல்லமென மஞ்சள் இல்லத்திற்குப் பெயரிடப் பட்டுள்ளது.

கல்லூரியின் அதிபர்கள் வரிசையில் தென்னிந்தியாவைச் சேர்ந்த மூவர் அதிபர்களாகக் கடமையாற்றினர். இவர்களில் இரண்டாவது அதிபராகக் கடமையாற்றிய K. இராமசாமியும் தொடர்ந்து கடமையாற்றிய K.P அச்சுதன்பிள்ளையும், நான்காவது அதிபராகக் கடமையாற்றிய K.G. பத்மநாத பிள்ளையும் அடங்குகின்றனர் K. இராமசாமி அதிபராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் ELSC, S.S.L.C வகுப்புகளில் மாணவர் தொகை அதிகரித்ததுடன் வகுப்பறைகளும் அதிகரிக்கப் பட்டன.

1928 இல் K.P.அச்சுதன்பிள்ளை அதிபராக நியமிக்கப்பட்டார். இக்காலப்பகுதியில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மூவரும், சுதேசிகளான மூவரும் ஆசிரியர்களாக இணைந்தனர். 1920 ஆம் ஆண்டு மாணவர் பாராளுமன்றம் எனும் மாணவர் மன்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் மாணவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், பிரதம அமைச்சர் ஆகியோர் நியமிக்கப் பட்டனர். இவ்வமைப்புமுறை 2017 ஆம் ஆண்டு

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் சாரணியம், கரப்பந்தாட்டம் என்பனவும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டன. தாண்டிக்குளத்திற்கு அருகாமையில் விளையாட்டு மைதானமும், வறிய மாணவர்களுக் கான இலவச விடுதியும் நிருமாணிக்கப்பட்டன.

கல்லூரியின் 5 ஆவது அதிபராகக் கடமையாற்றியவர் தும்பளையைச் சேர்ந்த K.சிவப்பிரகாசம் ஆவார். கல்லூரி இவரது காலத்திற் பல்வேறு துறைகளிலும் பெருவளர்ச்சி கண்டது. இவர் காலத்தில் முகாமையாளராகக் கடமையாற்றிய K.C நடராசாவின் துணையுடன் பாடசாலையைப் பல்வேறு துறைகளிலும் வளர்த்தார். H.S.C கலை, விஞ்ஞான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவரது காலத்தில் கல்லூரியின் கரப்பந்தாட்ட அணி அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றதுடன் கட்டுரை, பேச்சுப் போட்டிகளிலும் தேசிய மட்டத்திற் சாதனைகள் நிலை நாட்டப்பட்டன. K. சிவப்பிரகாசம் அதிபராக இருந்த காலப்பகுதியில் விஞ்ஞான ஆய்வுகூடம் (120'x26'), மண்டபம் (60'x30'), தொழில்நுட்ப மனையியற் கூடம், நூல் நிலையம் முதலானவையும் கட்டப்பட்டன.

K. சிவப்பிரகாசம் அவர்களைத் தொடர்ந்து வி.சோமசுந்தரம் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் செ.கதிர்காமநாதன், செ.சுவாமிநாதன், ஆகியோர் பல்கலைக்கழகம் சென்றனர். செ.கதிர்காமநாதன் காலத்தால் அழியாத எழுத்தாளராக எம் மண்ணில் இன்றும் நினைவு கூரப்படுகின்றார்.

வி.சோமசுந்தரம் அவர்களைத் தொடர்ந்து பண்டிதர் பொன். கணேசன் அதிபராக நியமிக்கப் பட்டார். இக்காலத்தில் மாணவர் முதல்வர் முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், கல்லூரிக்கென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கீதமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1976 ஆம் ஆண்டு திரு.பொன் கணேசனைத் தொடர்ந்து வி.தங்கராசா அதிபராக நியமிக்கப்பட்டார். 1977 இல் அவர் பதவியுயர்வு பெற்றுச் சென்றமை யால் எஸ். நமசிவாயம் அதிபராக நியமிக்கப் பட்டார். இக்காலப்பகுதியில் HNCE கலை, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. எஸ். நமசிவாயம் இளைப்பாறியமையால் A. சுப்பிரமணியம் பதில் அதிபராக நியமிக்கப்பட்டார்.

1980 ஆம் ஆண்டு பிரபல விலங்கியல் ஆசிரிய ரான K. சிவபாதசுந்தரம் அதிபராக நியமிக்கப் பட்டார். இவரது காலம் கல்லூரியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்படவேண்டியதா கும். கல்லூரியின் பௌதிக வளங்களை விருத்தி செய்து புதியதோர் தோற்றத்தை இவர் ஏற்படுத்தி னார். நீர் விநியோகம், மின்னிணைப்பு, மைதான விஸ்தரிப்பு எனப் பல்வேறு பணிகள் இவர் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. கலை, விஞ் ஞானம், வர்த்தகம் முதலான பல்வேறு துறை களிலும் மாணவர்கள் சாதனைகளை நிலைநாட்டி னர். இக்காலப்பகுதியில் கையெழுத்துப் பிரதியாக "ஏணி" சஞ்சிகை வெளியிடப்பட்டது. 1980-1990 வரையான பத்தாண்டுகள் இவர் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிப் பல்வேறு துறைகளிலும் கல்லூரி சாதனை படைக்க உதவினார்.

1991 இல் வ.செல்வராசா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். நெருக்கடி மிகுந்த இக்காலப் பகுதியில் பாடசாலை தொடர்ந்தும் சாதனைகளை நிலை நாட்டியது. 17 வயதுக்குட்பட்ட உதை பந்தாட்டப் போட்டியில் கல்லூரி அணி மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றதுடன், உடற் பயிற்சிப் போட்டியிலும் ஆறு பிரிவு அணியினரும் மாவட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்க ளால் "பூந்துணர்" சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

1993 ஆம் ஆண்டு வ.செல்வராசா பதவியுயர்வு பெற்றுச் சென்றமையால் K. அம்பலவாணர் அதிபராக நியமனம் பெற்றார்.

இக்காலத்தில் கல்லூரியின் பவளவிழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இக்காலத்தில் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் செல்வி பொ. ஜானகி யாழ்மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தொடர்ந்து 2002-2012 வரையான பத்து ஆண்டுகள் திரு.வே.சிவசிதம்பரம் அதிபராகக் கடமையாற்றினார். கல்லூரியை நவீனயுகத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைத்த பெருமை இவரைச்சாரும். பழைய கட்டடங்கள் யாவும் அகற்றப்பட்டு காலத்திற்கேற்ற புதிய கட்டடங்கள் இவர் காலத்திற் கட்டப்பட்டன. எவருக்கும் அஞ்சாது பாடசாலையின் கல்வி, இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்ற பெருமை இவருக்குண்டு. இவரது காலத்தில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கல்லூரி பல சாதனைகளைப் படைத்தது. தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்த்தின விழா தொடர்பான தமிழ் அறிவு வினாவிடைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றது. கல்லூரி இந்து மாமன்றத்தால் "சுயம்பு' சஞ்சிகை வெளியிடப்பட்டது. தேசிய மட்டத்தில் பெண் உதைபந்தாட்டத்தில் மாணவிகள் சாதனை படைத்ததுடன், மெய்வல்லுநர் நிகழ்ச்சியில் மாகாண, தேசிய மட்டத்திற்குச் சென்றனர். இவரது காலத்திற் கல்வியில் அதியுயர் சாதனைகள் பதிக்கப்பட்டன. க.பொ.த.(சா/த) பொதுப்பரீட்சையில் சித்தி வீதம் 75%மாகத் தொடர்ந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் க.பொ.த. (உ/த) பொதுப்பரீட்சையில் 100% சித்தியைப் பெற்றமை காலத்தால் அழியாத சாதனைகளாகும். பாடசாலை "இசுறு" திட்டத்தில் உள்வாங்கப்பட்டதுடன் புதியதோர் வடிவத்தையும் இவர் காலத்திற் பெற்றுக்கொண்டது.

வி.சிவசிதம்பரத்தைத் தொடர்ந்து க.மு. கனகலிங்கம் அதிபராக நியமிக்கப்பட்டார். தகவல் தொடர்பாடல் தொழிற்நுட்ப யுகத்திற்கேற்றவாறு மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் இவர் செயற்பட்டு வருகின்றார். இசுறு திட்டத்தில் உள்வாங்கப்பட்டமையால் பாடசாலையின் நிருவாகக் கட்டடத் தொகுதி பொலிவுடன் காட்சியளிக்கிறது. பாடசாலை வளாகத்தை எழிலோடு காட்சி தரக் கூடியவாறு இவர் மாற்றியமைத்துள்ளார்.

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விஞ்ஞான அறிவு வினா விடைப் போட்டியில் கல்லூரி அணியினர் முதலிடம் பெற்றனர். இவரது காலத்தில் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டதுடன் பௌதிக வள விருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தற்போதைய அதிபர்
க.மு.கனகலிங்கம்

## முடிவுரை

ஆங்கிலக்கல்வி பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே என்ற காலகட்டத்தில் வறிய கிராமமாகிய கரவெட்டியில் ஏழைக் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் ஆங்கிலக்கல்வி கற்க வழிவகுத்த பெருமை விக்னேஸ்வரவையே சாருமெனக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவரும் உடுப்பிட்டி, நல்லூர்த் தொகுதிகளின் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர். மு.சிவசிதம்பரம் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில் சிறந்த கல்வி புகட்டியதுமல்லாமல் அக்கல்வி ஏழை, பணம் படைத்தவர்கள், உயர்சாதி, குறைந்த சாதி என்ற வித்தியாசமில்லாமல் புகட்டப்பட்டதெனவும் கூறியுள்ளார்.

கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவரான அமரர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "விக்னேஸ்வராக்கல்லூரியின் வரலாற்றினூடே கரவெட்டியின் சமூக வரலாறு தொக்கி நிற்கின்றது" எனக் குறிப்பிடுகிறார். நாம் எங்கிருந்தாலும் நமது பாரம்பரியத்திலிருந்து அந்நியப்பட்டவர்கள் அல்லர். இந்த ஆற்றல் வாண்மை கரவெட்டியின் பலம் எனலாம். கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமை அதனுள் உண்டு. இந்தப் பண்பாட்டு ஆளுமை வளர்ச்சியில் விக்னேஸ்வரக் கல்லூரிக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. விக்னேஸ்வர கரவெட்டியின் சின்னம் அதன் வளத்தைப் பெருக்குவது கரவெட்டியில் பண்பாட்டு ஆளுமையை வளர்ப்பதாகும் என பேராசிரியர் சிவத்தம்பி கூறுவது சிந்தனைக்குரியது.

நூற்றாண்டுகாலம் கரவெட்டியில் கண்ணுடைய கற்றோரைப் படைத்த விக்கினேஸ்வரவின் கல்விப்பணி மேலும் தொடருமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

'உண்மை வெல்லும்' 'Truth Triumphs'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப்பேரறிஞர் சங்கீத பூஷணம்

# வி.கே.குமாரசுவாமி

■

பத்மா சோமகாந்தன்



ஒரு காலகட்டத்திலே தமிழகத்திலிருந்து இசை நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக ஈழத்திற்கு வருகை தரும் இசை மேதைகள், இசை வித்துவான்கள் போன்ற இசை வல்லுனர்கள் தமது இசைக் கச்சேரிகளைச் சிறப்பிப்பதற்காகத் தமது பக்க வாத்திய குழுவினருடனே வருகை தருவதே வழமையாக இருந்தது. காரணம் எந்த ஒரு இசை நிகழ்ச்சியும் களை கட்டுவதும் உன்னதத்தின் உச்சியை அடைவதற்கும் பக்கவாத்தியங்களான வயலின், மிருதங்கம், கெஞ்சிரா, மோர்சிங் போன்ற துணைக் கருவிகளின் ஒத்திணைவும் மிக மிக அவசியமாகும். இத்தகைய ஒரு எண்ணப்பாட்டிலே தான் இசை நிகழ்த்த வருவோர் தமது கச்சேரிகளைச் சிறப்பிப்பதற்கு வாய்ப்பாக எம் நாட்டுப் பக்க வாத்தியக் கலைஞர்களின் தரம் போதியதாக இருக்குமோ என்ற சந்தேகம் அவர்கள் மனதிலே நிலவியது. எனவே தான் தமது குழுவினரையே தம்மோடு அழைத்து வருவதில் ஆர்வம் கொண்டிருந்தனர். இதனால் இங்கு கச்சேரிகளை ஒழுங்கு செய்வோருக்குப் பெரும் பொருட்செலவு ஏற்படுவதையும் நாம் மனங்கொள்ளத்தான் வேண்டும்.

ஆனாலும் நமது நாட்டிலே இசை நிகழ்ச்சிகளை நடாத்த வரும் இசை மேதாவிகளுக்கு ஈடுகொடுக் கக் கூடிய வகையில் நமது நாட்டுக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் மிக மிக அருந்தலாகவே இருந்தது. இந்நிலையிலும் ஒரு சிலர் தமது இசை மேதாவித் தனத்தைப் பதிவு செய்தேயுள்ளனர் என்பதை மாபெரும் இசையாளர்களே பாராட்டியும் புகழ்ந்தும் உள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் நாம் வரவேற்கவே வேண்டும்.

இப்படிப் பாராட்டுக்கும், பெருமைக்கும் உரிய இசை வல்லாளர்களான மகாராஜபுரம் சந்தானம், மதுரைசோமு, ஏ.கே.சி. நடராஜன், தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர், ரி.எம். தியாகராஜன், ரி.கே. கோவிந்தராவ், ரி.கே.ரங்காச்சாரி போன்ற பெரும் பெரும் இசை மேதைகளுக்கெல்லாம் சமமாகத் தனது வயலின் இசையால் கச்சேரிகளைக் களை கட்ட வைத்த பெருமை யாழ்/ கரம்பனைச் சார்ந்த கோகிலம்பிள்ளை குமாரசுவாமி அவர்களையே சாரும்; இவர் ஒரு வயலின் இசை வல்லாளர்.

இவரது இசை வல்லமைக்கும் கீர்த்திக்கும் பெருமைக்கும் பல காரணங்களை நாம் இனங்காண முடியும். முதலாவதாக இவர் பிறந்த மண் அகில உலகத்திற்கும் தமிழ் மொழியை அறிமுகப்படுத்திய வரும், பல நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி பற்றிய ஆய்வினை மேற்கொள்ளக் கால்கோளாக அமைந்தவரும், தமிழ்த்தூதாகத் திகழ்ந்தவருமான தமிழறிஞர் பேரா. தனிநாயகம் அடிகளார், தமிழறிஞர் வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம் போன்ற மேதாவிகள் பிறந்த சிறப்பைக் கொண்ட ஊர்காவற்றுறையிலேயே திரு.குமாரசுவாமி அவர்களும் பிறந்தார்.

பரம்பரையாகவே ஆசார அனுஷ்டானங்கள், ஒழுக்கம், இறைபக்தி போன்ற பண்பாடுகளைப் பின்னணியாகக் கொண்ட குடும்பத்தில் தலைப் பிள்ளையாக திரு. கோகிலம்பிள்ளை பார்வதியம்மாள் என்ற தம்பதிக்கு ஆனந்த வேல் என்ற தம்பியாரோடும் தங்கவேல் அம்மா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரமணி, சந்திராதேவி என்ற மூன்று சகோதரிகளுடனும் பிறந்தார்கள். இவர்களோடு மட்டுமல்ல இயற்கையின் கொடையாகவே இசை வளத்தோடும் பிறந்தார் எனக் குறிப்பிடக் கூடியளவில் இயல்பாகவே பாடவும், இசை நுட்பங்களை உணர்ந்து சுவைக்கவும், அவற்றோடு சஞ்சரிக்கவும் கூடிய வல்லமையும் இவருடன் இணைந்தே இருந்ததெனக் குறிப்பிடலாம்.

இவற்றுக்கெல்லாம் காரணம் இவரது பெற்றோரே என நாம் குறிப்பிடக்கூடிய வகையில் குமார சுவாமியினுடைய தந்தையார் நாடகங்களில் தானே பாடியும், பாடி நடிப்பதிலும் வல்லமை பெற்றிருந்ததோடு தாயாரும் இசைத்துறையில் பெரும் நாட்டமுள்ள வராகவும், சிறுவன் குமாரசுவாமியை எந்த வகையிலும் இசைத்துறையில் பெரிதும் ஈடுபடுத்திவிட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்ட வராகவும் இருந்தார். பெற்றோரின் விருப்பிற் கேற்பவே சிறுவன் குமாரசுவாமியும் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பாடல்களை



சுவைமிகுந்த இசையோடு பாடிக் கேட்போரைப் பெரிதும் பரவசப்படுத்தினான். சிறுவனின் போக்கு வாக்குகளால் தாயாரின் மகிழ்ச்சியோ மகனை ஒரு இசைப் புலவனாகவே ஆக்கிவிட வேண்டுமென்ற கனவில் மிதந்தது.

சிறந்த ஆளுமைகள் பலரின் விளைச்சல் நிலமாக திகழ்ந்த ஊர்காவற்றுறை புனித. அந்தோனியார் கல்லூரியில் இளமைக்காலக் கல்வியைப் பெற்றுக் கொண்ட இச்சிறுவன் இசைத்துறையிலும் தனது வித்துவத்தை கோவில் திருவிழாக்களின் போதும் இசைவிழாக்கள் மற்றும் இலக்கிய விழாக்கள் தமிழ் விழாக்கள் போன்ற வைபவங்களின் போதெல்லாம் தனது இனிய குரலால் இசை நிகழ்த்தி பலருடைய பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டான். இயல்பாகவே சிறுவனிடமிருந்த இசை வல்லமையை வழிப் படுத்த மாமனார் வைத்தியலிங்கமும் அக்கறை கொண்டு இவருடைய ஸ்ருதி அட்சர சுத்தம் போன்றவற்றை நன்கு தெளிவுபடுத்தி மென்மேலும் திறமைபெற உதவினார். எனினும் இவர்கள் எதிர்பார்த்தளவு சிறுவனின் குரல் வளம் ஒத்திசையாது உடல் வளர்ச்சிக் கோளாறினால் மாறுபடவும் வாத்திய இசையில் கவனத்தைச் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே பல்கலைத் திறமையைத் தனதாக்கி வளர்த்துக் கொண்ட குமாரசுவாமி வயலினைக் கையில் ஏந்திக் கொண்டார்.

பெற்றோர் மகனது ஆற்றலை வெளிக் கொணரப் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டு இந்தியாவில்



பத்மஸ்ரீ டி.என்.சேஷகோபாலனுடன் [இடது] திரு வி.கே.குமாரசாமி

கர்நாடக இசைபயில அனுப்பி வைத்தனர். குமார சுவாமியும் சுமார் ஒருவருட காலம் வாய்ப்பாட்டு இசையை திரு. சாம ஐயங்கார், திரு. பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் போன்றோரிடம் பாடம் கேட்டுப் பயின்றார். இவர்களிடம் படிக்கும்போது கூடவே திரு. அரியக் குடி ராமானுஜ ஐயங்காரும் இவரோடு சேர்ந்தே பாடம் கேட்டவர் என்பதும் மறக்க முடியாத விடயமாகும்.

இசை அறிவோடு மென்மேலும் அக்கலையை வளத்தோடு வளர்த்தெடுக்க மேலும் சில ஆண்டுகள் கும்பகோணம் திரு. இராஜமாணிக்கம்பிள்ளை அவர்களிடம் குருகுலவச முறையை மேற்கொண்டு சில ஆண்டுகள் வயலின் வாத்திய இசையைக் கற்றார்.

கற்க கற்கவே கல்லாமையின் அளவு தெரியும் என்பதனாற் போலும் 1945 தொடக்கம் 1948 ஆம் ஆண்டுவரை சென்னை அண்ணாமலைப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



1993 ஆம் ஆண்டு இலங்கை கம்பன் கழகம், யாழ். கம்பன் கோட்டத்தில் சங்கீத பூஷணம் வி.கே.குமாரசாமி அவர்களுக்கு இசைப்பேரறிஞர் விருதினை வழங்கிய போது எடுத்த படம். பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை விருதினை வழங்கி வைத்தார்.

பல்கலைக்கழகத்திலே சிறப்பாக வயலின் இசையை தெளிவுபெறக் கற்றார். இவரது அபார திறமையைக் கணிப்பிட்ட கழகத்தினர் 'சங்கீத பூஷணம்' என்ற சிறப்புப் பட்டமும் கொடுத்துப் பாராட்டி மகிழ்ந்தனர்.

சென்னையிலிருந்து வந்து சங்கீத பூஷணமாக ஊரில் காலடி வைத்த குமாரசுவாமி அவர்களின் இசைப் புலமையைப் பயன்படுத்த பல இசைக் கலை மன்றங்கள் இலங்கை வானொலி கல்லூரிகள் எனப்பல அமைப்புகள் வரவேற்றுப் பயனடைந்தன. இந்த ரீதியிலே இலங்கை வானொலி அதன் தமிழ் இசைப் பிரிவின் வாத்தியக் குழுவின் உபதலைவராக இவரை நியமித்துக் கொண்டு பயன்பெற்றது. அப்படியே கொ/ சைவ மங்கையர் கழகம், இசைக் கலைமன்றங்களும் கரம்பொன் சண்முகானந்தா வித்தியாலயம், யாழ்./ சன்மார்க்க வித்தியாலயம் எனப் பல பாடசாலைகளும் இசை கற்பிப்பதற்காக இவரைத் தம்முடன் இணைத்துக் கொண்டன. அத்தோடு தனி வாத்திய இசையாகவும் பல இசைக் கலைஞர்களின் கச்சேரிகள் விழாக்கள் போன்ற வற்றுக்கெல்லாம் அனுசரணையாகப் பக்கவாத்திய மாக வயலின் இசையை நல்கி அவர்களது இசைக்கு மெருகூட்டிச் சிறப்புச் செய்தார்.

வட இலங்கைச் சங்கீத சபை உறுப்பினராகவும் மேற்படி சபையின் பரீட்சகராகவும் உறுப்பினராக வும் பணிசெய்து உதவிய இவர் உரிய பருவத்தி லேயே தமது ஊரைச் சேர்ந்த மங்கை நல்லாளான புவன சுந்தரி என்ற பெண்ணைத் திருமணஞ் செய்தார். இல்லற வாழ்வின் பெரும் பேறாக இத்தம்பதிக்கு நான்கு ஆண் குழந்தைகளும் இரு பெண் குழந்தைகளுமாக ஆறு குழந்தைச் செல்வங்கள் கிட்டியுள்ளனர்.

இவர்களும் சுமாரான இசையறிவுடன் திகழ்கின்றனர் என்பதை குறிப்பிட வேண்டும்.

தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற பொன் வாக்கிற்கமைய தான் பெற்றுக் கொண்ட இசை வெள்ளத்தை அள்ளி பல்லோரும் சுவைக்க அனுபவிக்க கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் பல இசை சார்ந்த அமைப்புக்களோடு இணைந்து இசைப் பணியில் உதவினார்.

சில காலம் யா/ இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் வயலின் விரிவுரையாளராக இருந்து ஆற்றிய இவரது சேவை பாராட்டிற்குரியதே!

சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாக இசைத்துறைக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இதற்காக இவர் பெற்றுக் கொண்ட பாராட்டுகளும் புகழ் மாலைகளும் பற்பல. இவற்றுள் குறிப்பிடக்கூடியது. வருடா வருடம் சிறப்புடன் நடைபெற்றுவரும் கம்பன் இசை விழாவிலே கடந்த 1994 ஆம் ஆண்டு திரு வி.கே. குமாரசுவாமி அவர்களின் இசைப் புலமையையும், இசைப் பணியையும் பாராட்டி இசைப் பேறறிஞர் விருது வழங்கி எடுக்கப்பட்ட பெருவிழா ஆகும். அத்தோடு இந்த தந்தையாருக் கான கௌரவ பட்டமளிப்பு விழாவின்போது அவரது பிள்ளைகள் யாவரும் ஒன்றிணைந்து இசை மேதையான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகள் என்ற அரும்பெரும் இசைக் களஞ்சியத்தை நூலாக வெளியிட்டு வைத்தமையே பாரம்பரியமாக இசைக்கும் இசைப் பணிக்கும் தம்மை அர்ப்பணித்துள்ள சத்தியவாக்காக நேயர்களை உணர வைத்துள்ளது.

03.03.1925 இல் இம்மண்ணுலகில் பிறந்து 'சங்கீத பூஷணம்', இசைப் பேறறிஞர் என்ற பட்டங்களால் போர்த்தப்பட்டு இசையோடு இணைந்த இப்பெருமகன் 29.03.2009 ஆம் நாளோடு தனது மூச்சை நிறுத்திக் கொண்டார். அன்னாரது வெற்றிடத்தை அவரது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் நிறைவு செய்ய வேண்டுமென் பதே இச்சமுதாயத்தின் வேண்டுகோளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் திருக்குளத்து வேள்வி



■
வைத்தியகலாநிதி
அருமைநாதன் ஸதீஸ்குமார்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புராதன பிரதேசங்களில் கந்தளாயும் ஒன்று. திருகோணமலை - கண்டி வீதியில் திருகோணமலை நகரத்திலிருந்து 45 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள இதனை அண்டியதாகவே கந்தளாய் குளம் அமைந்துள்ளது. இலங்கையிலுள்ள பெருங்குளங்களுள் ஒன்றான இதன் மூலம் தம்பலகாமம், கந்தளாய், மூதூர் போன்ற பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நெற்செய்கை நிலங்களுக்கான நீர்த்தேவை பூர்த்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்குளத்தின் அணைக்கட்டினுடைய பொறி முறையைப் பார்த்து இன்றுள்ள உலகத்தரம் வாய்ந்த பல பொறியியலாளர்கள் வியக்கின்றனர்.

1786 இல் கந்தளாய் குளத்தை பார்வையிட்ட ஒல்லாந்து ஆளுநர் பிரமித்துப் போயிருந்தார். இது மிகப் பிரமாண்டமான கருங்கற்களினால் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றை எவ்வாறு இங்கே கொண்டு வந்தார்கள் என்பது மிக ஆச்சரியமாக உள்ளது. அந்தக் கற்கள் ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று இணைத்து கட்டப்பட்டிருப்பது மிகச் சிறந்த கலைத்திறனை வெளிக்காட்டுகின்றது. என வியந்த குறிப்புகளும் உண்டு.

கந்தளாய் குளத்தை சோழகங்க தேவன் என்னும் இயற்பெயர் கொண்ட குளக்கோட்டு மகாராசன் கட்டினான் (இம் மன்னனது ஆட்சிக் காலம் ஆய்வுக்குரியது) என்று கி.பி.16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கோணேசர் கல்வெட்டு சாசனத்திலிருந்து அறிய முடிகின்றது. அத்தோடு இக்குளம் பற்றிய பல தகவல்களை இந் நூலில் விரிவாகக் காணலாம். மேலும் கங்காதடல வாவியே இக்குளம் என்றும் இதனை 2 ம் அக்ரபோதி மன்னன் (கி.பி 598) கட்டினான் என்று இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. ஆயினும் '1 ம் அக்ரபோதி மன்னன் (கி.பி 564) மின்னேரியாக் குளத்திலிருந்து கந்தளாய் குளத்திற்கு கால்வாய் ஒன்றினை வெட்டினான்' என்றும் குறிப்புண்டு.

## கண்தழை ---- கந்தளாய்

கண்தழை என்பது ஒரு காரணப் பெயராகும். அனுராதபுர இராசதானியின் மன்னனான இரண்டாம் கயவாகு திருக்கோணேஸ்வர ஆலயத்தை இடித்து அழிக்கும் நோக்கோடு படையெடுத்து வரும்போது, இடைவழியில் அவனது கண்களிரண்டும் பார்வையை இழந்தன. தெய்வக் குற்றத்தினால் இது ஏற்பட்டது என்று கலக்கமுற்றான். பின்னர் பயபக்தியோடு திருக்கோணேஸ்வர பெருமானை இறைஞ்சி வேண்டிய போது அவனது ஒரு கண்பார்வை கிடைத்தது. இவ்வாறு கண் தழைத்த இடம் கண்தழை என்று பெயராயிற்று என்றும் பிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் இது கந்தளாய் என்று மருவிற்று என்றும் குறிப்புகள் கூறுகின்றன.

### சதுர்வேதி மங்கலம்

கந்தளாயானது 'சதுர்வேதி மங்கலம்' என்றும் அழைக்கப்பட்டுள்ளது. நான்கு வேதங்களை ஓதும் வேதியர்கள் இங்கு வாழ்ந்து வந்ததனால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். இலங்கையை ஆட்சி செய்த முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் (கி.பி 985-1014) இது ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டிருந்தது. இன்றைய காலத்தில் பெரு மளவு சிங்கள பௌத்த மக்களும் குறிப்பிட்டளவு தமிழ் மக்களும் வசிக்கும் இடமாக கந்தளாய் உள்ளது.



### குளக்கோட்டு மன்னனும் பூதப்படையும்

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க கந்தளாய்க்கு பிரமாண்டமான அணைக்கட்டும், என்றும் வற்றாத ஆழமும் மிகப் பரந்த விசாலமான நீர்ப்பரப்பைக் கொண்டதுமான குளமும் இன்னும் புகழ் சேர்ப்ப தாகவே அமைந்துள்ளது. திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாகத்துக்காக இக்குளத்தை மன்னன் குளக்கோட்டன் கட்டிய வரலாறும், அதற்கென ஏற்படுத்திய வழிபாட்டு சடங்கு முறைகளும் செவி வழிக்கதைகள் வாயிலாகவும் கோணேசர் கல்வெட்டு சாசனப் பிரதிகள் மூலமாகவும் அறியும் போது ஏற்படும் பிரமிப்புக்கு அளவேயில்லை. அம்மான் கண்- நரபலி , பூதங்கள் கட்டிய குளம், மருமக்கள் தாயமுறை சடங்கு-சம்பிரதாயங்கள், காவல் தெய்வங்கள், பெண்டுகள் கட்டு போன்றன வும் இவற்றுள் அடக்கம்.

கோயில் மலையில் திருக்கோணேஸ்வர ஆலயத்தை செவ்வனே திருத்தியமைத்து அங்கே பாவநாசச் சுனையையும் கட்டுவித்த குளக்கோட்டு மன்னன், இச்சிவாலயத்தின் விதிமுறையான பூசைக்கென ஏராளமான வயல்நிலங்களையும் குளங்களையும் கட்டுவித்தான். இவ்வாறு தான் அமைத்த சிறு குளங்களினால் திருப்தியடையாத வேளையில், உன்னாச்சிகிரி என்னும் இடத்திலிருந்து இலங்காபுரியை இராச்சியம் பண்ணி வந்த ஆடகச வுந்தரி என்னும் அரசியை திருமணம் செய்தான். அக் காலத்தில் அரசியிடம் பெரும் பூதப்படை யொன்று இருந்தது. அதிலே ஒரு பூத ராசாவையும் ஆறு குறட்பூதங்களையும் கூட்டிக்கொண்டு வந்த அரசியினுடைய முதல் மந்திரியின் ஆலோசனைக்கு அமைவாக அறுபத்துநாலு குளங்களை உள்ளடக்கிய தாக இரண்டு மலைகளை பொருத்திக்கட்டி ஒன்பது நாளைக்குள் மகா பெருங்குளம் ஒன்றையும், சமுத்திரக்கரை போன்ற விசாலமான அளவு வயல் வெளிகளையும் திருத்தினான். அத்தோடு மகாவலி கங்கையை மறித்து குளத்துக்கான நீர்பாயும் வழியையும் ஏற்படுத்தி கொட்டியாபுரத்துக்கான வாய்க்காலும் மேலும் ஐந்து வான்களும் வெட்டி முடித்தார்.

### பெண்டுகள் கட்டு

குளம் கட்டி முடித்த சில காலங்களின் பின்னர் குளக்கோட்டு மன்னன் அரசி ஆடகசவுந்தரியுடன் குளத்தினைப் பார்த்துக்கொண்டு வருகையில், குளக் கட்டின் வடபுறத்தில் ஒரு பணிவு இருக்கக் கண்ட அரசி தன்னோடு வந்த பணிப்பெண்களைப் பார்த்து இந்த பணிவைக் கட்டுங்கள் என்று கூறி கட்டுவித் தார். அதுவே பெண்டுகள் கட்டு என பெயராயிற்று.

### குளக்கட்டு காவல் தெய்வங்கள்

இவ்வாறாக திருக்கோணேஸ்வர ஆலயத்தை புனரமைத்து நான்கு வருடங்களின் பின்னர் இத் திருக்குளத்தை அமைத்தார். இதனுள் மாகாவலி நீரை சேமித்து வருகையில், நீரின் கொள்ளளவு கூடிய ஒரு நிலையில் குளம் உடையுமோ என அச்சமடைந்து மதகின் கதவையும் திறக்கப் பயந்து திருமாலை நினைத்த மன்னன், இக் குளத்திற்கு நீரே காவல் என வேண்டினான். மதகின் கதவும் பாதுகாப்பாக திறக்கப்பட்டது. குளத்து நீர் குளக்க ட்டு பிள்ளையார் கோயிலை வலமாக சுற்றிப் பாய்ந்து சென்றதைக் கண்ட குளக்கோட்டு மன்னனும் மகிழ்ந்தான்.

இக் குளக்கட்டுக்கு பிள்ளையார், எழில்முனி (காளமாமுனி), மங்கலர், புத்தியர், வதனர், வீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் (ஐயனார்), வைரவர், இலங்கை சந்தி காவலன், அண்ணமார் போன்றோர் காவல் தெய்வங்களாக இருத்தப்பட்டனர். அத்தோடு குளத்தை கட்டியவர்களான நீலசோதயன் படைகளும் அவர்களுடன் பூதபப்பரவர், பத்தினி, கன்னிமார், காளி போன்றோரும் காவலாயிருப்பார்கள் என்ற நியதியும் ஏற்படுத்தப்பட்டது. (நீலாசோதயன் படைகள் ஆடகசவுந்தரியின் வரலாற்றில் பூதங்களாகக் கூறப்படுகின்றது.)

காவல் தெய்வங்களுக்கு வெற்றிலை, பாற் பொங்கல், திருவிளக்கு, தூபம் என்றவாறு சொல்லியபடியே பூசை நடக்கும். இவற்றிலே குறைவு நிகழ்ந்தாலும் உள்ளத்திலே சோர்வு இல்லாது காவல் செய்வீர்களாக! என கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு





இணங்க; குளக்கோட்டு மன்னன் 160 எருமைகளைக் கட்டி அவற்றிலிருந்து பால்,நெய் என்பன எடுத்து பாற் பொங்கலும் மடையும் வைக்க ஏற்பாடு செய்தார். இதன்படி ஒருவருடம் பாற் பொங்கலும் ஒரு வருடம் மடையும் இடம்பெறுவது நியதியாயிற்று.

நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள், குழப்பகரமான சிந்தனைகள் காரணமாக இத் திருக்குளத்து மடைவேள்வி சில காலங்களில் நடைபெறவில்லை. அதுமட்டுமல்லாது கந்தளாய் குளம் 1986 ஆம் ஆண்டில் உடைப்பெடுத்த போது பெருமளவு உயிரிழப்புகள் கூட ஏற்பட்டிருந்தமையோடு விநாயகர் ஆலயமும் அழிவடைந்திருந்தது. பின்னர் இவ் ஆலயம் மீளவும் புதுப்பிக்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் எமது இரண்டு தலைமுறைகளால் கைவிடப்பட்டதும் செவி வழியாகவே கேள்விப்பட்டதுமான திருக்குளத்து வேள்வியை, தம்பலகாமம் ஆதி கோணைநாயகர் தேவஸ்தானமானது தொழும்பாளர்கள் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் பல தசாப்தங்களுக்குப் பின்னர் 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் சிறப்பாக நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக இவ் வேள்வி மடையானது 1956 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

திருக்கோணேஸ்வர ஆலயத் திருப்பணிச் செலவுகளுக்காக ஏராளமான வயல்நிலங்களையும் குளங்களையும் கட்டுவித்த குளக்கோட்டு மன்னன், இவற்றை பராமரிக்கவென பல தொழும்பாளர் குடிகளையும் அவர்களுக்கான வயல்நிலங்களையும் முறையாக வகுத்து ஏற்படுத்தினான். இவை தம்பலகாமம், கொட்டியாரம் (மூதூர்) போன்ற பகுதிகளில் இன்றளவும் நடைமுறையிலுள்ளன.

### தங்கக்குண்டு சுடுதல்

நீர் நிறைந்து கந்தளாய் குளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்படும் போது தத்துவங்கண்டி என்ற இடத்தில் யாகம் செய்து பூசகர் குளத்தினுள் இறங்கி தங்கக்குண்டு சுடுவார். இவ்வாறே ஐம்பதுகளின் பிற்பகுதியில் குளம் பெருக்கெடுத்த போது கோயில் தொழும்பாளர் (காரியப்பர்) தங்கக் குண்டும் துவக்கும் கையிலெடுத்து குளத்தினுள் இறங்கி கழுத்தளவு தண்ணீரில் நின்று தங்கக் குண்டை சுட்டார். பின்னர் நீர் வற்றி குள உடைப்பும் தடுக்கப்பட்டது என குறிப்புகளும் உண்டு.

### திருக்குளத்துப் பூசகர் அழைப்பு

கந்தளாய் திருக்குளத்து வேள்வியானது மழையை வேண்டி நாராயண மூர்த்தியை முன்னிலைப்படுத்தி செய்யப்படுவதொன்றாகும். குளக்கோட்டு மன்னன் காலம் தொட்டு வேளாண்மை பாதிப்படையாதிருக்க மலைவளம் வேண்டி நாராயணனையும் திருக்குளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கட்டு காவல் தெய்வங்களையும் மகிழ்விப்பதற்காகச் செய்யப்படுகின்றமை வழக்கம். இவ் வேள்விச் சடங்கானது கந்தளாய் குளத்தின் உட்பகுதியில் குளக்கட்டின் தெற்குப் புறமாக மரச் சோலைகள் நிறைந்த இடத்தில் நடைபெறுகின்றது. முன்னைய காலங்களிலும் இப் பகுதியிலேயே இவ்வாறான வேள்விகள் நடைபெற்றதாக பெரியோர்கள் கூறு கின்றனர். இங்கு பூசகர் உட்பட கோவில் தொழும் பாளர்களின் வகிபாகம் முக்கியத்து வம் மிக்கதாக உள்ளது. பூசகர், இணைப்பூசகர், காரியப்பர், அடப்ப னார், கங்காணம், வைராவியர், மறிகாரர்கள், பண்டார வண்ணான், முரசறைவோன், முதலான தொழும்பாளர்கள் இவ்வேள்வியில் கலந்து கொள்வர்

இம்மகா வேள்விச்சடங்கின் முதல்நாள் தம்பலகாமம் முள்ளியடி முருகன் கோவிலில் இருந்து திருக்குளத்துப் பூசகரை அழைத்து வரும் நிகழ்வு இடம்பெறும். இம்முறை திருக்குளத்துப் பூசகராக சம்பூரைச் சேர்ந்த திருவாளர் நடராசா பூலோகராசா என்பவர் அழைத்து வரப்பட்டிருந்தார். பூசகரை கட்டாடியார் என்றும் அழைப்பதுண்டு. சம்பூரில் உள்ள 12 குடிகளுள் ஒன்றான பெரிய காரியப்பர் குடி வழி வந்தவர்களே இங்கு பூசகராக இருப்பர்.

இக்குடிவழி பாரம்பரியம் மருமக்கள் தாய முறையில் அமைகிறது. பண்டைய காலந்தொட்டு தம்பலகாமப்பற்று, கொட்டியாபுரப்பற்று (இன்றைய மூதூர், சேருவில, வெருகல்), கட்டுக்குளம்பற்று (இன்றைய குச்சவெளி, திரியாய் முதலான பிரதேச ங்கள்) போன்ற பிரதேசங்களில் நிகழ்ந்து வருகின்ற சடங்கு,சம்பிரதாயங்கள், பரம்பரை சொத்துக்கள் அனைத்தும்தாய்வழி மருமக்கள்தாய முறைப்படியே கடத்தப்பட்டுள்ளன. சம்பூரிலும் கூட புலமை (தோத்திரம்) பாடுவதற்கென புலவன் குடியும், பத்தினியம்மன் வேள்விக்கென பாட்டுவாழி குடி யும், நாராயணர் வழிபாட்டுக்கு பெரிய காரியப்பர் குடியுமென அமைந்து காணப்படுவது சிறப்பு.

திருக்குளத்து வேள்விக்காக பூசகரை அழைக்கும் போது அவர் ஒரு பெருந் தலைவர் போலவே மரியாதையுடன் நடாத்தப்படுவார். ஆசாரமுறைப் படியான ஒரு நாளை பூசகரிடம் கேட்டு தெரிந்து கொண்டு, பின்னர் அந்நாளில் பூசகர் வீடு சென்று வெற்றிலை, பாக்கு, தட்சணை வைத்து (அவர் வேள்வி முடிந்து வரும்வரைக்கும் அவரது குடும்பத்துக்கு தேவையான பொருட் களையும் கொடுத்து) திருக்குளத்து வேள்வியை முன்னின்று செய்து தருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பர். பூச கரும் அதை ஏற்றுக்கொண்டு தனது வீட்டாரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப் படுவார்.

முன்னைய காலங்களில் திருக்குளத்துப் பூசகரை பல்லக்கில் தூக்கி, கோயில் தொழும்பாளர்களும், அடியார்களும் சூழ்ந்துவர நிலபாவாடை விரித்து அழைத்து வருவர் என்றும், அதற்குப் பின்னரான காலங்களில் பனையோலையால் செய்யப்பட்ட கடகங்களில் பூசகருக்கான பொருட்கள் வழங்கி, பூச கரை பல்லக்கில் தூக்கி, அதனை கூடாரம் கட்டிய மாட்டு வண்டிலில் வைத்து அழைத்து வருவது நடைமுறையில் இருந்தது என்பது செவிவழியாக வழங்கப்பட்டு வரும் கதையாகும்.

இவ்வாறே இம்முறையும் திருக்குளத்துப் பூசகராக திருவாளர் நடராசா பூலோகராசா என்பவர் சம்பூரிலி ருந்து தம்பலகாமத்திற்கும் பின்னர் கந்தளாய்க்கும் ஏற்பாட்டாளர்களால் வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டு, வேள்வி முடிந்ததும் மீண்டும் அங்கிருந்து சம்பூரிற்கும் அழைத்துக்கொண்டு வரப்பட்டார். இதன்போது பூசகரையும் அவரோடு வந்தவர்களையும் சம்பூர் மக்கள் எதிர்கொண்டு அழைத்து வரவேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெட்டகம்

திருக்குளத்துப் பூசகர் அழைத்து வரப்படும் அதே நாளில் உமிரிக்கட்டு பிள்ளையார் கோயிலில் இருந்து வேள்விக்கான பொருட்கள் அடங்கிய பெட்டகம் ஆதி கோணைநாயகர் கோயிலுக்கு கொண்டு வரப்பட்டு பூசை அபிசேகம் என்பன நடைபெறும். இப் பெட்டகத்தினுள்ளே வாள்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேடயம், வெளுக்கயிறு, கத்தி, பொல்லு, சூலம், வேல், வளையம் முதலானவை வைக்கப்பட்டி ருக்கும். பூசை வழிபாடுகள் முடிந்ததும் அன்றைய தினம் மாலைவேளையில் இப்பெட்டகத்துடன் வேள்விக்கான பொருட்களும் கந்தளாய் பிள்ளையார் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும். குளக்கோட்டு மன்னன் உருவாக்கிய தாகக் கருதப்படும் இப் பிள்ளையார் ஆலயம் இன்று கோயில் கிராமம் என்னும் இடத்திலே குளக்கட்டுக்கு அருகாமையில் உள்ளது.

### கால் நாட்டும் நிகழ்வு

மறுநாள் அதிகாலை அனுச்சை பூசை நடைபெற்று குளத்திலே வேள்வி நடைபெறும் இடத்துக்குச் சென்று மகா பூசை ஆராதனைகளுடன் கால் நாட்டும் நிகழ்வு சிறப்புற இடம்பெறும். கன்னிக்கால் நாட்டுவதற்காக ஆரம்ப காலங்களில் சந்தன மரம் பயன் படுத்தப்பட்டு வந்தபோதிலும் தற்போது வெடுக்கு



நாரி மரம் பாவிக்கப்படுகின்றது. இம் மரத்தின் தண்டுப்பகுதியானது தென்னம்பாளை, கரும்பு, ஆத்தி இலை போன்றனவற்றால் அலங்கரிக்கப்படும். இம் மரத்துண்டை நாராயணமூர்த்தியாக பாவித்து பூசை அபிசேகம் என்பன நடைபெறுகின்றமையை அவதானிக்கலாம்.

கன்னிக்காலைச் சுற்றி 9 காவல் தெய்வங்களை ஆவாகனம் செய்து 9 மரங்களை நட்டு பந்தல் போடுவார். இப்பந்தலுக்குள் ஆயுதப் பெட்டி வைக்கப் படும். தொடர்ந்து கும்ப பிரதிட்டை, யாகபூசை, யாக பிரதட்சணம், யாகாதி கருமம் என்பனவற்றுடன் குளுமாடு பிடிக்கும் பூசையும் நடைபெறும்.

12 வில்லைகளில் 12 குழுமாடுகள் 12 மரிகாரர் களாலும் தொடுக்கப்பட்டு ஒவ்வொரு வில்லைக்கும் எண்ணி ஆயிரம், எண்ணாமல் ஆயிரம் என்ற விதிக்கு அமைய வெற்றிலை, பாக்கு, பழம் மற்றும் பூசைக்குரிய பொருட்கள் பாலடிசிலும் வைக்கப் பட்டு வழிபாடு நடைபெறும். மறிகாரர்கள் 12 பேரும் கயிறுகளுடன் பெருங்காடுகளுக்குள் சென்று பிடிபட்ட குளுமாடுகள் 12 உடனும் வரும்வரை வேள்வி நடைபெறும் இடத்திலிருப்பவர்கள் வீடு செல்லாது இரவு பகலாக அங்கேயே தங்கியிருப்பர். இக்காலம் சில வேளைகளில் மூன்று மாதங்கள் கூட ஆகலாம் என்கின்றனர் பெரியோர்கள். மாடுகள் பிடிபட்டதும் பூசைகள், வேள்விகள் என சடங்கு வீறுபெறத் தொடங்கும்.

### பூதபப்பரவர் பூசை

அதைத் தொடர்ந்து ராஜகளரியில் பூதபப்பரவருக்கு பாதி வெற்றிலை, பாதி பாக்கு, பாதி பழம் வைத்து பூசை வழிபாடு இடம்பெறும். திருக்குளத்துக் கட்டிலே காவலுக்கென இருத்தப்பட்ட இக் காவல் தெய்வத்துக்கு நடைபெறும் பூசையின் போது குறிப்பிட்ட சிலரே இங்கு செல்வது வழக்கமான நடைமுறை.

### ஏழு ராசாக்களின் பூசை, பட்டாணி மடை

குளக்கட்டில் இருத்தப்பட்ட மேலும் ஏழு காவல் தெய்வங்களுக்கு பூசை வழிபாடுகள் செய்யப்படும். இது ஏழு ராசாக்களின் பூசை எனக் கூறப்படும். ராஜகளரியின் கிழக்குத் திசையிலே குளக்கட்டின் கீழ்ப்பக்கமாக இடம்பெறும். இவ்வேழு பூசைகளில் ஒன்று பட்டாணி பூசையாக இருக்கும். இப்பூசையை இஸ்லாமியருக்கு வழங்குவது நடைமுறையாகும். இதுபோல நாயன்மார்திடல் கோயில் மடையிலும், கட்டைபறிச்சான் அம்மச்சியம்மன் கோயில் மடையிலும் பட்டாணிமடை வைக்கும் வழக்கமுண்டு.

### வதனமார் பொங்கல்

தொடர்ந்து பந்தற்கால் பொங்கல் பூசை நடைபெறும். இதன்போது 12 வில்லை வதனமாருக்கு 12 சாடி வைத்து 12 மறிகாரர்களும் பொங்கல் செய்வர். அதைத் தொடர்ந்து அந்தரவதனன், பாலாவதனன், வன்னித்தெய்வம் ஆகிய மூன்று தெய்வங்களுக்கு மரப்பரணில் பூசகராலும், இணைபூசகராலும், நோற்புக்காரராலும் சாடி வைத்து பாற்பொங்கல் செய்யப்படும். இதேபோல பொங்கல் களறியில் 7 ராசாக்களும் குத்துமடை வைத்து பூசை இடம் பெறும். இறுதியாக நோற்புக்குதல், சமைத்தல், பூசை செய்தல், கட்டாடுதல் என்பன நடைபெற்று திருக்குளத்து வேள்வி நிறைவுபெறும்.

இவ் வேள்விக் காலம் முழுவதும் எமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் சடங்குகளும், தினமும் மூன்று வேளை அன்னதானமும் தொடர்ச்சியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும். தென்னோலைகளால் வேயப்பட்ட இரண்டு மூன்று குடில்கள் மரங்கள் நிறைந்த சோலைக்குள் அமைக்கப்பட்டிருக்கும். இச்சூழல் மிக ரம்மியமானதாகக் காணப்படும்.

### கல்வெட்டுக்கள்

இவ்விடத்தைச் சுற்றிக் காணப்படும் சிறியதும் பெரியதுமானகற்பாறைகளில்சில ஆண்டிலக்கங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவ்வாறு தனிப் பாறைகளி லும் காணப்படுகிறது. *1916, 1931, 1951, 1956* என பாறைகளில் வெட்டப்பட்ட ஆண்டுகள் முன்னைய காலங்களில் இங்கு திருக்குளத்து வேள்வி செய்யப் பட்ட வருடங்களைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இதனடிப்படையிலும் பெரியோர்களின் வாய் மொழித் தகவல்களின் மூலமாகவும் குளக்கோட்டன் காலம் தொட்டு நடைபெற்று வந்த திருக்குளத்து வேள்வி இறுதியாக 1956ஆம் ஆண்டில் நடை பெற்றுள்ளமையை உறுதிப்படுத்த முடிகின்றது.



தற்போது மீண்டும் 61 வருடங்களின் பின்னர் இவ்வாண்டு (2017) இவ்வேள்வி நடாத்தப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமாக வேள்வி நடைபெறாது போனாலும் மழையோ அல்லது வெயிலோ வேண்டும் போது முறையே பச்சைப்பட்டு, சிவப்பு பட்டு கட்டி நேர்தல் இன்றுவரை கந்தளாய் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவருகிறதைக் காணலாம்.

"மன்னு பச்சைப் பட்டு வயல் மழையுதவும் சிவப்பு மகா வெயிலே காட்டும்..." (கோணேசர் கல்வெட்டுப் பாடல்-30)

இவ்வேள்வியும் பட்டு நேர்தலும் குளக்கோட்டு மன்னன் காலத்திலிருந்து நடைபெற்று வருகின்றமை சிறப்பம்சம். இப்பாறைகள் சிலவற்றில் ஆண்டுக ளோடு எழுத்துக்களும் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் அந்தந்தக் காலங்களில் குளத்து வேள்வியை நடாத்திய பூசகர்களின் பெயரின் முதலெழுத்துக்களும், அவர்களின் ஊரான சம்பூர் என்பதுவும் பொறிக்கப்பட்டுள்ளமையை அவதா னிக்கலாம். '1951 ந.க சம்பூர்' என்னும் பொறிப்பா னது 1951 இல் சம்பூரைச் சேர்ந்த ந.கணபதிப்பிள்ளை என்பவர் பூசகராக இருந்தார் என்பதைக் குறிக்கும்.

*'1956 சம்.கா.சி'* என்பது *1956* ஆம் ஆண்டில் சம்பூரைச் சேர்ந்த காத்தமுத்து சித்திரவேல் பூசகராக வேள்வி செய்தார் என்பதாகும்.

இதைவிட 'ச.சி.சா.மரகதி' என்னும் எழுத்துக்க ளோடு, 'தக்க குருநாடு...' என்று தொடங்கும் வரி வடிவங்களும் பாறை முகப்புக்களில் காணப் படுகின்றன. இவ் எழுத்துக்களில் பெரும்பாலா னவை அழிவடைந்த நிலையிலுள்ளன. இதனால் வாசித்தறிவது கடினமாகவுள்ளது.

இதை வைத்துப் பார்க்கும் போது திருக்குளத்து வேள்வி நிறைவடைந்ததும் அது நடைபெற்ற வருடத்தையும், தலைமை வகித்த பூசகரின் பெயரை யும், அவரது ஊரையும் கல்வெட்டாகப் பொறிக்கும் வழக்கம் எம் முன்னோரிடையே காணப்பட்டமை பெருமைக்குரிய விடயமெனலாம். பெரும்பாலும் நாட்டை ஆட்சி செய்யும் முடிசூடிய மன்னர்கள் தங்களது பெயரையும், மெய்க்கீர்த்திகளையும் கல் வெட்டாகப் பொறித்து வைத்துள்ளதைக் காணுகின்ற நாம், ஒரு சமூகம் செய்கின்ற நிகழ்வுச் சடங்கிலே இவ்வாறான கல்வெட்டுப் பொறிப்புகளைக் காணும்போது இவ்வேள்விக்கு எமது முன்னோர்கள் கொடுத்த முக்கியத்துவம் புலனாகின்றது. அது சிறப்புமிக்கது.

ஒரு இனத்தின் இருப்பு என்பது தொடர்ச்சியானதும் அறுபடாததுமான நிலப்பரப்பு, பேச்சிலும் எழுத்தி லுமாக பாவனையிலுள்ள மொழி, பண்பாட்டுச் சடங்குகள் என்பனவற்றின் மூலமே நிலைநிறுத்தப் படுகின்றது. அந்த வகையில் இன்று நாம் பின்பற்றி கலைகள், சடங்கு சம்பிரதாயங்களின் மூல வேர்களை பின்னோக்கி ஆராய்வோமாகில் அது எம் முடைய தமிழினத்தின் உறுதியான வரலாற்றைச் சொல்லும்.

ஆகவே இன்றைய நவீன தொழிநுட்பவசதிகள் பெருகிப் பாவனையிலுள்ள காலத்திலும் ஒரு சிலருக்கே நினைவிலிருந்த திருக்குளத்து வேள்வி என்னும் சடங்கை மீண்டும் ஆரம்பித்த தம்பலகாமப் பற்று ஆதி கோணநாயகர் தேவஸ்தானம் மற்றும் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஆகியோரின் இப்பணி காலத்தால் போற்றுதற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைத்துவம் பேணிவாழும் சூதுவாதற்ற பாலித்தீவு மக்கள்

## இன்றும் நிலைத்திருக்கும் இந்துமத தமிழ்க் கலாசார பண்புகள்

இரா.சடகோபன்





அண்மையில் இந்தோனேசியாவின் பாலித் தீவுகளுக்கு செல்லும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு அரிய பல அழகுக் காட்சிகளையும், இயற்கை அற்புதங்களையும் காண முடிந்தது. இவற்றை யெல்லாம் விட என் மனதை மிகக் கவர்ந்த விடயம் அங்கு வாழும் மக்கள் தான். அவர்கள் எப்போதும் சிரித்த முகத்துடனும், உதடுகளில் மெல்லிய புன்னகையுடனும் சூதுவாதற்ற மனதுடனும் மிக மெல்லிய சுபாவம் உள்ளவர்களாகவும் இருக்கின் றார்கள். அவர்களுடன் பேசிப் பழகிய அந்த சில நாட்கள் வாழ்வில் மறக்க முடியாத தருணங்கள்.

அவர்களின் இந்த சுபாவம் பற்றி இந்த நாட்களில் எம்முடன் இருந்து எமக்கு வழிகாட்டியாகவும், சாரதியாகவும் பணி புரிந்த வயான் நகாராவைப் பாராட்டிக் கூறினேன். அவர் இது கேட்டதில் மகிழ்ச்சியடைந்ததுடன் ஏன் உங்கள் நாட்டில் மக்கள் அப்படி இல்லையா? என்று கேட்டார். இதற்கு என்னால் அந்த மனிதருக்கு சரியான பதிலைக்கூற முடியவில்லை. என்றாலும் இலங்கையில் 2009 ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற கொடூர யுத்தம் பற்றியும் அது விட்டுச் சென்ற அழியாவடுக்கள் பற்றியும் அவரிடம் எடுத்துக் கூறினேன். அவர் இது பற்றி அறிந்திருக்கவில்லை. அதன் பின் அவருக்கு எம்மீது சற்றே அனுதாப உணர்வு ஏற்பட்டிருப்பதை உணர்ந்தேன். அத் தகைய ஒரு நாட்டில் வாழ அவர்கள் உண்மையில் பாக்கியசாலிகள்தான். இந்தோனேசியாவின் பாலித் தீவில் வழுக்கி விழுந்த இடங்களில் எல்லாம் இந்துக் கோயில்களைக் காணலாம். அவற்றைப் பார்த்து கண்டுகளிக்க வெளிநாட்டு உல்லாச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரயாணிகளும் அங்குவந்து குவிந்து காணப்பட்டனர். அங்கே இந்து மதத்தவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். மற்றும் பௌத்தர், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களும் அங்கு மிக ஒற்றுமையாக வாழ்கின்றனர். நமது இலங்கையிலும் கூட அதிக அளவில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடங்கள் இருந்த போதும் இங்கே உல்லாசப் பிரயாணிகள் அதிகம் வராததற்கு காரணம் இந்தோனேசியர்களைப் போன்று வந்தோரை வரவேற்று இனிமையான நட்புடன் பழகும் சுபாவம் இல்லாதிருப்பதும் தான் என்று என் மனதுக்குப் பட்டது. அங்கே கல்லூரிகளில் கல்வி பயிலும் வெளி நாட்டு இளம் பெண்கள் எவ்வித பயமுமின்றி தனி யாக வருகை தந்து கைகளில் புகைப்படக் கருவிகளு டன் இயற்கையை ஆராய முயல்வதை பரவலாகக் காணக்கூடியதாக இருந்தது.



பாலித்தீவு மக்களிடையே தமிழ்க் கலாசார மற்றும் இந்து மத பழக்க வழக்கங்கள், பண்புகளை அதிக மாகக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் வைப வங்களின் போது பட்டுச்சேலை அணிகிறார்கள். காதில் பூ வைக்கிறார்கள். (அரலிப்பூ) சிவனுக்கும், கணேஷ் என்ற கணபதிக்கும் சரஸ்வதிக்கும் நெடிதுயர்ந்த கோயில் கட்டி வணங்கு கிறார்கள்.



கணேஷ் மற்றும் தேவிஸ்ரீ (ஸ்ரீதேவி அல்லது சரஸ்வதி) என்ற பெயர்கள் பரவலாக புழக்கத்தில் உள்ளன. மகா பாரதக் கதை, கம்பராமாயணக்கதை ஆகியவற்றில் வரும் முக்கிய காட்சி களை (உ+ம்: கீதோபதேசம், இராவணன்வதை) சிலை வடித்து காட்சிப்படுத்தியுள்ளதுடன் அவற்றை நாடகவடிவிலும், கூத்தாகவும் சிறு கலையரங்குகளில் நடித்துக் காட்டுகிறார்கள்.



நடனம் ஆடும் வடிவில் கணேஷப் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பொருட்களை கடகத்தில் வைத்து தலையில் சுமந்து செல்லும் பெண்கள்

இவற்றைப் பார்க்க உல்லாசப் பயணிகளின் கூட்டம் திரள்கிறது. இவற்றைப் பார்ப்பதற்கு டிக்கட்டுகள் வாங்க வேண்டும். இது அவர்களுக்கு வருமானம் தரும் தொழிலாகவும் உள்ளது.

இந்த கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கென வீதியோரங்களில் கலை நுணுக்கம் வாய்ந்த நாடக அரங்குகள் காணப்படுகின்றன.



பாலித்தீவு மக்களிடம் நான் கண்ட மற்றுமொரு அற்புதமான பண்பு அந்த சமூகத்தினர் செல்லப் பிராணி களிடம் மிகுந்த அன்பு காட்டுகிறார்கள். நாய், பூனை, பறவைகள் என்பவற்றை வளர்க்கிறார்கள். குரங்குகளும் கூட சுதந்திரமாக உலாவித் திரிகின்றன. அவை மனிதர்களுக்குத் தொல்லை கொடுப்பதில்லை. குறிப்பாக நாய்களை மிக அன்புடனும் மரியாதையுடனும் நடத்து கிறார்கள். யாரும் அவற்றை கல்லெடுத்து அடிப்பதில்லை.

இந்து மதத்தில் வைரவப் பெருமானுக்கு ஒரு தனிச் சிறப்பிடம் இருக்கிறது. பாலித்தீவைப் பொறுத்தமட்டில் அவர்கள் வைரவப் பெருமானுக்கு தனியான கோயில் கட்டி வணங்குவதுடன் வைரவரின் வாகனமான நாய் களுக்கும் உரிய மரியாதை கொடுக்கிறார்கள். வீடுகளில் தாராளமாக நாய்களை வளர்க்கின்றார்கள். வீதிகளிலும் அவை சுதந்திரமாக உலாவித்திரிகின்றன.



புனித நீராடல்

கம்பராமாயண, மகாபாரதக்கதைகள் அவர்கள் வாழ் வில் மிக நெருக்கமானதோர் இடத்தைப் பிடித்துள் ளன. விஷ்ணுவையும், அவரது அவதாரமான இராமரையும் கடவுளாகப் போற்றுவதுடன் அனுமானையும் வணங்கு கிறார்கள். அதனால் பாலி தீவு குரங்குகளின் தேசமாகவும் உள்ளது.




### வானர வனம்

இவர்கள் குரங்குகளுக்கென தனியான வனம் ஒன்றை அமைத்துள்ளார்கள். அதற்கு வானர வனம் என்றே பெயர் வைத்துள்ளார்கள். 14 ஆம் நூற்றாண்டில் ஜெல் ஜெல் அரச வம்சத்தில் வந்த பெஜொங் மன்னன் காலத்தில் இந்த வானர வனம் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கஜமுகன் தேவாலயத்தின் நுழைவாயில்



இவ் வனத்தின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட மான வானர கோயிலில் அனுமானை மையமாகக் கொண்டு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

இந்த வனத்தில் மொத்தமாக அறுநூறு வானரங்கள் வாழ்கின்றன. இவை ஐந்து தலைமைகளின் கீழ் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரதேசத்தில் இவ்வனத்துக்குள்ளேயே வாழ்கின்றன. இந்த வனத்தை ஊடறுத்து ஆறு ஒன்று பாய்கின்றது. வரட்சிக் காலத்தில் ஏனைய நீர் நிலைகளில் நீர் வற்றிப்போகும் போது இவ்வாற்றில் மட்டுமே நீர் கிடைப்பதால் ஏனைய வானரக் கூட்டங்கள் நீருக்காக இங்கே வரும் போது அவைகளுக்கிடையில் சண்டை சச்சரவு உருவாகுவதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் இவ் வனம் அமைக்கப் பட்டதன் கோட்பாடு இயற்கையுடன் எவ்வாறு இணைந்து வாழலாம் என்பதை உலகுக்கு பறை சாற்று வதற்காகும் என இவ்வனத்தின் நிர்வாகிகள் தெரி விக்கின்றனர்.

இந்த வனத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று கோயில்கள், புனித நீரூற்றுடன் கூடிய கோயில், சுடு காட்டு ஆலயம், மயானம், சமய நிகழ்ச்சிகள் நடத்துவதற் கான திறந்த மேடை, மரப்பலகையால் அமைக்கப்பட்ட நீண்ட பாலத்துடனான பாதை, இராட்சத பூத உருவங்கள் (Dragons), இராட்சத விலங்குகளின் உருவங்கள் (Reptiles, Lazars) விகடத்தனமான உருவ அமைப்புக்கள் ஆகியன பார்ப்போர் மனங்களைக் கவர்வனவாக உள்ளன.



சிவலிங்கம்

அர்ச்சனைத் தட்டு





விஷ்ணு சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











## சரஸ்வதிதேவிக்கான கோயில்

சரஸ்வதிதேவிக்கான கோயில்கள் பல்வேறு கோபுர கலசங்களுடன், எங்கு நோக்கினாலும் கலையம்சம் பொருந்திய சிலைகள், சிற்பங்களுடன் கலைக் கோயில்களாகக் காட்சித் தருகின்றன. விசாலமான தெப்பக்குளமும் அவற்றில் அன்ற லர்ந்த வளர்ந்த பெரிய செந்தாமரை மலர்களும் காணப்படுகின்றன.

கஜமுகன் தேவாலயம் நீண்ட பிரதான வரலாற்றைக் கொண்டது. முன்பு ஒரு காலத்தில் மக்கள் நடமாட்டம் நிறைந்த பரபரப்பான ஒரு வணக்கத்தலமாக விளங்கி பின்னர் அழிவுற்றதற் கான பல்வேறு சான்றுகளுடன் விளங்குகின்றது. பெரும் பள்ளத்தாக்கை நோக்கி சலசலத்து ஓடும் சிற்றாறு அதில் காணப்படும் சிறு நீர்வீழ்ச்சி, சிதைவுற்ற புத்த, விநாயகர் கோயில்களின் பாரிய சிற்பங்கள், சிலைகள், கட்டிடங்கள் என்பன பிரமிப்பூட்டுவனவாகத் திகழ்கின்றன.

## பெங்ளிபுரான் கிராமம்

பாலித்தீவு மக்கள் மிக மெது மெதுவாகவே நகரமயமாக்கத்தை நோக்கி பயணிக்கிறார்கள். கூடுமானவரை கிராமிய பாரம்பரியங்களை அப்படியே பேணிவருகிறார்கள். இங்கு புகையிரத சேவை இன்னமும் அறிமுகப்படுத்தப்படவில்லை.

முச்சக்கர வண்டி எனப்படுகின்ற ஆட்டோக்களை யும் காண முடியவில்லை. இவ்விதம் சுட்டிக் காட்டப்பட்டு எல்லா கிராமிய அம்சங்களையும்





அரச்சனைப் பொருட்களை கையிலேந்தி ஆலயம் செல்லும் நங்கையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















எங்கு நோக்கினாலும், சரஸ்வதிதேவிக்கான கோயில்கள் பல்வேறு கோபுர கலசங்களுடனும் கலை அம்சம் பொருந்திய சிலைகள் சிற்பங்களுடன் கலைக்கோயில்களாகக் காட்சித் தருகின்றன.

ஒருங்கே கொண்ட பெங்ளிபுரான் கிராமத்துக்கு எங்களை எமது சுற்றுலா வழிகாட்டி வயான் நகாரா அழைத்துச் சென்றார்.

பாலியின் கிழக்குப் பிரதேசத்தில் பட்டு மலைச்சாரலில் சமுத்திரத்தில் இருந்து 700 மீற்றர் உயரத்தில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது. அதனால் உடலுக்கு இதமான மிதமான குளிர்கால நிலை நிலவுகின்றது. சுமார் நூறு ஏக்கர் நிலத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் பாலித்தீவுக்கேயுரிய பாரம்பரியக் கலையம்சங்களுடனும், வர்ணங்களுடனும் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தை படிக்கட்டுகளுடன் கூடிய அகலமான வீதி இரண்டாகப் பிரிக்கின்றது. வீதியின் இரண்டு புறமும் கலையம்சங்களுடனும் சிற்ப வேலைப் பாடுகளுடனும் மதில்கள் காணப்படுகின்றன.


இந்தக் கிராமத்தின் நிர்வாகம் இந்தியாவின் பஞ்சாயத்து அமைப்பைப் போன்ற ஒரு குழுவால் மேற்கொள்ளப்படுகின்றது. இக்குழுவுக்கு ஒரு தலைவரும், அங்கத்தினர்களும் காணப்படுகின்றனர். அவர்களுக்கேயுரிய சட்டதிட்டங்களும் உள்ளன. அவை மீறப்பட்டால் தண்டிக்கும் அதிகாரமும் அக்குழுவுக்கு உண்டு. இவர்கள் பல்வேறு விதமான கைப்பணிப் பொருட்களை கலை வேலைப்பாடுகளுடன் தயாரிக்கின்றனர். சிற்பம், ஓவியம், சங்கீதம் என்பன இவர்களின் பிறப்புடன் ஒட்டியதாகக் காணப்படுகின்றன. ஊரின் நடுநாயகமாக விளங்கும் கோபுரத்துடன் கூடிய ஆலயம் அருகாமையில் அமைந்துள்ள மூங்கில் காடு என்பன இக்கிராமத்துக்கு மேலும் மெருகு சேர்க்கின்றன. மூங்கில்களிலான கலைப் பொருட்கள், வீட்டுத்தள பாடங்கள், வீட்டுக்கூரை முதலானவைகள் இவர்கள் வாழ்வியலுடன் மிக நெருங்கிக் காணப் படுகின்றன.

நமது நாட்டிலும், தமிழ் நாட்டிலும் வாழ்வியல் வரலாற்றுடன் மிக இணைந்திருக்கும் பனையோலை மற்றும் கிடுகுக் கடகங்கள் இன்றும் இவர்களின் வாழ்வில் மிக நெருங்கிய பண்டப் பொருட்களாக இருக்கின்றன. சந்தைக்குச் செல்லும் இவர்கள் வாங்கிய பொருட்களை இக்கடகங்களில் போட்டு தலையில் வைத்து கையால் பிடிக்காமலேயே கரகாட்டக்கார நங்கைகள் போல் நடந்து வருவது கண்ணுக்கு மிக ரம்மியமான காட்சியாகக் காணப்படுகிறது. அவர்கள் உடுத்தும் ஆடையணிகளிலும் வர்ணங்கள் மின்னிப் பிரகாசிக்கின்றன.

நீங்களும் கூட மனதுக்கும், உடலுக்கும் சற்றே ஓய்வு தேவைப்படும்போது இந்தோனேசியாவின் இந்தப் பாலித்தீவுக்குப் போய் வாருங்கள். மனதுக்கு இதமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயம்





தெய்வத்தமிழ்ச்சுடர்
**இராசையா ஸ்ரீதரன்**

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் தம்மை நினைத்து வணங்கி நிற்கும் அடியார்களுக்கு அருள்புரியும் நோக்கில் 'ஸ்ரீ வைத்தீஸ்வரன்' என்ற திருநாமத்துடன் எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலந்தான் யாழ். வண்ணை பெரிய சிவன் கோவில் ஆகும். இந்த அருள்மிகு ஆலயம் யாழ்ப்பாண நகரின் மத்தியிலே வானளாவ உயர்ந்த இராஜ கோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

வாழ்ந்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தனிப்பெரும் தலைவனாக மிளிரும் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் பேரருட் கருணைத்திறம் சொல்லிடங்காது. எல்லையில்லாத கருணையே உருவான தனிப் பெரும் வடிவத்துடன் காட்சித்தருகின்ற ஆதியும் அந்தமும் இல்லாத அருட் பெருஞ் சோதி மயமான ஆண்டவன் கை தொழுபவர்களைக் கைவிடமாட்டான்.

அருள்மயமான இந்த ஆலயம் மிகவும் புராதனமானது. சரித்திரப் பிரசித்தி பெற்ற புனிதம் நிறைந்த புண்ணியத் திருத்தலமான இந்த ஆலயம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து ஈழமணித் திருநாட்டிலே யாழ்ப்பாணத்துக்கு வந்து குடியேறிய செட்டியார் பரம்பரையிலே வந்து தோன்றிய திருவாளர் கோபாலச் செட்டியார் வைத்திலிங்கம் செட்டியாரால் நிர்மாணஞ் செய்யப்பட்டு அன்றுமுதல் இன்றுவரை அவர்கள் சந்ததியினரால் பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகின்றது.

பொன்னம்பலத்தாடும் ஆடல்வல்லான் கனக சபையான் ஸ்ரீ நடராஜப் பெருமான் இந்த வண்ணையம்பதியிலே ஸ்ரீ வைத்தீஸ்வரனாக அருள்பாலிக்கும் அழகு வார்த்தையிலடங்காது. இந்த ஆலய ஸ்தாபகரின் தந்தையாரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலச்செட்டியார் ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் குடும்பமாக யாழ்ப்பாணத்துக்கு வந்து, ஒல்லாந்த அரசில் மொழிபெயர்ப்பாளராக இருந்து வந்த கொச்சிக் கணேசையர் என்ற அந்தண சிவாச்சாரியாரிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். அவர் விநாயகப் பெருமானை வணங்க விரும்பி ஒரு வேப்பமரத்தின் கீழ் விநாயகர் திருவுருவம் ஒன்றை வைத்து வழிபாடியற்றி வந்தாராம் அதுதான் இப்போது யாழ்.வேம்படிப் பிள்ளையார் கோயிலாகும்.

இவ்வாறிருக்கும் போது ஒருநாள் ஐயரவர்கள் காரணமேதுமின்றி கோபாலச் செட்டியாரைக் கண்டித்த வேளை அதனை விரும்பாத செட்டியார் தமது வேலையினின்றும் விலகி பலசரக்கு வியாபாரம் செய்துவந்தார். அத்தருணம் அவர் ஒல்லாந்த தேசாதிபதி வீட்டுக்கும் பொருள் அனுப்பி வந்தார். அப்போது அவருடைய உண்மையான நேர்மை, நல்லொழுக்கம், விசுவாசம் முதலியவற்றால் தேசாதிபதியின் மனைவியார் செட்டியாரிடம் மிகுந்த அன்பும் பரிவும் அபிமானமும் உள்ளவரானார்.





அந்த நாட்களில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த கூழங்கைத் தம்பிரான் என்பவர் செட்டியாருடன் நட்பு பாராட்டி சிநேகிதம் கொண்டார். அந்தக் கூழங்கைத் தம்பிரான் இலக்கண இலக்கிய அறிவாற்றலும் சித்தாந்த சாஸ்திரத்தில் பாண்டித்தியமும் கொண்டவராகக் காணப்பட்டார். சிறந்த சிவ பக்தரான இவர் அங்கு இருக்கும் போதுதான் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தார். அவ்வேளை கூழங்கைத் தம்பிரான் அவர் புதல்வனை ஆசீர்வதித்து 'இம்மகன் நற்காரியங்கள் பல செய்வதற்குப் பிறந்துள்ளான் இப்பிள்ளைக்கு வைத்திலிங்கம் என்று பெயரிடுக' என்று பணித்தாராம். அவர்களும் அவ்வண்ணமே பெயர் சூட்டி மகனை வளர்த்து வந்தனர்.

இப்படி இருக்கும் நாளில் வைத்திலிங்கம் வளர்ந்து பன்னிரண்டு வயதான போது, ஒருநாள் மகனைத் தந்தை கடையில் விட்டு விட்டுப் போனார். அவ்வேளை தேசாதிபதியின் மனைவி கடைக்கு வந்து 'செட்டியார் எங்கே?' என்று வினவினார். அப்போது வைத்திலிங்கம் ஒரு மாதுளங்கனியை வந்த அம்மையாரிடம் கொடுத்தார். அதை அன்போடு வாங்கிக் கொண்ட அவர் போசனம் முடிந்து செட்டியார் வந்ததும் பையன் அவரது மைந்தன் என்று அவர் மூலம் அறிந்து வைத்திலிங்கத்தைத் தனது வாகனத்தில் ஏற்றி தம்முடைய இல்லத்துக்கு அழைத்துப் போனார். தேசாதிபதிக்குப் புத்திர பாக்கியம் இல்லாததால் வைத்திலிங்கம் அவர்களது அரண்மனையிலேயே சுவீகாரப் புதல்வன் போல வளரலாயினார். அப்போது அவர்களிடம் ஒல்லாந்த பாஷையைக் கற்றுக்கொண்ட அவர் பதினெட்டு வயது வரை தேசாதிபதி வீட்டிலேயே இருந்து வந்தார்.

ஒருநாள் தேசாதிபதி முத்துக்குளிப்பை குத்தகைக்கு விட்டுப் போவதாகக் கேள்விப்பட்ட வைத்திலிங்கம் தன் வளர்ப்புத் தாயான அம்மையாரிடம் அந்தக் குத்தகையை நான் வாங்க விரும்புகிறேன் என்றாராம். அதைக் கேட்டு அம்மையார் ஒரு கடிதம் எழுதி அவரிடம் கொடுத்து கச்சேரியில் தேசாதிபதியிடம் கொடுக்குமாறு பணித்தார். அவ்வண்ணம் செய்த போது தேசாதிபதி முகமலர்ச்சியுடன் வைத்திலிங்கத்தைப் பார்த்து 'நீ முத்துக்குளிப்பை குத்தகைக்கு வாங்கப் போகிறாயா' என்று வினவ 'ஆம் ஐயா!' என்ற போது பக்கத்திலே பிரதான மந்திரியாயிருந்த கொச்சிக்கணேசையர் 'அடடே! நீயும் முத்துக் குளிப்புக் குத்தகை எடுக்கப் போகின்றாயா?' என்று ஏளனமாகச் சொன்னாராம் அவருடைய மனோ பாவத்தை அறிந்த தேசாதிபதி கோபித்து ஐயரை பார்த்து 'குத்தகையை இந்தப் பையன் பெயருக்கு எழுதிப்பிணையாக என் பெயரை எழுதுக! என்றாராம்.' உடனே ஐயரும் அவ் வண்ணமே எழுதினார்.

குத்தகையை எடுத்த வைத்திலிங்கம் அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமமாக ஒழுங்காகச் செய்து ஒரு கணிசமான தொகையை இலாபமாகப் பெற்றார். தொடர்ந்து இதனைச் செய்தவர் முத்து வியாபாரம் செய்து கொண்டே கூழங்கைத் தம்பிரானிடம் உயர் கல்விதனைக் கற்றார். இவருடன் கூடியிருந்து கல்வி கற்றவர்கள் தென்கோவை நெல்லைநாத பண்டிதரும் மாதகல் மயில்வாகனப் புலவருமாவர்.

முத்து வியாபாரத்தில் ஈடுபட்ட வைத்திலிங்கம் யானை வியாபாரமும் செய்யத் தொடங்கினார். இவ்வாறு வர்த்தகஞ் செய்த செட்டியார் பெரும் பொருளீட்டி பெரிய தனவந்தரானார். வியாபாரம் மூலமாக முன்னேறி வந்த வைத்திலிங்கம் செட்டியார் தமக்கென ஒரு மாளிகையை அமைப்ப தற்கு எண்ணியபோது கூழங்கைத் தம்பிரான் செட்டியாரிடம் "உம்மை இந்த நிலைக்கு உயர்த்தி அருள்புரிந்த இறைவன் வைத்தீஸ்வரப் பெருமானு க்கு யாழ்ப்பாணத்திலே ஓர் ஆலயம் அமைக்க வேண்டும்" என்று சொன்னாராம். அதைக் கேட்ட செட்டியாரும் சம்மதம் தெரிவித்தாராம்.





இக்காலகட்டத்தில் சைவக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டுத் தங்களது சமயத் தைப்பரப்பி வந்த ஒல்லாந்தர் மத்தியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க அயராது பாடுபட்ட வைத்திலிங்கச் செட்டியார் தம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்தி யாழ். நகரில் ஒரு கோயிலைக் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசின் அனுமதியைப் பெற்றார்.

உடனே காலந்தாழ்த்தாது மளமளவெனத் திருப்பணி வேலைகளை ஆரம்பித்த வைத்திலிங்கம் செட்டியார் 1787 இல் தொடங்கி 1790 இல் கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்து 'ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கு அழகான ஆலயம் அமைத்து 1790 சித்திரைத் திங்கள் பூர்வ பட்ச ஸப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திர நன்னாளில் மஹா கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தார். அத்தோடு பரிவாரக் கோயில்களையும் கட்டி நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடைபெறச் செய்தார். எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கட்டியெழுப் பிய ஆலயம் நல்ல முறையில் பரிபாலனஞ் செய்யப் பட வேண்டும் என்ற வேணவாவினால் தாமே முன்னின்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நித்திய நைமித்தியங்களுடன் நியமந் தவறாத ஆறுகாலப் பூஜையும் நிகழ வகை செய்த பெருமை இவரையே சாரும்.

எல்லாம்வல்ல சிவபெருமான் இங்கே வைத்தீஸ்வரனாக எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். உண்மையான நம்பிக்கையுடன் யார் யார் எல்லாம் வந்து வழிபாடியற்றுகின்றார்களோ அவர்களுக்கு வாழ்வில் சகல சௌகரியங்களும் கிட்டும் என்பது உண்மை.

மகிமையும் மகத்துவமும் மிக்க இந்த ஆலயத்தைத் தாமே பரிபாலித்து வந்த பின்பு தமது புத்திரர்களான ஸ்ரீகோபாலச் செட்டியார், ஸ்ரீகந்தப்பச் செட்டியார் ஆகியோரிடம் ஒப்புவித்துவிட்டுத் தமது இறுதிக் காலத்தைக் காசியிற் கழிக்க விரும்பினார். அந்த வகையில் இந்தியாவிலே காசிக்குச் சென்று அங்கு வாழ்ந்திருந்தார்.

இவ்விதம் வாழ்ந்திருக்கையில் இறைவனின் திருவருளால் தமது இறுதிக் காலத்தை உணர்ந்து கொண்ட செட்டியார் கருங்கல்லினால் ஒரு தொட்டி அமைப்பித்து அத்தொட்டியில் ஆரோ கணித்து கங்கை நதியில் இறங்கினார். இவரைப் போல ஒரு மகா புண்ணிய புருஷர் இவ்வுலகில் இல்லவே இல்லை என்று கூறின் மிகையாகாது.

இந்த அருள்மிகுந்த ஆலயத்திலே தெற்கு நோக்கி வீற்றிருக்கின்ற அம்பிகை வாலாம்பிகை தேவிக்கு வருடாந்த திவ்ய மஹோற்சவமானது ஆடித் திங்கள் புனித புண்ணிய தினமான ஆடிப்பூர நன்னாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்து நாட்களுக்கு மிகவும் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகின்றது.

இக்கோயிலின் திருவிழாக்களை கண்டு தரிசிப்ப தற்காக யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு அணி திரண்டு வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










வைத்தீஸ்வரன் வீற்றிருக்கும் இப்பழைமைமிகு ஆலயமானது செட்டியார் அவர்களது வழித் தோன்றல்களாலேயே இப்போதும் பரிபாலிக்கப் பட்டு வருகின்றது.

இது ஒரு புறமிருக்க சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்கள் எனப் போற்றி வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது முதற் பிரசங்கத்தை இங் கேயே நிகழ்த்தினார். பின்பு வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளையும் அதன் பிறகு சங்கர சுப்பையரும் செய்து வந்தனர். இவர்களுக்குப் பிறகு முத்தமிழ் வித்தகர் சி.எஸ்.எஸ். மணிபாகவதர் கதாப் பிரசங்கம் செய்ததும் இந்த ஆலயத்திலேயே!

சைவத்துக்கும் தமிழுக்கும் நிலைக்களானாக விளங்கிய இந்திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் வைத்தீஸ்வரன் மீது கூழங்கைத்தம்பிரான் ஒரு தனிக் கவிபாடியுள்ளார். மேலும் கொச்சிக் கணேசையர் தையல்நாயகி மீது திருவூஞ்சலும் அராலி விஸ்வநாத சாஸ்திரியார் வண்ணைக் குறவஞ்சியும் வட்டுக் கோட்டைக் கணபதி ஐயர் வைத்திலிங்கக் குறவஞ்சி யும் பாடியிருக்கின்றார்கள்.

கோபாலச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் அவர்களால் யாழ்.நகரில் பெரும்பாலான பகுதிகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலங்களில் ஒரு பகுதி பாடசாலைகள், மதவழிபாட்டுத் தலங்கள், சன சமூக நிலையங்கள் போன்று சமூக அமைப்புக் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஆரியகுளச் சந்தியில் உள்ள நாகவிகாரை இந்நிலங்களின் ஒரு பகுதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற சிறப்பு மிக்க இந்த ஆலயம் செட்டி யார் பரம்பரையில் வந்த வைத்திலிங்கச் செட்டியார் என்பவராலேயே இப்போது பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இத்தலத்ததுக்குரிய தீர்த்தம் வண்ணார் பண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி சமுத்திர சங்கம தீர்த்தமாகும்.

ஒல்லாந்தர் காலத்து அரசாட்சி காலம் முதலாக தெற்கே வேம்படிப் பிள்ளையார் (கடைத்தெரு) கோயிலும் கற்கட்டு வைரவர் கோயிலும் பண்ணை முத்துமாரி அம்மன் கோயிலும் வடமேற்கே ஐயனார் கோயிலும் காளிகோயிலும் பரிவாரக் கோயில் களாகும்.

இத்தகைய சிறப்புமிக்க ஆலயத்தில் தற்போது வருடாந்த திவ்யமகோற்சவமானது பங்குனி உத்தரத்தைத் தீர்த்தநாளாகக் கொண்டு பத்தொன்பது நாட்கள் நடைபெறும். கடைசியாகத் திருக் கல்யாணமும் பூங்காவனமும் நிகழும். வண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் வாலாம்பிகை அம்மை யோடு அருட்காட்சி தரும் இவ்வாலயத்தைப் புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்தோர் ஒருமுறையாவது தரிசனஞ்செய்து வழிபாடியற்ற வேண்டியது தலையாய கடமையாகும். சைவ சமயிகளாக வாசஞ்செய்யும் அடியார்கள் இப்புனித தலத்துக்கு வந்து அம்மையப்பரை வணங்கிச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்க இறையருள் வேண்டிப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிழ மரம்

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்
M.D (S) India சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

பொதுக்குணம் (பூ)

**"வெகுவனல் மாகும் விரக மிகவுண்டாம்**
**முகர அரோசி முறியும் மிகவும்**
**மகிழச் சுரத வகை காட்டு மாதே!**
**மகிழத் துரும மலர்க்கு"**

பொருள்

பூ உடல் வெப்பத்தையும் புணர்ச்சியிலிச்சையையும் உண்டாக்கும். இதை முகரச் சுவையின்மை நீங்கும்.

(பூ)

**"நேரிட்டவர்கிளைப்பை நீக்கிப் பிணியிபத்தை**
**வீரிட்டலற விரட்டுமே - சீரிட்ட**
**வாசமலரின் மனத்தாற் குணத்தோடே**
**கேசரமென் றோது மகிழ்"**

பொருள்

மகிழம் பூ மணம் இளைப்பை நீக்கி அழல் குற்றத்தை தணிக்கும்.

விதை

**தாதுவை நன்மெய்யழகைச் சத்தியுண்டாக்கி விடுந்**
**சீதனமென் பார்கலிக்கஞ் செய் மருந்தாம் வாதை**
**மலத்தை விழித்தோடத்தை வல்விடத்தை வெப்பை**
**விலக்கு மகிழம் விதை.**

பொருள்

இஃது உடலழகு, வன்மை, ஆண்மை இவைகளைப் பெருக்கும். ஆயினும் ஐயத்தை மிகுதிப் படுத்தும் இது கண்ணிற்கு இடும் மருந்துகளில் சேரும் உடலின் வெப்பத்தை போக்கி கசியச் செய்து குற்றங்களைத் தன்னிலைப்படுத்தும் பல வகைப்பட்ட கொடிய நஞ்சு முறிவுக்காகக் கொடுக்கும் மருந்துகளில் சேர்ப்பதுண்டு. இதனை இலஞ்சி, கேசரம், வகுளம் என்றும் அழைப்பர்.

| | | |
|---|---|---|
| Botanical Name | : | Mimusops elengi |
| Family Name | : | Sapotaceue |
| English Name | : | Pointed Leaved ape |
| Sinhala Name | : | Munamal |

சிறுமரம் 4 - 5 மீற்றர் உயரமானது. எப்பொழுதும் பசுமையாக இருக்கும். தனியிலை பளபளப்பானது. 8 - 10 சென்ரி மீற்றர் நீளமும் 2 - 3 சென்ரி மீற்றர் அகலமும் உள்ளது. தனி மலர் காம்புடன் இலைக் கோணத்தில் உண்டாகும். மலர்கள் மழுங்கிய வெண்மை நிறமானது. மலர்ந்ததும் காம்பிலிருந்து கழன்று விடும். 8 புற இதழ்களும் 8 அக இதழ்களும் இணைந்து இருக்கும். நறுமணமுடைய பூக்கள். மலர் வாடினாலும் மணம் இருக்கும். முட்டை வடிவ மஞ்சள் நிறமுள்ள சதைக் கனி நீளமானது விதையில் நறுமண எண்ணெய் உண்டு.

விதைகள் மூலமும் வேர்க்கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

மருத்துவப் பயன்கள்

★ மகிழ மரத்தின் பிஞ்சுகளை (2) வாயில்மென்று துப்பிவிட்டு வெந்நீரில் வாய் கொப்பளித்தால் பல் வலி தொல்லை தீரும்.
★ மகிழம் பூவை குடிநீரிலிட்டு 30 - 60 மில்லி காலை - மாலை குடிக்க உடல் வெப்பம் தணியும். உடல் வன்மைபெறும்.
★ பூக்களை சேகரித்து, நிழலில் உலர்த்தி, பொடித்து, அரித்து பொடியை முகர மூக்கால் நீர் பாய்ந்து தலைப்பாரம், மண்டைச்சளியை நீக்கும்.
★ பல் ஈறுகட்டி, பல் வலித்து முரசு கரையும் நிலைமைகளில் இதன் மரப்பட்டைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேகரித்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி நிழலில் உலர்த்தி பொடி செய்து பல்துலக்கி வரலாம். அல்லது ஒரு பங்கு பட்டைக்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக காய்ச்சி வாய் கொப்பளித்து வர பல்ஈறு இறுகுவதுடன் முரசால் இரத்தம் வடிதலும் நிற்கும். ஏனெனில் இதன் பட்டைக்கு துவர்ப்பு சுவையுண்டு.

★ மகிழம் மர இலைகளை சேகரித்து நன்கு கழுவி பன்னீர் சேர்த்து அரைத்து உடல் முழுவதும் பூசிக் குளித்தால் வியர்வை நாற்றம் நீங்கும்.

★ மகிழம்பூ, சாதிக்காய் (வெளிக்கோது நீக்கி) இரண்டையும் சம அளவு எடுத்து பொடித்து 2g அளவு காலை, மாலை சாப்பிட்டால் உடற்கட்டுக்குள் பலம் பெரும்.

★ மகிழம்பூ போட்டுக் காய்ச்சிய தண்ணீரை காய்ச்சிய பசும்பாலில் கலந்து குடிக்க ஆண்மை பெருகும்.

★ மகிழ மரப்பட்டையை போட்டு கொதிக்க வைத்த தண்ணீரால் குளித்து வந்தால் தோல் நோய்கள் குணமாகும்.



★ இதன் விதைகளை சுட்டு பொடி செய்து பல் துலக்கி வர பல்நோய்கள் நீங்கும்.

★ இதன் பழங்களை சாப்பிட்டு வந்தால் உயிர் சத்து A கிடைக்கும். ஆனால் சிறிது துவர்ப்பாகவும் இருக்கும்.

சாதாரணமாக நீங்கள் வீட்டில் தயாரிக்கக்கூடிய பற்பொடி.

| | |
|---|---|
| கடுக்காய்ப் பிஞ்சு | 70 கிராம் |
| மாயாக்காய் | 70 கிராம் |
| மகிழம்பட்டை | 140 கிராம் |
| கருவேலம்பட்டை | 140 கிராம் |
| ஓமம் | 10 கிராம் |
| காசுக்கட்டி | 70 கிராம் |

இவைகளை தனியே இடித்து பொடி செய்து கொண்டு ஒன்றாக கலக்கி கலந்து கொள்ளவும். இப் பொடியைக்கொண்டு நாளாந்தம் பல் துலக்கிவர பல்வலி, பல்நோய், இரத்தம் வருதல், வாய்நாற்றம் பல் கூச்சம் நீங்கும்.

வீட்டில் தயாரிக்கும் குளியல் பொடி

| | |
|---|---|
| மகிழம்பூ | 150 கிராம் |
| சந்தனம் | 150 கிராம் |
| பச்சைப் பயறு | 100 கிராம் |
| கோரைக் கிழங்கு | 100 கிராம் |
| வெட்டிவேர் | 100 கிராம் |
| உலர்ந்த எலுமிச்சம் பழத்தோல் | 100 கிராம் |

மேற்கண்ட மூலிகைகளை உலர்த்தி, பொடி செய்து உடம்பு முழுக்க தேய்த்து குளிக்கவும். சவர்க்காரம் பயன்படுத்த வேண்டாம். சொறி, சிரங்கு, வரட்சி என்பன தோலில் ஏற்படாது. இதே பொடியை தலைக்கு வைத்து முழுகி வர பொடுகு நீங்கும். முடி மிருதுவாகவும் மணத்தோடும் இருக்கும்.

பவள மல்லிகைப் பூக்களைச் சேகரித்து கசக்கி சாறு பிழிந்து அத்துடன் மகிழம் பூக்களையும் கலந்து மேற்படி சாறுகளை சூரிய ஒளியில் நன்றாக உலர்த்தினால் சாந்தாக மாறிவிடும். அதை பொட்டாக உபயோகிக்கலாம். ஆனால் நிறைய பூக்கள் தேவைப்படும். மிகவும் உயர்ந்த மூலிகைச் சாந்தாகும். இதனால் சருமத்தில் ஒவ்வாமை ஏற்படமாட்டாது. முகச் சுருக்கம் நீங்க, கசகசாவை ஊற வைத்து அரைத்து முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து மகிழம்பூ ஊறிய குடிநீரால் கழுவ தோல் சுருக்கம் மறையும்.

★ கரும்புள்ளிகள் மறைய சாதிக்காயை மகிழம்பூ ஊறிய குடிநீரில் வைத்து அரைத்து தடவலாம்.

★ மகிழம்பூ விதைகளை பொடித்து, நெய் கூட்டி அரைத்து சீலையிற் தடவித் திரியாக்கி குழந்தைகளுக்கு கீழ் வாயிற் செருக மலக்கட்டு நீங்க மலம் இலகுவாக வெளியேறும்.

★ மகிழம்பட்டை அவித்த குடிநீரால் புண்ணைக் கழுவ புண்கள் இலகுவாக ஆறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரத நாட்டிய நிருத்த உருப்படி மரபின் ஆரம்பம்

# அலாரிப்பு

சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பாண்டிச்சேரி, பல்கலைக்கழகம்

I

பரத நாட்டிய மரபில் நிருத்த, நிருத்திய, நாட்டிய என்னும் பிரிவுகள் அடங்கியுள்ளன. இந்த பரத நாட்டிய மரபில் நிருத்த வகை ஆடல் முறையின் முக்கியத்துவம் என்ன? அந்த ஆடல் முறையின் பூர்வாங்கப்பகுதியில் முதலில் ஆடப்படும் உருப்படி என்ன? என்பன நாட்டிய மரபில் முக்கியவிடயம்.

நிருத்தம் - என்பது அழகிய உடல் அசைவுகளைக் கொண்டது. உடலின் அழகினையும் அதன் நெளிவு சுழிவுகளையும், தாள, லய தீர்மானங்களையும், பாத பேதங்களின் நிலைகளையும், வல்லின மெல்லின சொற்கட்டுக்களையும் உள்ளடக்கியது. காண்பவர் மனதை காந்தமென இழுப்பதோடு ஆடுபவர்களுக்கு ஆனந்தத்தைத் தருவது.

நிருத்தம் அறியாது பரத நாட்டியத்தில் இருக்க முடியாது. இந்நிருத்தம் ஆங்கிக அபிநயத்தின் பகுதியாவதோடு முக்கிய பகுதியும் ஆகும். இது பிரத்தியேகமான கருத்தினை வெளிப்படுத்தாது. ஆனால் கலா ரசனைக்காக ஆடப்படுவது.

நாட்டிய சம்பிரதாயத்தில் பூர்வாங்கம், உத்திராங்கம் என்ற இருபகுதிகள் உள்ளன. பூர்வாங்கம் என்றால் முற்பகுதி, உத்திராங்கம் என்றால் பிற்பகுதி. பூர்வாங்கப்பகுதியின் முக்கிய ஆடல் வடிவமே இந்த நிருத்தம். நாட்டியத்தின் ஒரு பகுதியாக நிருத்தம் அமைகின்றது.

இந்தப் பகுதியில் ஆடப்படும் ஆடல் உருப்படிகள் தேவர்களையும், மூதாதையர்களையும், அரசர் களையும் திருப்திப்படுத்துவதற்கு ஆடப்படுகின்றது. இந்நிருத்த வடிவத்தில் மிக முக்கியமாகத் திகழ்வது அலாரிப்பு.

சாதாரண ஒரு நாட்டியக் கச்சேரி கடவுள் வணக்கம் என்ற ரீதியில் 'அலாரி'ப்புடன் தொடங்குகின்றது. எண்ணத்தில் நின்று சுவைதரக்கூடிய நிருத்த பேதங்களும் பல தாள ஜதிகளும் கலந்த ஒரு உன்னத அமைப்பு என்று இதனைச் சொல்லாம். தொடக்கத்தில் அழகு செறிந்த அடிப்படை அசைவுகள், ஒரு ராகத்தின் ஆரோகண, அவரோகண கிரமத்தின் உயிர்த்துடிப்பு அறிமுகமாவது போல அறிமுகப்படுத்தப்படுகின்றன.

நிருத்த ஆடலை நிகழ்த்துபவர் அரங்கில் ஆடும் முதல் நடனம் அலாரிப்பு. நாட்டிய அமைப்பிலும் இசை அமைப்பிலும் அலாரிப்பு தனித்தன்மை வாய்ந்தது. நாட்டியத்தில் அடவுகளும், இசையில் அதற்கான சொற்கட்டுக்களும் இந்த உருப்படியில் முதன்மை பெறுகின்றன.

II

இக்கட்டுரை அலாரிப்பு என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? நிருத்த உருப்படி மரபில் இதன் முக்கியத்துவம் என்ன? அவ்வுருப்படி எவ்வாறு உடலின் அழகியல் தன்மையை வெளிக் காட்டி நிற்கின்றது என்பது பற்றிய விடயங்களை முன்நிறுத்தியே அமைகின்றது.

பரதநாட்டியக் கலைஞர்கள் கற்கும் நடன உருப் படியின் முதல் அசைவு அலாரிப்பு (alarippu)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனப்படுகிறது. நட்டுவனார் துணை கொண்டு இந்நடன அசைவு செய்யப்படும். நடனக் கலைஞரின் உடலை இலகுவாக்க உதவுவது இந்த உருப்படி. நடனத்தின் ஆரம்பப் பாடவரிசைகளான தட்டடவு, நாட்டடவு என்ற வரிசைகளில் தேர்ச்சி பெற்றபின் நர்த்தகி பழகுகின்ற முதல் உருப்படி அலாரிப்பு. ஆரம்ப அடவுப் பயிற்சிகளில் பெற்றுக் கொண்ட அனுபவத்துடன் இவ்வுருப்படியை ஆடுவதற்கு தயாராகுவார்கள். இந்த உருப்படி முக்கிய அடவுகளின் கோர்வையாக அமையப் பெற்றது.

அலரு, அலரி, அலாரிப்பு, அலர்ப்பு, அல்லரிப்பு என்ற பல வேறு பெயர்களில் அலாரிப்பு என்ற சொல்லை குறிப்பிடுவர். அலாரிப்பு என்ற சொல் தமிழில் மலர்வது என்று பொருள்படும். இவ்வுருப்படி நடனமாடுபவர் தன் உடலை மலராக நினைத்து அதனைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போல் அமைக்கப்பட்டுள்ளது. நர்த்தகி தன்னை இறைவனுக்கு அர்ப்பணிப்பதே இதன் குறிக்கோளாகும். உருப்படிகளின் வரிசையில் இது ஆரம்ப நிகழ்ச்சியாக விளங்கும்.

'பல்லவி' என்றொரு ஒடிசி நடனத்தினுடைய பெயரும் துளிர்விடுதல் என்ற பொருள்படும். அலாரிப்பும் துளிர்விட்டு மெல்ல மலரும் நடனமாகும். ஆனால் இவ்வுருப்படி செய்முறையில் செய்யப்படுமாயின் அழகாக இருக்கும். இது எவ்வித பாடல்களோ, அபிநயங்களோ இன்றி ஆடப்படும் உருப்படியாகும். அலாரிப்பை ஐந்து தாள ஜதியிலும் செய்யலாம்.

III

நிருத்த வடிவமான அலாரிப்பில் உடலின் அனைத்து அங்கங்களும் செயற்படுகின்றது. தலையில் இருந்து பாதம் வரை உள்ள உடல் அங்கங்கள், பிரத்தியாங்கங்கள், உபாங்கம் என்று பாகுபடுத்தியுள்ளனர். இவ்வுறுப்புக்கள் யாவும் தனித்தனியாகவும், மற்ற உறுப்புக்களோடு சேர்த்தும் அசைக்கப்படும்.

இவ்வசைவுகள் ஒவ்வொன்றிக்கும் தனித்தனிப் பெயர்கள் உண்டு. தலைக்கு மேல் இருந்து அஞ்சலி கஸ்தத்துடன் ஆரம்பமாகும் இந்நடனம் கடவுள், குரு, சபை ஆகியோருக்கு வந்தனம் கூறுவதாக அமைந்துள்ளது. ஹஸ்தத்தை தலைக்கு மேல் பிடித்தால் கடவுளுக்கும், நெற்றிக்கு நேராக குருவுக்கும், இதயத்திற்கு நேராகப் பிடித்தால் சபையோருக்கும், என்ற கிரமத்தில் இது அமைந்து இருக்கின்றது. இம் மூன்று அஞ்சலிகளை அபிநயதர்பணமே கூறியுள்ளது. ஆனால் தலைக்கு மேல் உள்ள அஞ்சலி மட்டுமே இன்று அபிநயிக்கப் படுகின்றது.

அஞ்சலிக்கைகளுடன் கழுத்தாட்டல், பின் தோளை அசைத்தல், கைகளை அசைத்தல், முழங்கை, தலை வளைத்தல், பாதங்களை உபயோகித்தல் என்று படிப்படியாக இந்த உருப்படியில் அடங்குவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண், முகம், கழுத்து ஆகியவற்றின் அசைவுகள் நாட்டியத்தின்போது பயன்படுத்தப்படும் உறுப்புகளில் மிக முக்கியமானது. கை, கால்களின் அசைவுகளும் அலாரிப்பில் இடம்பெறுகின்றன. இவ்வுருப்படி ஆரம்பிக்கும்போது கால்கள் சமபாதத்திலும், திருஷ்டி சமத்திலும், கைகள் நாட்டியாரம்பத்திலும் இருக்கும். கண், கழுத்து, தோள் ஆகியவற்றின் அசைவுகளுடன் படிப்படியாக ஆரம்பித்து கைகள், கால்களின் அசைவுகளுடன் தொடர்ந்து அரைமண்டி, முழுமண்டி நிலைகளில் அமர்ந்து இதனைச் செய்வர்.

கழுத்தின் அசைவில் கழுத்து மட்டுமே குறுக்காக அசைய வேண்டும். இதனை 'அட்டமி' என்று அழைப்பர். அதனை 'சுந்தரீச' என்று சமஸ்கிருதத்தில் கூறுவர். அட்டமி ஆட்டத்திற்கு சிறப்புக் கொடுக்கும் தன்மையானது. அலாரிப்பில் பலவித மண்டலபேதங்களும், முத்திரைகளும், சிரோபேதங்களும், திருஷ்டி பேதங்களும், க்ரீவா பேதங்களும் இடம்பெறுகின்றன.

மண்டலங்களில் ஸ்தானம், ஆயத்தம், ப்றேங்கனம், பார்வசுசி, ஸ்வஸ்திகம் போன்ற பேதங்கள் இடம்பெறுகின்றன. பதாகம், திரிபதாகம், அலபத்மம், கடஹாமுகம், குழிபதாகம் போன்ற முத்திரைகளும், சமம், உத்வாஹிதம், அதோமுகம், கம்பிதம் போன்ற சிரோ பேதங்களையும், சமம், சாசி, ப்ரலோகிதம், உள்லோகிதம் போன்ற திருஷ்டி பேதங்களையும், க்ரீவா பேதத்தில் 'சுந்தரி' என்பதையும் கொண்டதாக அமைகின்றது. இந்த அலாரிப்பில் நேர்கோடு, சாய்கோடு, படுக்கைக் கோடு, வளைகோடு போன்ற கணிதக் கோட்டுத் தன்மைகள் உடலின் அசைவில் காணமுடியும்.

அலாரிப்பு ஒரு சிறு தீர்மானத்துடன் முடிவடைகின்றது. இத்தீர்மானம் அநேகமாக துரித காலத்தில் அமைந்திருக்கும்.

IV

அடவுகளால் ஆன அலாரிப்பு நிருத்த வகைக் குரியது. இதன் சொற்கட்டு 'சங்கீத சாராமிருதம்' என்னும் நூலைத் தழுவி 'தத்தை தையும் தத்தாம் கிடதக' என்ற தத்தகாரச் சொற்கட்டுக்களை கொண்டு தொடங்கி 'தாம் தித்தாம் தைத்தத் தை' என்ற சொற்கட்டு விளம்ப, மத்யம, துரித காலங்களிலும் மூன்று முறை உச்சரிக்கப்படும். இதற்கு முதல் நின்றும் பின் அமர்ந்தும் இறுதியில் நகர்ந்தும் ஆடவேண்டும். இவ்வுருப்படி தாளத் திற்கு முக்கியத்துவம் கொடுப்பது. திருஷ்டம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் என்னும் தாளவகைகளில் அலாரிப்பு ஆடப்படும். ஐவகை நடையும் கூடிய பஞ்சநடை அலாரிப்பு என்ற வகையில் வெவ்வேறு தாள நடைகளில் அலாரிப்பு



கண், முகம், கழுத்து ஆகியவற்றின் அசைவுகள் நாட்டியத்தின்போது பயன்படுத்தப்படும் உறுப்புகளில் மிக முக்கியமானது. கை, கால்களின் அசைவுகளும் அலாரிப்பில் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலாரிப்பு எவ்வித பாடல்களோ, அபிநயங்களோ இன்றி ஆடப்படும் உருப்படியாகும். அலாரிப்பை ஐந்து தாள ஜதியிலும் செய்யலாம்.



அமையலாம். எந்தத் தாள நடையில் அமைந்தாலும் கடைசியில் ஒரு தீர்மானம் அல்லது முத்தாய்ப்பு கொண்டு அமைவது அலாரிப்பின் தனிச்சிறப் பாகும்.

இது ஐந்து ஜாதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தா லும், பெரும்பாலும் திஸ்ரம், மிஸ்ரம், இரண்டுமே வழக்கத்தில் உள்ளன.

திஸ்ர ஏக தாளத்தில் அமையும் அலாரிப்பின் கடைசித் தீர்மானம் பின்வருமாறு அமையும்.

தாகத ஜம் தரிதா // ஜம் தரி ஜக தரி தை //

ததிங்கிண தொம் தக ததிங்கிண // தொம் தகதிகு ததிங்கிணதொம். //

தா.....// திரிகுடு தக திரிகுடு தக திருகுடு தக//

திரிகுடு தக திரிகுடு தக திருகுடு தக // தளாங்கு தக ததிங்கிணதொம் //

இத் தீர்மானத்தின் முடிவில் அலாரிப்பின் தொடக்கச் சொற்கட்டுக் கோவை முதற் காலத்திற் பாடி முடிக்கப்பெறும். இவ்வுருப்படி 'நாட்டை' இராகத்தில் பாடப்படுகிறது. இந்நிகழ்ச்சி மூன்று நிமிடங்களுக்குரியதாக அமைக்கப்பட்டுள்ளது.

V

அலாரிப்புக்கான இசை மூன்று வகையில் இடம் பெறும்.

1. நட்டுவ ஆசான் தாளத்தை கைத்தாளத்தில் தட்டிக்கொண்டு

தா தைய் தைய் // தத் தா கிடதக //

தாம் தித் தா.. // தைத் தத் தைத் //

என தத்தாகாரத்தில் சொற்கட்டு செல்லுதல் ஒரு முறை.

2. பக்க இசைப்பாடகர் சொற்கட்டுக்களை இசை ஸ்வரங்கள் ஏற்றிப் பாடும் முறையும் உண்டு.

க்ா ஸ்ா ஸ்ா // க்ா ஸ்ா ஸ்நிநிப //

தா தைய் தைய் // தத் தா கிடதக //

ஸ்ா க்ா ஸ்ப // ஸ்நிநிப பா ஸ்ா //

தாம் தித் தா.. // தைத் தத் தைத் //

என பாடும்முறை இருக்கின்றது. பொதுவில் இம்முறை பல நாட்டிய அரங்குகளில் காண்பது அரிது.

3. நட்டுவாங்கம் செய்யும் ஆசான் சொற்கட் டுக்களை தத்தாகாரச் சொற்களில் சொல்ல, அதே தாள நடையிலான அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல் ஒன்றை பாடகர் பின்னணியில் பாடுவது மூன்றாவது முறையாகும்.

அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள் சந்தக் குறிப்புக்களால் அமையப்பெற்றன. சில திருப்புகழில் உள்ள சந்தச் சொற்கட்டுக்கள் ஐந்து ஜாதிகளுக்கும் இசைந்து கொடுப்பதாலும், தாள வேறுபாட்டுக்கு இசைந்து கொடுப்பதாலும் இத் திருப்புகழினை அலாரிப்பு சொற்கட்டு சொல்லும் போது பின்னணியாக இசைக்கும் முறையும் உண்டு. பொதுவாக இம்முறையை பலர் அதன் ரசனைக்கு பாடும் முறையினைப் பின்பற்றி வருகின்றனர்.

தகிட தகிட என்ற திஸ்ர அலாரிப்பு தனன தனன தனன தனன என்ற சந்த அமைப்பிலான திருப்புகழ் பாடலுக்கு ஏற்ப அமையப்பெற்றுள்ளது.

சந்தம் - தனன -தனன -தனன -தனன

பாட்டு - தமரு மமரு மனையு மினிய

தகதிமி தகஜுனு என்ற சதுஸ்ர தாளத்தில் அமைந்த அலாரிப்பு தனதன - தனதன என்ற சந்த அமைப்பில் அமைந்த திருப்புகழுக்கு ஒத்துக் காணப்படுகின்றது.

சந்தம் - தனதன - தனதன

பாட்டு - நிறைமதி - முகமெனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ததீம்தக ததீம்தக என்ற கண்ட அலாரிப்பு தனா தன - தனா தன என்ற சந்த அடிப் படையில் அமைந்துள்ள திருப்புகழுக்கு ஒத்துக் காணப்படுகின்றது.

சந்தம் - தனா தன - தனா தன- தனா தன- தனா தன

பாட்டு - நிராதமய புராதன பராபர வராம்ருத.

அதேபோல மிஸ்ர அலாரிப்புக்கு 'முத்தைத் தரு பத்தித்திருநகை' என்ற திருப்புகழை பாடும் மரபும் காணப்படுகின்றது.

பாடலின் அமைப்புக் கலைந்து விடாமலும், அலாரிப்பின் தன்மை குலைந்து விடாமலும், தாளம் தவறாமலும் இச்செயல் முறை அமைய வேண்டும். நிகழ்ச்சி துவக்கத்தில் சூடு பிடிப்பதற் காக ஆடும் உருப்படி. அலாரிப்புக்கு முன் புஷ்பாஞ்சலி என்ற ஓர் உருப்படி ஆடப்படுகின்றது. சில வேளை புஷ்பாஞ்சலியுடன் அலாரிப்பு இணை ந்து ஆடும் முறையும் உண்டு. பொதுவாக நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடுகின்ற அரங்க பூஜை என்று இதனைக் கருதலாம். மொத்தத்தில் இதன் குறிக் கோள் தெய்வத்திற்கு வழிபாடு என்பதே ஆகும்.

## VI

இது கடந்த நூற்றாண்டில் உருவாகிய உருப்படி, இதைக் கடவுள் வழிபாடு என்று குறிப்பிடுவர். ஆலய வழிபாட்டில் புஷ்பாஞ்சலி இருந்தது. புஷ்பாஞ்சலி பண்டைய காலம் தொட்டு ஆடப்பட்டு வரும் நடனம். இது அரச சபைகளிலும் ஆலயங்களிலும் ஆடப்பட்டு வரலாயிற்று. இன்று மயூர அலாரிப்பு மற்றும் வாகன அலாரிப்பு என்ற வடிவங்கள் பரவலாக அரங்கில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

## VII

அலாரிப்புக்குள் ஆன்மிகத் தன்மை கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் இந்த உருப்படி மேடையில் நிகழ்கின்றபோது இரு சிருங்கார ரசம் மேலோட்டமாக தெளிவாகும். இந்த அலாரிப்புக்குள் ரஸம் இல்லை என்ற எண்ணம் இருக்கலாம். உணர்வும் பாவமும் தானாக உண் டாகும். மனநிறைவாகிய ரஸமும் அலாரிப்புக்கு உண்டு. மனம் ஒன்றுபட்டு லயிக்கும் எந்த ஒரு நடனமும் பாவ ரஸத்தை அளிக்கும். இதனை பரதர்

யதோ ஹஸ்தஸ் ததோ திருஷ்டி
யதோ திருஷ்டி ததோ மனகா
யதோ மனஸ் ததோ பாவாஹ
யதோ பாவஹஸ் ததோ ரஸஹ

அதாவது

கை வழி நயனம் செல்ல
கண்வழி மனமும் செல்ல
மனம் வழி உணர்ச்சி செல்ல
அதனின்று சுவை பிறக்கும்

நிருத்தம் செய்பவர் யாவரும் கையோடு கண்களை யும் அசைத்து மனதை அதில் செலுத்தி அனுபவித்து மகிழ்ந்தால் பார்ப்பவருக்கு ரஸிப்பதற்கு எண்ணம் இருக்கும்.

பரத நாட்டியத்தின் முக்கியமான கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கமாகக் கொண்ட உருப்படி அலாரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெரிந்த பெயர் தெரியாத விபரம்

# மங்கலம் நல்கும் மஞ்சள் குங்குமம்

கலாபூஷணம், வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்

உசாத்துணைப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

நமது முன்னோர்களின் வாழ்வியல் முறையானது எளிமை மிகுந்ததும், ஏற்றம் அளிப்பதுமான தன்மை வாய்ந்தது. குறைந்த செலவில் நிறைந்த நன்மைகளைப் பெற்று வாழ்ந்தார்கள். எளிமையான எழில் மிக்க வாழ்க்கையினை உணவு, உடை, உறைவிடம் மூன்றிலும் கடைப்பிடித்தார்கள். குறிப்பாக உறைவிடங்களை மண்ணால் சுவர் எழுப்பி வைக்கோலால் கூரை வேய்ந்து ஆனந்தமாக ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். "புருஷே சதாயுஸூ என்பதற்கொப்ப நூறு ஆண்டுகள் நலமுடன் வாழ்வை எதிர்கொண்டனர். கண்கள் ஒளி இழக்கவில்லை. பற்கள் விழவில்லை, மயிர் நரைக்கவில்லை. உடல் திரைக்கவில்லை. சங்கப் புலவன் பிசிராந்தையார் கூறுவது போன்று;

யாண்டு பலவாக நரையில ராகுதல்
யாங்காகிய ரென வினவுதிராயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான்

என்று கவலையற்ற வாழ்க்கை முறையினால் முடி நரைக்கவில்லை என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறுகிறார்.

இன்று நாம் இத்தகைய நிலையைக் கற்பனையில் தான் காணமுடியும். பிறக்கும் பொழுதே குழந்தைகள் கண்ணாடியுடன் தான் இன்று பிறக்கின்றன. கர்ணன் கவச குண்டலத்தோடு பிறந்ததைப் போல. பாதிக் குழந்தைகளுக்கும் மேலே பள்ளிக்கூடப் புத்தக மூட்டையைச் சுமந்து சுமந்து முதுகு கூன் விழுந்து கேள்விக்குறியான எதிர் காலங்கள். சத்தான உணவுகளை விட்டு விட்டு சக்கை (fast foods etc) உண்ணும் அவலம்.

பெண்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? நாகரிக உடை என நினைத்து அநாகரிகத்தை விலைக்கு வாங்குபவர்களை நாம் பார்க்கிறோம். நாள் முழுவதும் அழகு சிகிச்சை நிலையங்களையே அடைக்கலமாகக் கொள்பவர்களையும் பார்க்கி றோம். இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்க முயலும் இவர்களை நினைத்தால் பரிதாபமே எஞ்சுகின்றது. நமது முன்னோர்கள் பயன்படுத்திய இயற்கை மூலிகைகள் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயற்கையைத் தேடிச் சீரழிவது எதற்காக? பல பெண்களுடைய முகங்கள் பருக்களாலும், தேமலாலும் பொலி விழுந்து காணப்படுவதன் காரணம் கண்ட கண்ட லோஷன்கள், கிரீம்கள் ஆகியவற்றைப் பயன் படுத்துவதே.

முகத்தின் எழிலிற்கு மெருகூட்டுவது மஞ்சளும் குங்குமமுமே.

மஞ்சள் வாசனைத் திரவிய வகையைச் சார்ந்தது. சிறப்பாக ஆலயங்களில் மஞ்சள் மாவை அபிஷேகத்திற்குப் பயன்படுத்துவர். தேவியின் மங்கலப் பொருள்களில் மஞ்சளும் ஒன்று. மங்கலம் நிலைக்க சுமங்கலிப் பெண்கள் தங்கள் கணவன் மாரின் நீண்ட ஆயுளுக்காக மஞ்சள் பூசிக் குளிப்பார்கள். திருமாங்கல்யத்தில் மஞ்சள் பூசு வார்கள். மஞ்சள் கிருமி நாசினி. அழகைத் தரும் அருமையான மூலிகை. மஞ்சள் பூசிக்கொள்பவரின் முகத்தில் சுருக்கம் விழாது. கண்களைச் சுற்றி கருவளையம் இருக்காது. என்றும் இளமையுடன் இருக்கச் செய்யும்.

ஸ்ரீ காரணாகமத்தில் ஹரித்ரா சூர்ணஸம் யுக்தம் ஸ்நபனம் சோட சாத்மகம் எனக் கூறப்பட்டுள்ளது.

சம்பாரப் பொருட்களில் ஒன்று. இது ஒருவித புல்வகையைச் சேர்ந்தது. கிழங்குகளாக வேரில் விளையும். சுண்ணாம்பு சேர்த்த நீரிலே கொதிக்க வைத்து நன்கு காய வைப்பார்கள். பசு மஞ்சள், முண்டா மஞ்சள், வரளி மஞ்சள், கறி மஞ்சள். மருத்துவப்பயன் மிக்க கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள் எனப் பலவகையுண்டு. மஞ்சள் பொடி இல்லாத இந்தியச் சமையலே இல்லை எனலாம்.

உணவிற்கு வண்ணத்தையும் சுவையையும் கொடுப்பதோடு வயிற்றுப்புண்கள் வராமலும் பாது காக்கிறது. உடலில் தோன்றும் கொப்புளங்கள், சீழ் கட்டிகளுக்கும் மஞ்சள் பொடியை நல்லெண்ணையில் கொதிக்க வைத்துப் போட கட்டிகள் உடையும். புண் விரைவில் ஆறும். மஞ்சள் அழகு சாதனம் மட்டுமல்ல ஆரோக்கியத்திற்கும் அடித்தளமானது.

மஞ்சளைப் போன்றே குங்குமமும் தேவிக்குரிய காப்பு. இறை திருவுருவங்களுக்கு குங்கும அபிஷேகம், குங்கும அர்ச்சனை செய்தால் நாம் விரும்பிய வரங்களை இறைவன் தந்தருள்வான். புகழ் ஓங்கும், செல்வம் சேரும். குங்குமத்தை பச்சைக் கற்பூரத்துடனும் குங்குமப்பூவுடனும் பனி நீரில் குழைத்து அம்பிகைக்கு சாத்தினால் இஷ்ட சித்திகளைப் பெறலாம் என ஸ்ரீகாரணாகமம் கூறும்.

பெண்களை எவ்வளவு தான் அணி மணிகளைக் கொண்டு அழகு செய்தாலும் நெற்றியில் வைக்கும் குங்குமப் பொட்டே அழகின் நிறைவாகிறது. மேலும் மாந்திரீகங்கள் இளம் பெண்களை வசியம் செய்து காளிக்கு நரபலி இடுவதும் வழக்கமாக இருந்தது. அந்த இளம் பெண்களை புருவ மத்தியான ஆஞ்ஞாசக்கரத்தில் வைத்துத் தான் வசியப்படுத்து வார்கள். புருவ மத்தியில் குங்குமமோ, திருநீறோ, ஸ்ரீ சூர்ணமோ அணிந்தால் மந்திரவாதிகளின் மந்திரம் பலிதமாகாது. குறிப்பாக சுமங்கலிப் பெண் கள் நெற்றியில் குங்குமம் அணிவது மிக மிக முக்கிய மானது. அது கணவர் உயிருக்கு பாதுகாப்பாகும். குங்குமம் அழியக்கூடாது. அழிந்தால் அது தீய சகுனமாகும்.

கம்பராமாயணம் அயோத்யா காண்டம் மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் கூனியின் சொற்கேட்டு கைகேயி தசரதனிடம் இரண்டு வரங்களைக் கேட்பதற்கு தன்னை தயார் படுத்திக் கொள்கிறாள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




முதலில் தனது அலங்காரங்களை களைந்து அவலமாய்த் தோன்றுகிறாள். தனது கூந்தலில் சூடிய மலர்களைச் சிதைக்கிறாள். அடுத்து,

**விளையும் தன் புகழ் வல்லியை வேர்அறுத்து என்ன**
**கிளைகோள் மேகலை சிந்தினள்; கிண்கிணியோடும்**
**வளைது றந்தனள் மதியினில் மறுத்துடைப்பாள் போல்**
**அளக வாள் நுதல் அரும்பெறல்த் திலகமும் அழித்தாள்**

கூந்தலில் சூடிய மலரைச் சிதைத்தல்; குலப் புகழை வேரறுப்பது போன்று மேகலையை அறுத்தல்; கைவளையல்களை துறத்தல்; எல்லாவற்றிக்கும் மேலாக பெறுவதற்கு அருமையான மங்கலக் குங்குமத்தையும் அழித்தல் இவையெல்லாம் அமங்கலக் குறிகள். பின்னால் தசரதன் இறந்து கைகேயி கைம்மைக் கோலத்தை அடையப் போகிறாள் என்பதனை கம்பநாட்டாழ்வார் குறிப்பினுள் குறிப்பாக தனது கவிதையில் காட்டுகிறார்.

குங்குமத்திற்குப் பதிலாக இன்று பெண்கள் ஒட்டுப் பொட்டு அணிகிறார்கள். ஆனால் அதில் தெய்வீகமும் இல்லை. குங்குமத்தின் பொலிவும் இல்லை. சில பெண்களுக்கு குங்குமத்தினால் ஒவ்வாமை உண்டாகி நெற்றியில் புண் ஏற்படுகிறது. கடையில் வாங்கும் குங்குமம் தான் இத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றது. வீட்டில் தயாரிக்கும் கும்குமம் சுத்தமானது.

காஞ்சிப் பெரியவரின் குங்குமம் தயாரிக்கும் முறை;

30 தோலா கெட்டியான உருண்டை மஞ்சள் சிறு சிறு துண்டங்களாக்கி, அதன் எடைக்குச் சமமான எலுமிச்சை பழச்சாறு விதையில்லாமல் வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். பழச்சாற்றில் பொடி செய்த வெண்காரமும் படிக்காரமும்(மூன்று தோலா) போட்டுக் கலக்கி மஞ்சள் துண்டுகளை அதில் ஊறவிட வேண்டும். வாயகன்ற பாத்திரமென்றால் நலமானது. ஒரு நாளைக்கு மூன்று முறை கிளறி விட்டு நிழலில் காயவிட்டு சுண்ட விடவேண்டும். பின்பு உரலில் இடித்து, சலித்து, சுத்தமான பசுநெய் இரண்டு தேக்கரண்டி கலந்து, கா[illegible]

பத்திரப்படுத்தி வைக்கவும். பரிசுத்தமான குங்குமம் தயார். நாளும் அணிந்து நலம் பெறுக.

குங்குமத்தின் பெருமையினை உரைக்கும் குங்கும பஞ்சதசி தோத்திரத்தையும் இணைத்துச் சிந்திப்போம்.

### குங்கும பஞ்சதசி

1. குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமது அளிப்பது
குங்குமமாவது தொல்வினை தீர்ப்பதே

2. விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிகளை ஆள்வதும் குங்குமமாமே

3. தஞ்சமென்றோரைத் தடுத்தாண்டு கொள்வதும்
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபயமளிப்பதும்
காஞ்சி காமாக்ஷியின் குங்குமமாமே



4. நாற்பது மீவது நாரணி குங்குமம்
பொற்பினை ஈவது பூரணி குங்குமம்
சிற்பரமாவது ஸ்ரீ சக்ர குங்குமம்
கற்பினை காப்பதும் குங்குமமாமே

5. செஞ்சுடர் போன்றது சீரான குங்குமம்
கொஞ்சும் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்கள் அடக்கி அருள்வதும்
காசி விசாலாக்ஷியின் குங்குமமாமே

6. நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறிவீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அர்ச்சித்த குங்குமமாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ராஜஸ்தானின் கவர்ச்சிமிகு

# ஆமெர் கோட்டை



ராஜஸ்தானில் ஆமெர் என்னும் இடத்தில் அமைந்திருக்கிறது (Amer) கோட்டையாகும். இதனை அம்பர் (Amber) கோட்டை என்றும் அழைப்பர். ஜெய்ப்பூரில் இருந்து பதினொரு கிலோ மீட்டருக்கு அப்பால் 4 சதுர கிலோமீட்டர் பரப்பில் அமைந்திருப்பது ஆமெர் நகரமாகும். ஜெய்ப்பூர் பிரதேசத்தில் மலைஉச்சியில் இதுவோர் பிரதான சுற்றுலா மையமாகத் திகழுகின்றது.

ஆமெர் நகரத்தை ஆரம்பத்தில் உருவாக்கியவர்கள் மீனாஸ் (Meenas) ஆவார். பின்னர் ராஜா மான்சிங் (டிசம்பர்-21, 1550 - ஜூலை 06,1614) இந்நகரை ஆண்டார். மரபுரீதியான இந்து மற்றும் ராஜபுத்ர பாணி கட்டடக்கலைக்குப் பெயர்பெற்றது ஆமெர் கோட்டை ஆகும். பளிங்குக்கல் மற்றும் சிவப்பு மண்கல்லில் கலைத்துவமாக செதுக்கப்பட்டு எளிமை, வனப்பு, மற்றும் புதிராகவும் காட்சியளிக்கிறது.

பென்னம்பெரிய அகழிகளும், வரிசையாக கதவுகளும், நிறைய பாதைகளும் கொண்ட ஆமெர் கோட்டை மோத்தா (Maota) வாவியைப் பார்த்தவாறு அமைந்திருக்கிறது. ஆமெர் மாளிகைக்கு பிரதானமாக இங்கிருந்துதான் தண்ணீர் பெறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவப்பு மணல் கற்களினாலும், பளிங்குக் கற்களாலும் கட்டப்பட்ட இக்கவர்ச்சிமிகு மாளிகை, நான்கு மட்டங்களில் ஒவ்வொன்றிலும் முற்றங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இம்மாளிகையில் பொதுமக்கள் சந்திப்பு மண்டபம், தனிப்பட்ட ரீதியான மக்கள் சந்திப்பு மண்டபம், கண்ணாடி மாளிகை அல்லது ஜெய் மந்திர், சுக் நிவாஸ் என நான்கு பகுதிகள் உள்ளன.



ஆமெர் கோட்டையானது ஆமெர் மாளிகை எனவும் புகழ்பெற்றது. ராஜபுத்திர மகாராஜாக்களும், அவர்களது குடும்பத்தவர்களும் இம்மாளிகையில் வாழ்ந்தனர். கோட்டையின் கணேஷ் கதவுக்குப் பக்கத்தில் உள்ள நுழைவாயிலில் ஷிலாதேவி ஆலயம் உள்ளது. 1604ஆம் ஆண்டில் ராஜா மான் சிங் ஜெஷோர் ராஜாவைத் தோற்கடித்தபோது, இவ்வாலயம் அவருக்கு வழங்கப்பட்டது. (ஜெஷோர் தற்போது பங்களாதேஷில் இருக்கிறது)

ஜெய்கார்ஹ் கோட்டையின் வழியில் உள்ள இந்த மாளிகை, மலை உச்சியில் உள்ளது. இம் மாளிகையும் கோட்டையும் ஓர் உபபாதையினால் தொடர்புபடுத்தப் பட்டிருக்கிறது. போர்க்காலத்தில் அரச குடும்பத்தினர் இப்பாதைவழியே பாதுகாப்பாக ஜெய்கார்ஹ் கோட்டைக்குத் தப்பிச்செல்ல முடியும்.



ஆமெர் மாளிகைக்கு தினமும் சுமார் 5 ஆயிரம் பார்வையாளர்கள் விஜயம் செய்கின்றனர் எனவும் 2007 ஆம் ஆண்டு இம்மாளிகைக்கு 14 இலட்சம் பார்வையாளர்கள் விஜயம் மேற்கொண்டனர் எனவும், அகழ்வாய்வு மற்றும் அருங்காட்சியக இலாகா அதிபர் தெரிவித்திருக்கிறார். 2013ஆம் ஆண்டு ராஜஸ்தானின் ஏனைய கோட்டைகளுடன் ஆமெர் கோட்டையும் உலக மரபுரிமைச் சின்னமாக உலக மரபுரிமைக் குழுவினால் பிரகடனப்படுத்தப்பட்டது.




சீல்கா ரீலாவின் (கழுகுமலை) உச்சியில் உள்ள அம்பிகேஷ்வர் ஆலயத்தின் பெயரில் இருந்துதான் அம்பர் அல்லது ஆமெர் என்ற பெயர் வந்தது. சிவனையே உள்ளூர் மக்கள் அம்பிகேஷ்வர் என்னும் பெயரால் அழைக்கின்றனர். துர்க்கா தேவியின் பெயரில் இருந்தே அம்பா என்ற பெயர் கோட்டைக்கு வந்ததாக உள்ளூர் கிராமியப் பாடல் ஒன்று தெரிவிப்பதாகக் கூறுவர்.



மீனா சந்ததியினரால் கட்டப்பட்ட மத்தியகால கோட்டை அமைப்புகளின் பல பாகங்கள், இடித்தழிக்கப்பட்டோ, அல்லது மாற்றங்கள் செய்யப் பட்டோ உள்ளன. இருப்பினும் 16 ஆம் நூற்றாண்டில் ஆமெர் கோட்டையின் கவர்ச்சிமிகு திருத்த வேலைப் பாடுகள் ராஜபுத்ர மகா ராஜாக்களால் மேற்கொள்ளப் பட்டவை. இவை நன்கு பராமரிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இம்மாளிகை நான்கு பிரதான பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு, ஒவ்வொன்றும் அதற்குரிய வாயில் கதவு மற்றும் முற்றத்துடனும் உள்ளன.

சுராஜ் பொல் (சூரிய வாயில்) பிரதான நுழைவு வழியாகும். இது முதலாவது பிரதான முற்றமாக விளங்கும் ஜாலெபி சவுக்கத்திற்கு இட்டுச் செல்லும். படைகள் போர்களில் வெற்றிபெற்று வந்தபின், போர்ப்படையணிகளை நடாத்திக்காட்டும் பகுதி இதுவாகும். இப்படை அணிவகுப்பு மரியாதைகளை அரச குடும்பத்தினர் கண்டு களிப்பார்கள். அரச குடும்பத்துப் பெண்களும் நேரடியாகப் பார்த்து ரசிக்கும் படியாக இப்பகுதி மாளிகைக்கட்டடங்களின் ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. காவலர்களின் அணிவகுப்புகளையும் மகாராஜாக்கள் இங்கிருந்து பார்வையிடுவார்கள்.

முதலாவது முற்றத்தில் ராஜபுத்திர மகாராஜாக்கள் வணங்கிய அழகிய சிலாதேவி ஆலயம் காணப் படுகிறது. 16 ஆம் நூற்றாண்டில் மகாராஜா மான்சிங் காலத்தில் இருந்து வருடாந்தம் இங்கு இடம்பெற்று வந்த எருமைமாடு பலியிடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வந்து 1980களில் நிறுத்தப் பட்டது. மகாராஜாக்களின் தனிப்பட்ட மாளிகை களுக்குச் செல்லும் நுழைவுப்பகுதி கணேஷ் வாயில் கதவு (இந்துக்கடவுளான கணேசர்) உள்ளது.

இரண்டாவது முற்றத்தில், பொதுமக்கள் மண்டபம் அமைந்திருக்கிறது. 27 தூண்களுடன் ஓர் உயரமான அரங்காக, கம்பீரமாகக்காட்சிதரும் இம் மண்டபத்தில் அரசர் பொதுமக்களைச் சந்தித்து, அவர்களது குறைகளைக் கேட்பதுடன் மனுக்களை யும் பெற்றுக்கொள்வார்.


மஹாராஜாக்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தவர் களின் மாளிகைகள் மூன்றாம் முற்றத்தில் அமைந்தி ருக்கின்றன. கணேஷ் வாயில் கதவின் மூலமாகவே இங்கு பிரவேசிக்கலாம். செல்லும் வழியில் மொசைக் மற்றும் அழகிய சிற்பங்களும் காணப் படுகின்றன. இங்கு இரு கட்டடங்கள் காணப் படுகின்றன. முகலாய பூங்காக்களின் பாணியில் அமைந்த ஒருபூங்கா இவ்விரு கட்டடங்களையும் பிரிக்கின்றது.


நுழைவாயிலின் இடதுபக்கக் கட்டடம் ஜெய் மந்திர் என அழைக்கப்படுகிறது. கண்ணாடி அலங் காரம் செய்யப்பட்ட சுவர்களும், பலவண்ணக் கண்ணாடிக்கூரையுமாக, அமைந்த இக்கண்ணாடி மாளிகை (ஷீஷ் மஹால்) பளிச்சென்று காட்சி தருகிறது. இக்கண்ணாடிகள் குழிவு மற்றும் குவிவாக அமைந்து, அழகிய வண்ணங்களும் பூசப்பட்டிருப்பதால் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில், மின்னும் ஆபரணப்பெட்டிபோலத் தோன்றும்.

இம்மாளிகை 16 ஆம் நூற்றாண்டில் ராஜா மான்சிங் அவர்களால் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1727 ஆம் ஆண்டு பூர்த்தியாக்கப்பட்டது. ஜெய்ப்பூர் அரசின் ஆரம்பவருடமும் இதுவேயாகும். இருப்பினும் 1970 - 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மெல்ல மெல்ல அழியத்தொடங்கின. அதனையடுத்து தொடங்கிய திருத்த வேலைகள் தொடர்ந்தும் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இம் மண்டபத்தில் இருந்து மோத்தா (Maota Lake) வாவியைப் பார்க்கும் போது மிக ரம்மியமான காட்சியாக அது அமைந்திருக்கும்.

ஜெய்மந்திருக்கு எதிர்ப்புறமாக அமைந்திருப்பது பளிங்கினால் கட்டப்பட்ட களிப்பூட்டும் மண்டபம் (Pleasure Hall) சந்தன மரத்தினால் செய்யப்பட்ட கதவினூடாக இம் மண்டபத்துக்குச் செல்ல வேண்டும். இப்பகுதியில் ஒரு திறந்த கால்வாயின் ஊடாக ஒரு குழாய் மூலம் தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதால் இங்கு எப்போதும் ஒரு குளிர்மையான சூழல் நிலவும்.

## மாயாஜால மலர்

இங்கு கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக விளங்குவது, கண்ணாடி மாளிகையைச் சுற்றியுள்ள ஒரு தூணின் அடிப்பகுதியில் ஒரு பக்கத்தில் பளிங்கினால் உருவாக்கிக் காணப்படும் மாயாஜால மலர்ஆகும். இரண்டு வண்ணத்துப்பூச்சிகள் மேலே பறப்பதாக அமைக்கப்பட்ட இம்மலரில் ஏழு தனித்துவமான வடிவமைப்புகள் காணப்படுகின்றன. ஒரு மீன்வால், தாமரை மலர், படமெடுக்கும் பாம்பு, யானைத்தந்தம், சிங்கத்தின் வால், சோளப் பயிரின் காம்பு முனை, தேள் ஆகியவை இவ்வடிவங்களாகும். இப் பலகத்தை கைகள் பாதி மறைந்திருக்க, அக்கை களின் வழியாக இவை ஒவ்வொன்றும் தெளிவாக அமைக்கப்பட்டுக் காட்சிதருகிறது.

இம்முற்றப்பகுதியின் தென்திசையில், முதலாம் மான் சிங்கின் மாளிகை அமைந்துள்ளது. மாளிகைக் கோட்டையில் மிகப்பழைமையான மாளிகை இதுவாகும். இம்மாளிகையைக் கட்ட 25 வருடங்கள் பிடித்தன. முதலாவது ராஜா மான்சிங் (1589 - 1614) காலத்தில்தான் இம்மாளிகை கட்டிமுடிக்கப்பட்டது. வர்ண ஓடுகளால் கூரையும், மேல்மாடிகளும் அலங்கரிக்கப்பட்டு சுவர்ச்சித்திரங்களோடு அழகாகக் காட்சித்தரும். இதுவே பிரதான மாளிகையாகும். மாளிகை மத்தியில் அமைந்துள்ள காட்சிக்கூடத்தில் மகாராணிகள் சந்திப்பர்.

இக்காட்சிக்கூடத்தின் எல்லாப்பகுதிகளும், திறந்த பல்கணிகளைக் கொண்ட பல சிறிய அறைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. இம்மாளிகையில் இருந்து வெளியில் ஆமெர் நகருக்குச் செல்லலாம். பாரம்பரிய சிறப்புடைய இந்நகரத்தில், பல கோவில்கள், மாளிகை போன்ற வீடுகள் மற்றும் பள்ளிவாசல்கள் உள்ளன.

நான்காவது முற்றப்பகுதியில் உள்ள மாளிகைகளில், ஆசைநாயகிகள் உட்பட, அரச குடும்பத்துப் பெண்கள் வசித்தனர். இங்கு நிறைய அறைகள் இருக்கின்றன. இவற்றில் மகாராணிகள் வசித்தனர். எல்லா அறைகளும் பொதுவான நடைபாதையில் அமைந்தி ருந்தன. இங்கு மன்னர் வந்து சென்றாலும், எந்த மகாராணியைச் சந்திக்க வந்தார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. ஆமெர் நகரத்தில் ஆலயங்களைக் கட்டுவதில், மகாராணிகள் அக்கறை காட்டினர்.

- கங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய பரதநாட்டிய வித்தகி ஸஹானா பாலசுப்ரமன்யாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி, கொழும்பு, இந்திய கலாசார நிலையத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் சில காட்சிகள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத்துப்பூச்சி காதலர்கள்

## ஷேக்ஸ்பியரின் ரோமியோ – ஜூலியற் போல ஒரு பழைமைமிக்க சீன காதல் கதை

உலகப் பிரசித்தமான காதல் காவியத்தில் ஒன்றாக விளங்குவது ஷேக்ஸ்பியரின் ரோமியோ - ஜூலியற். அதேபோன்று பாரதத்தை எடுத்துக் கொண்டால் 'லைலா - மஜ்னு', 'தேவதாஸ்' போன்ற காதல் கதைகள் திரைப்படங்கள் மூலமாக, சிரஞ்சீவியாக நிற்கும் காதல் சிருஷ்டிகள்.

அவ்விதமே ரோமியோ - ஜூலியற்றுக்கு நிகரான ஒரு காதல் காவியமாக சீனாவின் 'வண்ணத்துப் பூச்சி காதலர்கள்' என வர்ணிக்கப்படும் லியங் ஷன்போ (Liaug shanbo) ஷீ யிங்ராய் (Zhu Yingtai) ஆகியோரின் இதிகாசக்காதல் கதை விளங்குகிறது.

கிழக்கு ஜின் (Jin) அரச வம்ச காலத்து (கி.பி. 265 - 420) கிராமியக் காதல் கதை இது வெனக் கூறப்படுகிறது.

சீனாவில் நான்கு மாபெரும் கிராமியக்காதல் கதைகள் உள்ளதெனவும் அதில் லியங்-ஷு கதையும் ஒன் றெனவும் கூறப்படுகிறது. ஷியாங் என்னும் இடத்தில் வாழ்ந்த ஷங்யூவின், செல்வச் செழிப்பு நிறைந்த ஷு குடும்பத்தில் ஒன்பதாவது பிள்ளை யாகவும் ஒரே புத்திரியாகவும் பிறந்தவள் ஷு யிங்ராய். வழமையாக பெண்பிள்ளைகள்





மேற்படிப்புப்படிக்க சீனாவில் அனுமதிக்கப்படுவ தில்லை. எனினும் ஷு மேற்படிப்புப்படிக்க மிகவும் ஆசை கொண்டாள். தான் எப்படியும் மேற்படிப்புப் படிக்க வேண்டும், அதற்குத் தனக்கு அனுமதி தரவேண்டும் என அவள் தனது தந்தையிடம் கெஞ்சினாள். தான் ஓர் ஆணாக வேடமணிந்து, ஓர் ஆணின் தோற்றத்தில் மறைந்து நின்று கற்கமுடியும் என வேண்டினாள்.

தந்தையும் தனது மகளின் வேண்டுதலைத் தட்ட முடியாமல், அவ்விதம் ஆண் வேடத்தில் மறைந்து நின்று கற்க ஒப்புக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஷு ஆண் வேடமணிந்து, மேற்படிப்புப் படிக்க, ஹாங்செள என்ற இடத்திக்குப் பயணமானாள். அவள் அவ்விதம் பயணம் போகும் வழியில் குவைஜி என்னுமிடத்தில் இருந்து (தற்போதை ஷோஸிங் என்னும் இடம்) வந்த மாணவனான லியங் ஷன்போ என்ற இளைஞனைச் சந்தித்தாள். இருவரும் கலந்துரையாடியபோது, அந்த முதல் சந்திப்பிலேயே இருவருக்கும், ஒருவர் மீது ஒருவருக்கு ஓர் இனம் புரியாத அன்பு பிறந்தது. எனவே அவர்கள் தமது அன்பின் உறுதிப்பாட்டினை நிலைநிறுத்தும் வகையில், வேய்ந்த கூரை போட்ட பாலத்தின், கூடார மண்டபத்தில் சிறிது மண்ணைக் கிள்ளி எடுத்து, தமது சகோதரத்துவ அன்பு என்றும் நிலைந்திருக்கும் என உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

அடுத்த மூன்று வருடகாலமும் அவர்கள் இருவரும் அன்பு கொண்டவர்களாகப் பாடசாலையில் தமது படிப்பினை மேற்கொண்டார்கள். இக்காலத்தில் ஷுவுக்கு லியங்மீது காதல் பிறந்தது. ஷுவுடன் இணைந்து கல்வியினைக் கற்றாலும் லியங் ஒரு புத்தகப் பூச்சியாகவே இருந்தான். தனது வகுப்புத் தோழனான ஷுவின் சில பெண்மைக் குண இயல்புகளை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒருநாள் ஷுவுக்கு, அவளது வீட்டில் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதாவது அவளை உடனடியாக வீட்டிற்குத் திரும்புமாறு பெற்றோர் அறிவித்திருந்தனர். எனவே உடனடியாகவே தனது பொருட்களை எடுத்துக்கொண்டு, லியங்கிற்குப் பிரியாவிடை சொல்லிவிட்டுப் புறப்படுவதைத் தவிர அந்த மாணவியான ஷுவிற்கு வேறு வழியிருக்கவில்லை.

'அன்பே லியங்! உன்மீது நான் ஆறாத காதலைக் கொண்டி ருக்கிறேன்! உன்னோடு நான் என்றென்றும் வாழ்வேன்! இது சத்தியம்' என்று தன் மனதிற்குள்ளே உறுதி பூண்டாள் அந்த இளம் யுவதி. அப்பாவியான இந்த இளம் மாணவி, தனது தலைமை ஆசிரியரின் மனைவியி டம் போய் தான் ஒரு ஆணல்ல எனவும், மேல் படிப்புக்காகத்தான் இப்படி ஒரு வேடமிட்டதாகவும் தான் லியங்மீது அன்பு கொண்டிருப்பதாகவும், கூறி தன்னிடம் இருந்த ஒரு 'ஜேட்' பதக்கத்தை திருமண நிச்சயதார்த்தப் பரிசாக அவனுக்கு வழங்கும் படியும் கொடுத்துவிட்டு பயணம் புறப்பட்டாள்.

தனது 'சத்தியம் பெற்ற சகோதரன்' வீட்டுக்குப் பயணம் செல்வதைப் பார்க்க, லியங் அவளுடன் 18 மைல்கள் கூடவே சென்றான். அப்படி அவர்கள் பயணம் செய்து கொண்டிருக்கையில், தான் உண்மையில் ஒரு பெண்தான் என்பதை ஷு மறைமுகமாக எடுத்துரைக்க முனைந்தாள்.



உதாரணமாக தாங்கள் இருவரும் 'ஒரு ஜோடி மன்டறின் வாத்துக்கள்' போல இருக்கிறோம் எனக் கூறினாள். (மன்டறின் வாத்துக்கள் என்றால் சீன கலாசாரத்தில் காதலர்களுக்கு ஓர் அடையாளம்) ஆனால் லியங் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவனாக இருந்தான். தனது தோழன் ஆண் வேடத்தில் இருக்கும் ஒரு பெண் என்ற சந்தேகம் கூட அவனுக்கு வரவில்லை. இறுதியில் ஷுவுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அந்த எண்ணத்தின்படி இறுதியாக தான் லியங்கிற்கும் தனது சகோதரிக்கும் மணம் செய்து வைக்க விரும்புவதாகவும் தான் அவர்களது திருமண ஏற்பாட்டாளராக நடிக்கவிருப்பதாகவும் கூறினாள்.

அவர்கள் பிரியும் கட்டத்தின்போது, "லியங்! பின்னர் ஒருநாள் எங்கள் வீட்டுக்கு வா! அப்போது எனது 'சகோதரி'யை மணம் முடிக்க நீ கேட்கலாம்!" என்றாள். பின்னர் இருவரும் சாங்லிங் அரங்கில் ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிய மனமின்றிப் பிரிந்தார்கள்.

சில மாதங்களுக்குப்பின் லியங், ஷுவின் இல்லத்திற்கு விஜயம் செய்தபோது தான் ஷு ஒரு பெண் என்பதை அறிந்து கொண்டான். அப்போது அவர்கள் ஒருவரோடு ஒருவர் அன்பு மீதூரப் பெற்றவர்களாக 'மரணம் வரை நாம் பிரியோம்' என உறுதிபூண்டு கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அந்த இளம் காதல் ஜோடிகளின் மகிழ்ச்சி நீடிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. காரணம் ஷுவின் பெற்றோர் அவளுக்கு செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த மா வென்சாய் என்பவனுக்கு திருமணம் பேசி நிச்சயித்திருந்தார்கள்.

அந்தச் செய்தியைக் கேள்வியுற்றதும் லியங்கின் உள்ளம், உடைந்து சுக்கு நூறாகிவிட்டது போல் ஆனது. "என் உயிரே! - நீ என்னை விட்டு நிரந்தர மாகவே பிரிந்து செல்லப் போகிறாயா?" என அவ னது காதல் உள்ளம் கதறி அழுதது. அவனால் அந்த மலை போன்ற சோகத்தைத் தாங்க முடியவில்லை. ஷுவை இழப்பது என்பதனை அவனால் நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. அவன் தனது ஆருயிர்த் தோழியை நினைத்து நினைத்து உருகியதால் அந்த அப்பாவி இளைஞனின் உடல் நிலை படிப்படியாக பலவீன முற்று கடும் நோயாளி யானான். கவுன்ரி நீதிவானாகப்பணி புரிந்த அவன், இறுதியில் அவனது பணிமனையிலேயே ஒருநாள் வீழ்ந்து உயிரை நீத்தான்.

மா மற்றும் ஷுவின் திருமணம் முடிந்து மணப் பெண்ணை மணமகன் அழைத்துச் செல்லும் திருமண ஊர்வலம் புறப்பட்டது. ஆனால் மேலும் நகர்ந்து செல்ல முடியாதவாறு காற்றுப்பலமாக வீசி தடுத்தது. அந்த வழியில்தான் லியங்கின் கல்லறை இருந்தது. அதை தாண்ட விடாமல் பலமான காற்றுத் தடுத்தது.

**தனது காதல் பொக்கிஷத்தின் கல்லறை தனது திருமண ஊர்வலம் செல்லும் வழியில் இருக்கிறது என அறிந்ததும் ஷு ஊர்வலத்தை விட்டு கல்லறைக்கு பாய்ந்தோடினாள்!**

லியங்கின் கல்லறை அங்கிருப்பதை அறிந்ததும் தனது இறுதி மரியா தையைச் செலுத்தும் பொருட்டு, மணப்பெண்ணான ஷு ஊர்வலத்தை விட்டு விலகி விரைந்தோடினாள். பெரும் சோகத்திற்கு உள்ளாகி அழுது புலம்பிய அவள் "கல்லறையே! திறந்து கொள்! கல்லறையே! திறந்து கொள்!" எனக் கெஞ்சி நின்றாள். ஆனால் என்ன ஆச்சரியம்! எதிர்பாராமல் 'திடீர்' எனப் பேரிடி ஒன்று வீழ கல்லறை வெடித்துத் திறந்தது! மறுகணம் தனது இனிய காதலன் லியங்குடன் சேர்ந்து கொள்ள அவள் கல்லறைக்குள் பாய்ந்தாள்!

உண்மைக் காதலில் கனிந்த அந்த உத்தமக் காதலர்களின் ஆத்மாக்கள், ஒரு ஜோடி வண்ணத்துப் பூச்சிகளாக உருவெடுத்தது. என்றென்றும் பிரியாமல் இருக்க மேலே ஒன்றாகப் பறந்து சென்றன.

இந்த அபூர்வமான காதல் காவியம் மற்றொரு விதமாகவும் சித்திரிக்கப் படுகிறது. அதாவது ஷு என்னும் அந்த சீன யுவதி மா என்பவரை திருமணம் செய்து கணவன் தனது இல்லத்திற்கு அவளை அழைத்து செல்லும் பொருட்டு படகில் யுயோ நதியை கடந்து செல்ல முற் பட்டனர். அப்போது மௌ என்னும் நகரின் (கிழக்கு நிங்போ) மேற்கு பகுதியில் புதைக்கப் பட்ட லியங்கின் கல்லறை இருந்த இடப் பகுதியை கடந்து செல்ல முற்பட்டது.

அப்போது மேலெழுந்து வீசிய கடுங்காற்றும், அலைகளும், படகு மேலே நீந்திச் செல்ல முடியாத வாறு தடை செய்தன. அந்தப் பகுதி லியங்கின் கல்லறை இருக்கும் இடம் என ஷு அறிந்ததும் படகை விட்டிறங்கி கல்லறைக்கு துக்கம் தாங்காது அலறி அழுது கொண்டே பாய்ந்தோடினாள்.




வண்ணத்துப்பூச்சி
காதலர்களின் வெள்ளைப்
பளிங்கிலான அழகிய சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது கல்லறை இருந்த இடம்வெடித்து திறந்து காதலில் துடித்த அப்பேதைப் பெண்ணை மண்ணுக்குள் மூடிக்கொண்டது. அந்தக் கல்லறையை ஜின் ராஜவம்ச அதிபர் ஸீ அன் (Xie An) நேர்மையான பெண்ணின் கல்லறை எனப் பிரகடனம் செய்தார்.

இக்காதல் காவியம் பல்வேறு உத்தியோகப்பூர்வ பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கிறது.

யுயோ நதியின் பக்கமாக ஒரு காணியில் உருவாக்கப்பட்டுள்ள லியங்- ஷு கலாசார பூங்காவில் இக் காதல் ஜோடிகளின் வாழ்க்கையின் சில முக்கிய நிகழ்வுகள் அழகான காட்சிகளாக வரையப்பட்டு காட்சி தருகின்றன. 'வேயப்பட்ட பாலத்தில் சத்தியம் எடுத்து சகோதரர்கள் ஆனவர்கள்' 'மூன்று வருடங்கள் வகுப்புத் தோழர்களாக இருந்தவர்கள்' '18 தடவை வழியனுப்பல்' 'கல்லறையில் பிரியா விடை' 'வண்ணத்துப்பூச்சி காதலர்கள் மீள இணைந்தனர்' என்றவாறான பல தலைப்புக்களில் இக்காட்சிகள் அமைந்துள்ளன.

அத்துடன் இந்த அமரத்துவ காதலர்களுக்கு நிங்கோ நகருக்கு மேற்காக அமைந்த ஒரு கிராமத்தில் ஆலயம் ஒன்றும் கி.பி 347 ஆம் ஆண்டில் உள்ளூர் வாசிகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு மக்கள் விஜயம் செய்து தமது வணக்கத்தைச் செலுத்தி வருகிறார்கள். அது ஷுவின் நேர்மையையும் நீதிவானாகப் பணியாற்றிய லியங்கின் அதிசிறந்த நீதித்துறைப்பணியில் நேர்மையையும் போற்றுவதற்காகவாகும்.

வட இத்தாலிய நகரான வெரோனாவில் (VERONA) 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சீன -இத்தாலிய காதல் கலாசார விழா வெரோனா மற்றும் நிங்கோ நகர, மாநகர அரசுகளின் இணை அனுசரணையில் நடைபெற்றது. வெரோனா, ஷேக்ஸ்பியரின் ரோமியோ - ஜூலியற் காவியத் தலைவன், தலைவியின் இலக்கிய ரீதியான சொந்த நகரமாகும்.


நிங்போ சீன சாஸ்திரிய காதலர்களான லியங் மற்றும் ஷுவின் காவிய நகராக கூறப்படுகிறது. இந்த வண்ணத்துப்பூச்சி காதலர்கள் சீனாவின் ரோமியோ - ஜூலியற் ஆகக் கருதப்படுகிறார்கள்.

இந்தக் காதலர் கலாசார விழாவின்போது மத்திய வெரோனாவில் உள்ள ஜூலியற் அருங்காட்சியகத்திற்கு முன் உள்ள சதுக்கத்தில் லியன்ஷன்போ மற்றும் ஷு ஜிங்ராய் ஜோடிகளின் அழகான வெள்ளைப் பளிங்கிலான உருவச்சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. வெரோனாவில் நிங்போவில் இருந்து சீன கலாசார ஆடையணிகளுடன் வந்த 15 ஜோடிகளுக்கு அவ்வேளை சிறப்பான திருமண வைபவம் நடத்தி வைக்கப்பட்டது. நிங்போவும் வெரோனாவும் 2005 ஆம் ஆண்டில் சகோதரிகள் நகர்கள் ஆகின.

பழைமைவாய்ந்த பெருமைகளுக்கு உரிய இக் காதல் காவியம், நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், திரைப்படம், தொலைக்காட்சிப்படம், இசை நிகழ்ச்சி என பல்வேறு கலை நிகழ்ச்சிகளாக சீன மக்களால் அரங்கேற்றப்பட்டு ஆராதிக்கப்பட்டு வருகின்றது.

**- லக்ஷ்மி**

நன்றி: இணையம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓவியக்கலையில் நாட்டியக்கலை


சுபாஷிணி பத்மநாதன்

நாட்டியக் கலையானது பல்வேறு கவின் கலைகளுடன் நெருங்கிய தொடர்புடையது என்பதனை நாம் யாவரும் அறிவோம். இவற்றுள் முக்கியத்துவம் பெறும் கவின் கலைகளாவன இசை, ஓவியம், சிற்பம் மற்றும் நாடகம் என்பனவாகும். இந்நுண் கலைகளாவன நாட்டியக் கலையின் எழுச்சி, வளர்ச்சி, உயர்ச்சி, மற்றும் மறுமலர்ச்சி என்பன பற்றிய ஆராய்ச்சிக்கு, பல்வேறு வகைகளில் எமக்கு உதவி அளிக்கின்றன. குறிப்பாக எந்தவொரு கலையினையும் நாம் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடக்கி ஆராய முடியாது.

ஓவியக் கலையானது சாதாரணமாக நாகரிகம், பண்பாடு, கலாசாரம் என்னும் சில தனிப்பட்ட இயல்புகளால் நாட்டிற்கு நாடு, காலத்திற்குக்காலம், வேறுபடுவதனைக் காணலாம். இந்த அடிப்படையில் இன்று இந்திய ஓவியக்கலை, இத்தாலிய ஓவியக்கலை, கிரேக்க ஓவியக்கலை, சீன ஓவியக் கலை, என்பன தமக்கே உரித்தான சில தனித்துவ இயல்புகளால் சிறப்புற்றுத் தனித்துவமாய் விளங்குகின்றன. மேலும் சாதாரணமாக ஓவியக்கலையானது கலாசார அடிப்படையில் சில உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது.

இக்கட்டுரை ஓவியக்கலையில் நாட்டியக்கலை என்னும் அம்சத்தினையே மையமாக வைத்து எழுதப்படுவதனால், இந்திய ஓவியக்கலையிலும், தென் இந்திய ஓவியக்கலையினையே மையமாகக் கொண்டு, எழுதப்பட்டுள்ளது. ஓவியக்கலையானது அரசியல், சமூக, சமயக் காரணிகளால் பெரிதும் காலத்திற்குக் காலம், வேறுபட்டும் மாறுபட்டும் காணப்படுகிறது. கீழைத்தேய ஓவியக்கலைக்குள் அடக்கி ஆராயப்படும் இந்திய ஓவியக் கலையானது, எமது ஆராய்ச்சிக்கு அமைய இங்கு இரண்டு அதிமுக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. ஒன்று தென் இந்திய ஓவியக்கலை, மற்றையது தமிழ்நாட்டு ஓவியக்கலை, என்னும் சில எல்லைக்குள் அடக்கி ஆராய்தல் இன்றியமையாததாகும். இவற்றுள் அஜந்தா குகைகளில் வரையப்பட்ட ஓவியங்கள், சித்தன்ன வாசல் குகையில் வரையப்பட்ட ஓவியங்கள், பௌத்த ஆலயங்களில் வரையப்பட்ட ஓவியங்கள், நாட்டிய நாடக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சித்தன்னவாசல் - ஓவியம்

அரங்குகளில் வரையப்பட்ட ஓவியங்கள், கோயில் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்கள், தவச்சாலை களில் வரையப்பட்ட ஓவியங்கள், தளபாடங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. பொதுவாக தென் இந்திய ஓவியங்கள் என்ற எல்லைக்குள் கணிப்பிடப்படும் இவை, இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றன. ஒன்று தனியே வெறும் கோடுகளால் ஆன ஓவியங்கள் ஒரு புறமும், வர்ணங்கள் தீட்டப் பட்ட ஓவியங்கள் மறுபுறமாகவும் பிரிக்கப் படுகின்றன.

இவை யாவும் காலத்துக்குக்காலம் சமூக, அரசி யல், சமயப்பண்பாடு, கலாசாரம் ஆகிய அம்சங் களை வெளிப்படுத்தும் கலை அம்சங்களாகத் திகழ்கின்றன. பண்டைக்காலத்தில் கூட வர்ணம் தீட்டப்படாத வெறுமனே, வரிவடிவங்களால் மட்டும் வரையப்பட்ட ஓவியங்கள் இருந்தன, என்பதனை, மணி மேகலையில் 'புனையா ஓவியம் புறம் போந்தன்ன,' என்னும் அடிகளிலும், 'புனையா வோவியங் கடுப்பப் புனைவில்' என நெடுநல்வாடை அடியிலிருந்தும் நாம் அறியலாம்.

பண்டைய தமிழ் மக்கள் சிறந்த ஓவியங்களை வரைந்து களிப்புற்றிருந்தனர் என்பதுடன் மட்டும் நில்லாது. தம் வரலாற்றுச் சிறப்புக்களை, கலை கலாசார பண்பாடுகளை. சமயச் சிறப்புக்களை, பெரிதும் ஓவியக்கலை மூலம் போற்றி மெருகூட்டி வளர்த்து வந்தனர்.

மணிமேகலை என்னும் காப்பியத்தின்படி நாட்டிய மகளிர் தம் நாட்டியக்கலைக்கு வெறுமனே நாட்டியப் பயிற்சியில் மட்டும் தங்கியிராது. சாஸ்திரீய சம்பிரதாய மரபு முறை வழுவாமல் இருப்பதற்கு ஓவிய நூல்களைக் கற்றறிந்தனர் என்பதனை பின்வரும் பாடல் அடிகளில் நாம் காண்கின்றோம்.

***நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த***
***ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்***

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதை வாயிலாக மாதவி நாட்டியமாடிய அரங்கின் மேல் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று சொல்லப்படும் நான்கு வர்ணத்தவரும் வரையப்பட்டு இருந்தனர் என அறிகின்றோம்.

மேலும் நாட்டிய அரங்குச் சுவர்களிலும், நாட்டிய அரங்குத் தூண்களிலும், நாட்டிய அரங்குத் திரை களிலும், பல்வேறு ஓவியங்கள் வரையப்பட்டு இருந்தன என்பதற்கான சான்றுகளை நாம் பல்வேறு பண்டைய வரலாற்று நூல்கள் வாயிலாகவும் வர லாற்றுக் குறிப்புக்கள் வாயிலாகவும், அறிகின்றோம். இன்று எமது ஆராய்ச்சியானது, குறிப்பாக ஓவியக் கலை ஆராய்ச்சியானது, பெரிதும் பல்லவர் காலத்தில் இருந்தே இடம் பெறுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பல்லவர் கால ஓவியங்களாவன, சங்ககாலம், மற்றும் சங்கமருவிய காலம் என்பனவற்றின் தொடர்ச்சியாகவே காணப்பட்டும் கருதப்பட்டும் வருகின்றன. பல்லவர் கால ஓவியங்களுக்கு முற் பட்ட ஓவியங்களாவன பெருமளவில் அழிவுற்றுப் போயின.

எனவே ஓவியக்கலையில் நாட்டியக் கலையின் பங்களிப்பானது பல்லவர் காலத்தில் இருந்தே பெரிதும் கவனிக்கக்கூடியதாக உள்ளது. எனவே பெரும்பாலும் ஓவியங்களாவன கி.பி.7ஆம் நூற்றாண்டில் இருந்தே கவனிக்கப்படுகின்றன. பல்லவ மன்னர்களில் ஓவியத்துறைக்குச் சிறந்த தொண்டாற்றியவன் மகேந்திரவர்மனாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சிறந்த ஓவியனாகத் திகழ்ந்த காரணத்தால் சித்திரகாரபுலி என்னுமொரு தனிப்பெயர் கொண்டு அவன் அழைக்கப் பட்டதினால், அவனது ஓவியக்கலையின் தனிச் சிறப்புத் தன்மையினை இது எடுத்துக்காட்டுகின்றது. இது மட்டுமல்ல அவனது ஓவியக் கலையின், பூரண அறிவினை அவனால் எழுதியது தட்சண சித்திரம் என்னும் ஒரு நூல் வடிவில் காணக்கூடியதாக இருந்தது என்பதனைக் கல்வெட்டுக் குறிப்பு மூலம் அறிகிறோம்.

மகேந்திரவர்மன் சமணனாக இருந்த காலத்தில் அவனது பணிப்பின் பெயரால் செவ்வனே அமைக்கப்பெற்ற குகை சித்தன்ன வாசல் குகை, எனப்பெயர் பெற்றது. இக்குகையில் மகேந்திர வர்மன் பல அரிய ஓவியங்களைத் தீட்டும் வண் ணம் பணித்தான். அவன் பணிப்பின் பெயரில் பல அரிய ஓவியங்கள் வரையப் பெற்றன. இவை வெறும் குகைச் சுவர்களில் மட்டுமன்றிக் குகை முகட்டிலும் அதாவது கூரையிலும் கூட வரையப் பட்டு இருந்தன.

இவ்ஓவியங்களை ஓவிய ஆராய்ச்சியாளர் மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரித்து ஆராய்கின்றனர். பெரும்பாலும் நடனத்துடன் மட்டும் தொடர்பு டைய ஓவியங்களை நாம் குகைச் சுவர்களில் பெரிதும் காண்கிறோம்.

மகேந்திரவர்ம அரசனுக்கும், அரசிக்கும் முன்னால் இடம்பெறும் சில நடன நிகழ்ச்சிகள் சித்தன்ன வாயிலில் செவ்வனே சித்திரித்து வரையப்பட்டுள் ளன. இவ்ஓவியங்கள் மிகப் பழைமை வாய்ந்த அதே சமயம் இவற்றுள் சிறப்பிடம் பெற்று விளங்கும் ஓவியங்களை நாம் சித்தன்ன வாசல் முகப்பில் காணக்கூடியதாக உள்ளது. வாசல் முகப்பில் காட்சி அளிக்கும் ஓர் ஓவியமானது நடராஜப் பெருமானைப் பிரதிபலிப்பது போன்று காட்சி அளிக்கின் றது. இவ் ஓவியமானது வலது கரத்தில் அபய முத்திரையையும், இடது கரத்தில் தண்ட முத்திரையை யும், அத்துடன் தலை நிறைய மலர் சூடியும் ஒருபுறம் சாய்ந்த நிலையிலும் காணப்படுவதில் இருந்து இவ் உருவமானது நடராஜ மூர்த்தியினைப் பிரதி பலிப்பதாகக் கருதப் படுகிறது. முகப்பு வாயிலில் காணப்படும் மற்றைய உருவ ஓவியமானது உணர்ச்சி மேலீட்டுக் களிப்பில் பூரிப்படைந்துள்ளது போன்று கைகளை மேலே உயர்த்திக்காட்சி அளிக்கின்றது.

இவ்விரு அரிய ஓவியங்களையும் அப்பர் சுவாமிகள் மிகத் துல்லியமாக எடுத்தியம்புகிறார். "ஆடல் கண்ட பின்னே கண் கொண்டு காண்ப தென்ன" என மிக அருமையாக விபரித்துள் ளார். பல்லவகால ஓவியங்களை நாம் மாமண்டூர்க் குகை களின் வெளிப்புறத்திலும், காஞ்சிக்கைலாச நாதர் கோயிலிலும் இன்றும் காணக்கூடியதாக இருக்கின் றது.

பல்லவர் காலத்துக்கு பிற்பட்ட காலகட்டத்தில் நாட்டியக்கலை, ஓவியக்கலையில் சிறப்புற்று விளங்கியது என்றால் அது சோழர் கால ஓவியங்கள் எனக் குறிப்பிட்டால் மிகையாகாது. தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் மூலஸ்தானத்தைச் சுற்றிப் பல அரிய ஓவியங்கள் வரையப்பட்டு உள்ளன. இன்றைய கோயில் ஓவியக் கலையானது சோழர் கால ஓவியக்கலையின் தொடர்ச்சியாகவே கருதப் படுகின்றது. இன்று இவற்றுள் சிறப்பிடம் பெறும் ஓவியங்களாவன தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் ஓவியங்களாகும். இவை வெறுமனே சுவர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டப்பெற்ற ஓவியங்களாக மட்டும் அன்றி உயர்ந்த கூரை முகப்புகளில் வரையப்பட்ட ஓவியங்களாக காணப்படுகின்றன. சுவரோவியங்களில் தனிச்சிறப்பு பெறும் ஓவியங்களாவன வடசுவரிலும் மேற்குச் சுவரிலும் செவ்வனே வரையப்பட்டுள்ளன. மேற்குச் சுவரில் நடராஜப் பெருமான் புலித்தோலின் மீது யோகதட்சணாமூர்த்தியாக ஒரு குழுவுடன் வீற்றிருந்து தேவலோக ஆடல் நங்கையரின் நடனத்தை அவதானிப்பது போன்று காட்சி அளிக்கின்றது.

இன்னுமொரு நாட்டிய ஓவியத்தில் ஆடல் தெய்வமான நடராஜர் தில்லையம்பலத்தில் நடனமாடிக் கொண்டு இருப்பது போன்றும், ஒரு புறத்தில் அதனை அந்தணர், பக்தர்கள், கண்டு களிப்பதாயும், மறுபுறத்தில் ராஜராஜசோழனும், அவனது மூன்று அரசியரும் பரிவாரங்களுடன் இறைவனின் ஆடலை அன்புடனும், மரியாதையுடனும் பூஜித்து நிற்பதாயும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ் ஓவியங்களில் உள்ள சிறப்பு அம்சம் எது என நோக்குமிடத்து தெளிவாக வரையப்பட்ட ஓவியக் கோடுகள் இயல்பாகவே பாவவெளிப்பாட்டுடன் காணப்படுவதாகும். இவை ஓவியக் கலையில் நாட்டியக் கலையின் உன்னத நிலையினை எடுத்துக் காட்டுகின்றது.

நுண்கலைகளில் ஒன்றான ஓவியக்கலையானது பெரிதும் சிற்பக் கலையினை ஒத்ததாகக் காணப்படுகின்றது. எனவே இயல்பாகச் சிற்பக்கலையினைப் போன்ற கற்பனை வளத்திற்கும், கலைவனப்பிற்கும், கைவண்ணத்திற்கும் இதுவும் முதலிடம் கொடுக்கின்றது. ஓவியனானவன் தன் சொந்தக் கற்பனைத் திறனுக்கு அமைய, மிக அரிதாக, இயற்கை நிலைகளில் இருந்து சற்றுமாறு பட்டதாக, மிகைப்படுத்தி ஓவியங்களை நெளித்தும், வளைத்தும் இயற்கை நிலைகளில் இருந்து அதி மிகைப்படுத்தி வரைகிறான், என்பதனை நாம் பார்த்த மாத்திரத்தில் உணரக் கூடியதாக உள்ளது.

ஓவியக்கலையில் இடம் பெறும் தனிச்சிறப்பு இயல்பு எது என நோக்குமிடத்து நாம் சில சாதாரண முடிவுகளுக்கு வரலாம். ஏனைய நுண் கலைகளான சிற்பம், நாட்டியம் போன்று இதுவும் சாதாரண பாமர மக்களால், அதன் கலை அம்சங்களை, கலைப்பாங்கினைச் சுவைக்கக்கூடியதாக உள்ளது. ஏனைய நுண்கலைகளாகிய சிற்பக்கலை மற்றும் நாட்டியக் கலை என்பனவற்றைக் கூட ஓவியக் கலையில் வரையும் வாய்ப்பு எமக்கு உண்டு. நாட்டியக் கலைக்கு சிற்பக் கலையின் பங்களிப்பு அளவிட முடியாததும், அளப்பரியதும் ஆகும். ஆயினும் ஓவியக்கலையின் பங்களிப்பு குறிப்பாக நாட்டியக் கலைக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே கொள்ளப்படுகின்றது. காரணம் ஓவியக் கலையானது சிற்பக் கலையினைப் போல் அன்றி, நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடியதன்று, காலசக்கரத்தில் சிக்குண்டு இலகுவில் அழியக்கூடியது. இது மட்டுமன்றி அவ்வப்போது மக்களால் கூட கலாசார காலச்சக்கர மாற்றங்களுக்கு அமைய, பழைய ஓவியங்கள் அழிக்கப்படும்.

அவற்றின் மீது புதிய ஓவியங்கள் வரையப்படுவதினால், ஓவியக் கலை இயற்கை அழிவுகளுக்கு மட்டுமன்றிச் செயற்கை அழிவுகளுக்கும் உட்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். எனவே ஓவியக் கலையின் பங்களிப்பானது இன்று நாட்டியக் கலையில் மிகவும் குறைவாக உள்ளதற்குக் காரணம் சில இயற்கைக் காரணிகளும், சில செயற்கைக் காரணிகளும் ஆகும்.இதனால் நாட்டியக் கலைக்கு ஓவியக்கலையின் பங்களிப்பானது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

நுண்கலைகளில் ஒன்றான ஓவியக்கலையானது பெரிதும் சிற்பக் கலையினை ஒத்ததாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எகிப்தின் மிகப்பெரிய அருங்காட்சியகம்

## ஒரு இலட்சத்து 20 ஆயிரம் கலைப்பொருட்களுடன் காட்சி தருகிறது



உலகின் மிகவும் முக்கியமானதும் பழைமையான கலைத்துவ வேலைப்பாடமைந்ததுமான பொருட்களைக் கொண்டு பெருமை பெற்று விளங்குவது, கெய்ரோவில் அமைந்துள்ள எகிப்திய அருங்காட்சியகம் ஆகும். எகிப்து அருங்காட்சியகம் அல்லது கெய்ரோ அருங்காட்சியகம் என இந்நிலையம் அழைக்கப்படுகின்றது. இந்த அருங் காட்சியகத்திற்குச் சென்று அங்கு ஒழுங்காக நிறுவப்பட்டுள்ள கலைப் பெருங்காட்சியகங்களை ஒரு தடவை சுற்றிப்பார்க்கா விடின், ஒருவரது எகிப்திய விஜயம் பூரணத்துவமாக அமையாது என்று கூறுவது உண்மையானதோர் கூற்றாகும்.

இங்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பழைமைமிகு கலைப் பொருட்கள் உள்ளன. அவற்றுள் பெரும் பாலானவை, காட்சிப்படுத்தப்பட்டும் மிகுதியானவை, களஞ்சிய அறைகளில் சேமிக்கப்பட்டும் வைக்கப்பட்டுள்ளன.

இப்பிராந்தியத்தில் பழம்பெரும் அருங்காட்சியகமாக விளங்கும் இந்நிலையம் 2017 ஆண்டு ஜூலை மாதத்தில் பொதுமக்களுக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

அப்பழம்பொருள் காட்சியகத்தில் பழைய எகிப்து தேசத்தின் வரலாற்றின் மிக முக்கியமானதான ஏராளமான பொருட்கள் அடங்கி இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எஸ்லெக்சியா பூங்காவிற்கு அருகாமையில் 1835 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த அருங்காட்சியகத் தினை எகிப்திய அரசாங்கம் பின்னர் கெய்ரோ கோட்டைக்கு மாற்றியது.

புதிய, பழைய கலைப்பொருட்கள் திணைக்களம் உருவானதைத் தொடர்ந்து 1858 ஆம் ஆண்டு பௌலாக்கில் (Boulaq) புதிய அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டது. நைல் நதிக்கரையில் அமைக்கப்பட்ட இக்கட்டடம், 1878 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நைல்நதி வெள்ளம் காரணமாக, குறிப் பிடத்தக்க தேசத்துக்கு உள்ளானதால், 1891 ஆம் ஆண்டு இப்பொருட்கள் அனைத்தும் கெய்ரோவில் உள்ள கிஸா (Giza) மாவட்டத்தில் உள்ள முன்னாள் அரசமாளிகைக்கு மாற்றப்பட்டது. 1902 ஆம் ஆண்டு வரை அங்கிருந்த இக்கட்டடம் தாஷிர் சதுக்கத்திற்கு இறுதியாக மாற்றப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் எகிப்திய புரட்சியின்போது, இந்த அருங்காட்சியகத்தை உடைத்து உட்புகுந்து, இரு 'மம்மி'கள் உடைக்கப்பட்டன. சில கலைப் பொருட்களும் நாசம் செய்யப்பட்டன. சுமார் 50 பொருட்கள் காணாமல் போயின. அதில் இருந்து தேடப்பட்டதில் 25 பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டன.

இவ்விதம் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் "நாசஞ் செய்யப் பட்டவையும், கண்டுபிடிக்கப்பட்டவையும்" என்னும் தலைப்பின்கீழ் கண்காட்சி ஒன்று நடத்தப் பட்டது. அவ்விதம் கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்களில் இரு உருவச்சிலைகளும் அடங்கும். அதில் ஒன்று செடார் மரத்தில் செய்யப்பட்டு, தங்கத் தகட்டினால் மூடப்பட்ட அரசன் துதன்காமுன் உருவச்சிலையாகும். மற்றையது அகெநரென் அரச னது உருவச்சிலையாகும். அத்துடன் ஒரு குழந்தையின் மம்மியும், கண்ணாடி பூச்சாடி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய பொருட்களாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தரைத்தளம் மற்றும் மேல்மாடி என இரு பிரதான தளங்கள்இவ்வருங்காட்சியகத்தில்அடங்கியுள்ளன. தரைத்தளத்தில் பழைய உலகில் உபயோகிக்கப்பட்ட ஏராளமான காசுகளும் பாப்பிரஸ்சுவடிகளும் (Papyrus) (கோரை இனப்புல்வகை) குவிக்கப்பட்டுள்ளன. பாப்பிரஸின் ஏராளமான துண்டுகள் பொதுவாக சிறுசிறு துண்டுகளாகும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருந்ததினால் அவை பழுதடைந்து விட்டன. பதனிடப்பட்டு அழுத்தப்படும் இச்சுவடியில் எழுத முடியும். இந்தச் சுவடித் துண்டுகளில் கிரேக்கம், லத்தீன், அரபு மற்றும் பழைய எகிப்திய மொழிகள் உட்பட பல மொழிகள் காணப் படுகின்றன. இத்தளத்தில் காணப்படும் காசுகள், தங்கம், வெள்ளி, மற்றும் பித்தளை, உலோகங்கள், உட்பட பல்வேறு உலோகங்களினாலும் செய்யப்பட்டவையாகும். அங்கு காணப் படுபவை எகிப்திய காசுகள் மட்டுமன்றி, கிரேக்கம், ரோமன், மற்றும் இஸ்லாமியக் காசுகளாகும். இவை வரலாற்றாசிரியர்கள், புராதன எகிப்திய வர்த்தகத்தினை ஆராய உதவியுள்ளன.

நில தளத்தில் கி.மு. 1550 ஆம் ஆண்டிற்கும் 1069 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இருந்த புதிய அரசவம்ச காலத்தில் இருந்த கலைப் பொருட்கள் உள்ளன. இப்பொருட்கள் முன்னைய நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்ட பொருட்களிலும் பார்க்க, பொதுவாக பெரிய அளவினதாகக் காணப் படுகின்றன. இவற்றுள் உருவச் சிலைகள், மேசைகள், பிரேதப்பெட்டிகள் ஆகியவையும் அடங்கும். அத்துடன் அங்கு 42 அறைகள் உள்ளன. கட்டடத்தில் பாதுகாப்பு சோதனைப் பகுதியைத் தாண்டினால் இதய அறையை நோக்கிப் பார்க்க முடிவதோடு கட்டடத்தின் முன்பகுதியையும் பார்க்கலாம். அங்கிருந்து பிரேதப் பெட்டிகள், படகுகள் மற்றும் ஏராளமான உருவச்சிலைகள் ஆகியவற்றைப் பார்க்கலாம்.

முதலாவது மாடியில், எகிப்தின் இறுதி இரண்டு அரச வம்சத்தினரின் கலைப்பொருட்கள் உள்ளன. இரண்டு விஷேட அறைகளில் புதிய அரசின், மற்றும் புதிய குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் மன்னர்களின், ஏராளமான மம்மிகள் வைக்கப் பட்டுள்ளன.

அத்துடன் அருங்காட்சியக கட்டடத்தின் அருகில் உள்ள பூங்காவில், உலகின் புகழ்பூத்த எகிப்திய அறிஞர்களின் ஞாபகார்த்த நிலையம் உள்ளது. இப்புகழ்பெற்ற எகிப்திய அருங்காட்சியகத்தில் ரோமன் ஆட்சிக்காலத்தின் ஊடாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து உள்ள கலைப் பொருட்களுடன் 107 மண்டபங்கள் உள்ளன. இத்தொகுதிப்பொருட்களின் பெரும்பாலானவை, பாரோனிக் (Pharaonic Era) யுகத்தைப் பிரதிபலிப் பவையாக உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அருங்காட்சியகத்தில் ஒரு புகைப்படக் கண்காட்சிப் பகுதியும், மிகப்பெரும் நூல் நிலையமும் உள்ளன.

எகிப்தின் மம்மிகள் உலகப்பிரசித்தமானவை. எகிப்திய மன்னர்கள் இறந்த பின்னர் அவர்களது உடல்கள், வழமையாகப் பதனிடப்பட்டு, பெரும் துவிமாடங்களில் அடக்கம் செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று அரசவையைச் சேர்ந்த பிரமுகர்கள் மற்றும் பிரதான அதிகாரிகளின் உடல்களும் மம்மி களாக்கப்படுகின்றன. சிலவேளைகளில் சாதாரண மக்களது உடல்களும் அவ்வாறு மம்மியாக அடக்கப் படுவதுண்டு. இருப்பினும் இவ்விதம் உடலை மம்மியாக்குவது மிகப்பெரும் செலவுக்கு உரிய ஒன்றாகும்.

இறந்த உடம்பினை உரிய மருந்துகளிட்டு, அது கெட்டுவிடாமல் பாதுகாப்பது என்பது பண்டையக் கால எகிப்தியர்களின் ஒரு வழக்கமாகும். இறந்த உடலின் ஈரலிப்புத் தன்மையை எகிப்தியர்கள், தமது விஷேட பதனிடல் முறைகள் மூலம் நீக்கி, உடலைக் காயவிடுதல் மூலம், அது பழுதாகி விடாமல் பாதுகாத்தார்கள்.

1996 ஆம் ஆண்டுவரை இந்த அருங்காட்சியகத்தின் பாதுகாப்புப் பிரிவினர் இரவில் கதவுகளைப் பூட்டிவைத்தனர். இருப்பினும், ஒருநாள் இரவு மிகத் துணிந்த திருடன் ஒருவன் உட்புகுந்து மிகப்பெறுமதியான செல்வங்கள் பலவற்றைக் களவாடிச் சென்றதால் அருங்காட்சியக அதிகாரிகள் அபாய அறிவிப்பு மணிகளையும், மற்றும் திருடுவதைக்கண்டு பிடிக்கும் பொருட்களையும் அங்கு பொருத்தினர். அதேவேளை அங்கு வைக்கப்பட்ட அரும்பெரும் பொருட்களின் மீது வெளிச்சம் படும்படியாகவும் பெரும் ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சியின் போது மேலும் சில பொருட்கள் அங்கிருந்து களவாடிச் செல்லப்பட்டன. மேலும் கொள்ளைச் சம்பவங்கள் நிகழாதிருக்க, அருங்காட்சியகத்தைச் சுற்றி பொது நடவடிக்கையாளர்கள், மனிதச் சங்கிலி பாதுகாப்பினை உருவாக்கினர். இந் நடவடிக்கை நற்பயன் தருவதாகக் கூறப்படுகின்றது.





**பண்டைய எகிப்திய கைப்பணி வல்லுனர்களின் அருங்காட்சிப் பொருட்கள்**







பண்டைய எகிப்தியர்களின் மதத்தில், தம்மால் முடிந்தவரை உடலைப் பாதுகாத்து உயிரோடு இருப் பது போல வைத்திருப்பது ஒரு முக்கியமான காரிய மாகக் கருதப்பட்டது. அவர்கள் இவ் விடயத்தில் வெற்றிகரமாகச் செயற்பட்டுவந்ததினால் மூவாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்களை இன்றும் அதே கோலத்தில் பார்க்க வழி ஏற்பட்டிருக்கிறது.

ஒருவரின் உடலை மம்மியாக பதனிடுவதற்கு எழுபது நாட்கள் பிடிக்கும். விஷேட குருக்கள்மார் இப்பதனிடல் வேலைகளை முறைப்படி மேற் கொண்டு, பின்னர் அதனைப் போர்த்திவைப்பர். பல்வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்படும் சரியான கிரியைகள் மற்றும் பிரார்த்தனைகளுக்கு அப்பால் இக் குருக்கள்மார் மனித உடநல சாஸ்திரம் குறித்து ஆழமான அறிவைப் பெற்றவர்களாகவும் இருந்துள்ளனர்.

1 இலட்சத்து 20 ஆயிரம் கலைப்பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இங்கு பெயர்ப்பலகைகள் பிரெஞ்சு, ஆங்கிலம், கிரேக்கம், ஜேர்மனி மற்றும் அரபு மொழிகளில் வைக்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் இங்கு 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப்பயணிகள் விஜயம் செய்கின்றனர். அத்து டன் சுமார் 5 இலட்சம் எகிப்தியர்களும் வருடாந்தம் இங்கு விஜயத்தினை மேற்கொள்கின்றனர்.

- கங்கா -

(நன்றி: இணையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படிமக்கலை

கலைகளில் நாட்டியம், ஓவியம், சிற்பம், இசை, கவிதை ஆகிய ஐந்தும் அழகுக் கலைகளாகும். முதல் மூன்றும் கண்வழியாகச் சென்று உள்ளத்தை மகிழ்விப்ப தாகும். ஏனைய இரண்டும் செவிவழிச் சென்று உள்ளத் திற்கு உவகையூட்டும்.

புலன் வழிச் சென்று உள்ளம் என்ற திரையில் நிழலிடுவது கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய ஒரு காட்சியாகும். அக்காட்சியால் இன்ப உணர்ச்சி தோன்றுகிறது. இஃது உள்ளத்தை நிரப்பிப் பொங்கி வழிகிறது. இவ்வுணர்வை, தான் பெற்ற இன்பத்தை, பிறர் உள்ளத்தில் படைக்கும் ஆற்றலே கலை எனப் படுகிறது. உள்ளப் பெருக்கை உணர்ச்சி பொங்க சுவை குன்றாது முறைப்படுத்தி எடுத்துரைப்பதால் கவிதை பிறக்கிறது. வரைவதால் ஓவியம் தோன்றுகிறது. செதுக்குவதால் சிற்பமாக மாறுகிறது.

### படிமக் கலை

போலச் செய்தல் முறையில் ஒன்றுக்கு ஈடாக அவ்வொன்றைப் போலவே உள்ள மற்றொன்றை உருவாக்குவது. அதாவது மூலத்தின் பிரதி படி யெனப் படுகிறது. இதனையே படிமம் என்றும் படிவம் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் மிக ஆழ்ந்த கருத்தாக கலைத் துறை இச்சொல்லைக் கையாள்கிறது.

கலைப் படைப்பு என இயற்கை வடிவங்களையும் பிற காட்சிகளையும் உள்ளதை உள்ளவாறு உரைத்தலோ, உருவாக்குதலோ இல்லை. உள்ளதை உணர்ந்தவண்ணம் எடுத்துரைப்பதும் உருவகிப்பதும் கலைத்திறம் என்று கொள்கிறோம். எனவே உணர்வின் பிரதிபலிப்பே கலையென்பதாகிறது. விரித்துக் கூறின், மனத்திரையில் நிழலிட்ட உணர்வுமயமான காட்சியின் பிரதிபிம்பத் தையே படிவம் என்றும், படிமம் என்றும் நம் தமிழ் மக்கள் கொண்டனர். படிமம் என்ற சொல்லைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உருவமான பொருளின் புற அழகை விடுத்து அதன் அக அழகையும் அருவமான பொருளின் தன்மையைப் புறத்தோற்றத்தாலும் சித்திரித்துக் காட்டுவது படிமக் கலையின் சீரிய பணியாகும்.

தெய்வத் திருமேனிகளைக் குறிப்பதற்கே தொன்று தொட்டு வழங்கி வருகிறோம். உதாரணமாக, தொல் இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தெய்வ வடிவைப் படிமம் என்றே இளங்கோவடிகள்,

**மேலோர் விழையும் நூனெறி மாக்கள்**
**பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து**
**இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்**
**சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்**
**கைவினை முற்றிய தெய்வப் படிமத்து**

குறிப்பிடுகிறார். மேலும் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவராகிய சீத்தலைச் சாத்தனார் என்பார் தனது மணிமேகலை என்ற காப்பியத்தில்,

**அணியிழை யந்தரம் ஆறா எழுந்து**
**தணியாக் காதற் றாய்கண்ண கியையும்**
**கொடைகெழு தாதை கோவலன் றன்னையும்**
**கடவு ளெழுதிய படிமங் காணிய**

என்ற பாட்டிலும்

**சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்**
**மையறு படிவத்து வானவர் முதலா**

என்ற அடியிலும்

தெய்வ வடிவத்தைக் குறிக்கப் படிமம், படிவம் என்ற சொற்களைக் கையாளுவதைக் காண முடிகிறது. கடவுள் படிமமானது கண்ணுக்கும் கருத்திற்கும் அகப்படாமல் அவற்றைக் கடந்து நிற்கும் பேரின்பப் பொருளின் உருவமே ஆகும்.

கண்களால் கண்டு, அவ்வுணர்வின் பிரதியாகக் அமைக்கப்படுகின்றன. கண்ணகியின் புறஅழகை விடுத்து அக அழகையே மனத்திரையில் கண்டு, அவளது இனிய வடிவத்தை படிமம் என்றழைத்து, தெய்வத் தன்மையை இளங்கோவடிகள் அதில் ஏற்றிக் காட்டுகிறார். இன்று நாம் காணும் புத்த படிமத்தின் வடிவழகு புத்தரின் இயற்கையான புற அழகு அல்ல. அஃது யாதெனில், புத்தர்தம் அகவழகின் புறத்தோற்றமே.

எனவே உருவமான பொருளின் புற அழகை விடுத்து அதன் அக அழகையும் அருவமான பொருளின் தன்மையைப் புறத்தோற்றத்தாலும் சித்திரித்துக் காட்டுவது படிமக் கலையின் சீரிய பணியாகும். இது, தமிழகக் கலைகளின் பொதுவான - சிறப்பான மரபாகக் கருதலாம்.

### *கலை மரபு*

தமிழகச் சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகள் பலப்பல. உணர்வின் பிரதி பிம்பமே உண்மைக் கலையாகும் என்ற கருத்து, சிற்பிகளின் உள்ளத்தில் நிலையாகப் பதிந்துவிட்டதனால், இயற்கைக் காட்சி களையும் இயற்கை வடிவங்களையும் பிரதி செய்வதை விடுத்து முற்றிலும் உணர்வு மயமான மனக்காட்சிகளையும், கருத்துகளையும், உண்மை களையும், ஆராய்ச்சி முடிவுகளையும் சித்திரித்துக் காட்டுவதிலேயே தொன்று தொட்டுத் தமிழகச் சிற்பிகள் நாட்டம் கொள்வாராயினர். ஆனால், அதே நேரத்தில் இயற்கையை அறவே புறக்கணித்து முற்றிலும் புதுமையான வடிவங்களையும் காட்சிகளையும் அவர்கள் படைக்கவில்லை.

அதற்கு மாறாக, இயற்கையோடு நெருங்கி உறவாடி, அதோடு இசைந்து அதன் இயக்கங்களையும், சிறப்பியல்பு களையும் நன்கு ஆராய்ந்து உணர்ந்து, அவற்றைத் துணைக் கருவிகளாகக் கொண்டு அகத்தே தோன்றிய உணர்ச்சிகளை அழகு மிளிரப் படைத்துக் காட்டியுள்ளார்கள் நமது தமிழகச் சிற்பிகள்.

வேறெந்த நாட்டுச் சிற்பக்கலை மரபிலும் காண முடியாத ஒரு சிறப்பியல்பு நமது மரபிற்கு உண்டு. சிற்ப வடிவங்கள் எதுவாயினும் சரி. இயற்கை அமைதியில் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்ப வடிவங்கள் நின்றாலும், அமர்ந்தாலும் கிடந்தாலும் எக்கருத்தை உணர்த்துவதானாலும் அவை ஆடற்கலைப் பாணியிலேயே அமைக்கப் படுகின்றன. ஆடற்கலை ஒரு பண்பட்ட கலை. உள்ளத்தில் தோன்றும் இயல்பான உணர்ச்சிகளை மிகத் தெளிவாகவும், சுவையோடும், நெஞ்சிலே நிலைத்து நிற்கும் வகையிலும் ஆடிக்காட்டும் கலை. இதனை முகபாவனைகளாலும், உடல் ஒடிவு, வளைவு, குழைவு, களிப்பு முதலிய அமைதிகளாலும் பிற வகை அபிநயங்களினாலும் சித்திரிக்கிறது. ஆடற்கலை வாயிலாகக் கருத்துகள் சுவையோடும் முறையோடும் உணர்தப்படுவதை உற்று நோக்கித் தனது வடிவத்திலும் இது இடம் பெற வேண்டுமென்று முதன் முதலில் எச்சிற்பி உணர்ந்து சிற்பக்கலையில் இதனை ஏற்றினானோ அவன் உலகக் கலைமேதைகளில் ஒருவனாகக் கருதப்பட வேண்டுமென்றால், கலை உள்ளம் பெற்றோர் இதனை மறுக்கமாட்டார்கள். நமது சிற்ப வடிவங்கள் ஆடற்கலைப் பண்பினைப் பெற்றிருப்பதால் இவை தோற்றுவிக்கும் கலையின்பத்திற்கு எல்லையே இல்லை.

### சிற்பங்கள்

நாட்டிய இலக்கணத்திற்கேற்றவாறு சிற்பங்கள் இயற்றப்பட்டிருப்பதாகத் தோற்றத்தளவில் தெரிவ தாயிருப்பினும், நாட்டில் இலக்கணத்தின் ஜீவனை உணர்ந்து கொண்ட சிற்பி, தனது தேவைக்கேற்ற வாறும், இடத்திற்கேற்றவாறும், செய்யப்படும் பொருளுக்கேற்றவாறும், உணர்த்தப்படும் கருத்துக் கேற்றவாறும், சிறுசிறு மாற்றங்களைக் கற்பித்துத் தனது படைப்புக்களை உணர்ச்சிமயமாக்குகிறான். சிற்பியின் மனம் எவ்வெவ்வாறு வளைகிறதோ, குளிகிறதோ, நெளிகிறதோ, குழைகிறதோ அவ்வா றெல்லாம் அவனது வடிவங்கள் உருவெடுக்கின்றன.

ஆடற்கலை வல்லுநர்கள் காட்ட முடியாத முக பாவங்களையும் உள்ளுணர்வுகளையும் அபிநயச் சிறப்புக்களையும் மிகத் தேர்ந்த முறையில் சிற்பி அமைத்துவிட முடிகிறது. அவன் கருத்தழகையே வலியுறுத்துவதால் மனித உடலுக்குரிய உடற் கூறுகளினால் விளையும் இடையூறுகளை வெல்ல வேண்டிய நிலை அவனுக்கு ஏற்படுகிறது.

எடுத்துக்காட்டாக, இறைவன் இப்பூவுலகைப் படைத்து, அதில் கோடி இன்பங்களை வைத்து நம்மிடம் வழங்கியிருக்கிறான். இஃது எக்காரணம் பற்றியென்று ஆராய்ந்த அறிஞர், இதனை நம்மீது இறைவன் கொண்ட கருணையினாலும் அன்பினா லும் என்று கூறுவர். எனவே சிற்பியானவன் இறைவனைக் கருணை வடிவமாகவும் அன்பின் உருவமாகவும் உணர்கிறான். கருணைக்கும் அன்பிற்கும் வடிவம் தர வேண்டிய பணி அவனைச் சாருகிறது. கருணை, அன்பு ஆகிய குணங்களே உருத்தரிக்குமானால் இவ்வுரு எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதை உள்ளூர ஆராய்ந்து, சிந்தித்து



சிற்ப வடிவங்கள் நின்றாலும், அமர்ந்தாலும் கிடந்தாலும் எக்கருத்தை உணர்த்துவதானாலும் அவை ஆடற்கலைப் பாணியிலேயே அமைக்கப் படுகின்றன.

வடிவம் அமைக்கும்பொழுது மனித உடற்கூறுகள் பல இடையூறுகளைத் தோற்றுவிப்பதைக் காணுகிறான். கருணையும் அன்பும் மலர் போன்ற மென்மையான குணங்கள். நெஞ்சை உருக்கும் தன்மையன. ஆன்மாவின் இன்ப வடிவத்தை உணர்த்துவன. இவற்றை வடிவத்திலே தெளிவாகக் காட்டுவதற்கு மனித உடலின் நரம்புகளும் எலும்புகளும் தசைகளின் மேடு பள்ளங்களும் தடைகளாக நிற்கின்றன. இவை உடலின் விலங்குத் தன்மையைக் காட்டும் விறைப்பையுடையன.

ஆகவே, இவற்றைக் கட்டுப்படுத்தி, மறைத்து, அளவோடு உருண்டு, திரண்ட, சதைப்பற்றோடு கூடிய, உடலமைப்பில் வைத்துக் காட்டினால்தான் தன் கருத்து விளக்கம் பெறும் என்ற முடிவுக்குச் சிற்பி வருகிறான். முகத்திலே மட்டும் கருணை அன்பு ஆகிய பண்புகள் தடையின்றி உடலெல்லாம் வழிந்தோடுமாறு காட்ட விழைகிறான்.

எனவே இயற்கை உடலமைப்பை, உடற் கூறுகளைத் தன் வயமாக்கி இன்னும் சொல்லப் போனால் - அடிமைப்படுத்திக் கருணை, அன்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தம், சிருங்காரம், மென்மை முழுமை ஆகிய பண்புகள் பொருந்தியதாக வடிவத்தை இயற்றி விடுகிறான். இதற்குச் சான்றாகப் புத்தர் படிமங்களும், திருமாலின் வடிவங்களும், சிவமூர்த்தங்களும், தேவியரின் இனிய வடிவங்களும் அமையப் பெற்றிருப்பதைக் கூறலாம். படிம உடற்கூறுகளும் படிம அமைதிகளும் இதுபோன்ற காரணங்களைப் பற்றி இயற்கை உடற்கூறுகளினின்றும் இயற்கை நாட்டிய அமைதியினின்றும் வேறுபடுகின்றன என்பதை உணர்தல் வேண்டும்.

சிற்பக் கலையில் மனித வடிவங்களை விடுத்துப் பல்வேறு விலங்குகளின் வடிவங்களையும் காணுகிறோம். வீரவுணர்ச்சிக்கு உவமையாக நாம் எடுத்துக் காட்டுவது சிங்கம் அல்லது புலியேயாகும். அசோகனின் சிம்மத்தூண்களும், சோழனின் புலிக்கொடியும், பல்லவரின் சிம்மக் கால்களும் இதை நினைப்பூட்டுகின்றன. விலங்கினங்களில் சிற்பக்கலைஞர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்தது சிம்ம வடிவமே.

சிற்ப உலகிலே நடமாடும் சிம்மவடிவம் இயற்கைச் சிம்மவடிவத்தை ஏதோ ஓரளவ ஒத்திருப்பினும் பெருமளவு மாறுபட்டிருப்பதையே காண்கிறோம். இவ்வடிவத்தைப் பார்த்துச் சிம்மம் என்று உறுதியாகக் கூறுவோர் மிகக் குறைவு. இதனைக் கற்பனை வடிவம் என்று புறக்கணிப்போர் பலர் உண்டு.

உண்மை யாதெனில், சிற்பியானவன் இவ்வடிவத்தில் உடற்சாயலைக் காட்டி அதற்கேயுரிய சிற்பியல்புகளை வலியுறுத்திக் காட்டியுள்ளான். சிம்மம், உடலுறுதி மிக்கது. வல்லமை வாய்ந்தது. வேகமாய்ப் பாய்வது, பார்ப்போர் உள்ளத்தில் பய உணர்ச்சியைக் கிளறுவது, வீரம் மிக்கது. எனவே, வீரத்தின் சின்னமான சிம்மத்தின் முழு வடிவத்தை அகத்திலே கொண்டு அதன் சிறப்பியல்பு களைக் காட்டுகிறான். இயற்றிய வடிவம் சிம்மத்தையும் நினைப்பூட்ட வேண்டும். சிம்மத்தின் தன்மைகளையும் பிரதிபலிக்க வேண்டும். எனவே முறிந்த புருவமும் உருண்டு மிரட்டும் கண்களும், இளித்த வாயும், கோரைப் பற்களும், மடித்த உதடும், சுருக்கிய நுதலும், முகத்திலே முறைபட அமைத்து உடல் உறுதிப் பாட்டினைத் திரண்டு பருத்த சதைப் பற்றினாலும் புடைத்த நரம்புகளாலும் வீரச் சுவைமிளிர இயற்றுகிறான்.

"வீரத்தையும் பய உணர்ச்சியையம் வலியுறுத்த வேண்டியிருப்பதால் சிம்மத்தின் கால்களில் புலி நகங்களை வைத்து காட்டுக" என ஒரு சிற்ப நூல் சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய வீர வடிவத்தில் எத்தனை அழகுதான் காட்டப்பட்டுள்ளது? சோகத்திலும், கோபத்திலும், பயத்திலும் இன்னும் பல்வேறு உணர்ச்சிகளிலும் புற அழகையும் சுவை பட அமைத்துக் காட்டிய நமது சிற்ப மரபை என்னென்று புகழ்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சிற்ப வேலைப்பாடுகள்

சிற்ப அலங்கார மேலைப்பாடுகளில் பல விதமான இலைகள், காய்கள், பூக்கள், கொடிகள் ஆகியவற்றைக் காண்கிறோம். இயற்கையில் காணப்படும் செடிகொடிகளைக்கூட உள்ளதை உள்ளபடியே நம் மரபில் காட்டுவதில்லை. அதற்கு மாறாகச் செடி கொடிகளின் நெளிவு, சுளிவு, மடிப்பு, விரிப்பு, கோவை, அடுக்கு, மினுமினுப்பு, மென்மை, இயல்பான தன்மை, அதன் இயக்கங்கள் இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து உணர்ந்து அவற்றை மனங்கவர் பாவனைகளில் சித்திரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இத்துறையில் சிற்பி யின் கற்பனை எவ்வளவு வளமாக இருந்தது என்பதை இவ்வடிவங்களை நேரில் பார்த்தே சுவைக்க முடியும். இவ்வடிவங்களைக் கருக்குகள் என்றும், பாளை என்றும் தமிழகச் சிற்பிகள் குறிப்பிடுவார்கள்.

தமிழகச் சிற்ப மரபின் போற்றதற்குரிய சிறப்பியல்புகளில் இதுவும் ஒன்றாகும். இது மட்டு மன்று, இயற்கையில் காணும், பறவை இனங்களில் சிற்ப வடிவங்கள், சிற்பியின் கரங்களிலே தனித் தன்மை வாய்ந்தனவாக வடிவெடுக்கின்றன.

நமது சிற்பிகள் தங்கள் சிற்ப வடிவங்களில் உடல் அழகைக்காட்டிய பாங்கே தனி. ஆடைகளை உடலோடு ஒட்டியவாறு அமைத்து, ஆடையின் எல்லையை மட்டும் உருட்டிக்காட்டி, உடல் திரட்சியை, அதன் கவர்ச்சியை நன்கு வெளிப் படுத்துகிறார்கள். கலைத்துறையில் இது ஒரு மகத்தான சாதனை. அதுமட்டுமல்ல. உடலுறுப்பு களுக்கேற்றவாறு பொருத்தமான இடங்களில் கண்கவர் அணிகளைப் பூட்டி அழகு சேர்த்த முறையும் பாராட்டுதற்குரியதாகும். இவற்றுக் கெல்லாம் மேலாக, சிற்ப வடிவங்களின் தலைக் கோலங்களிற்றான் எத்தனை எத்தனை மனங்கவர் வகைகள்?

## நம் நாட்டு - மேலைநாட்டுச் சிற்பங்கள்

நமது நாட்டுச் சிற்ப வடிவங்களுக்கும் மேலை நாட்டுச் சிற்ப வடிவங்களுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. நமது சிற்ப வடிவத்தை ஒரு சிலர் தவறாகக் கருதுகிறார்கள். மனித உடலின் வெவ்வேறு உறுப்புக்களின் அழகை வெவ்வேறு மனித வடிவங் களில் பார்த்து அவ்வாறு தனித்தனியே கண்டு சுவைத்த உறுப்புக்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கற்பனையாக ஒரு முழு வடிவத்தை உருவாக்கு வதாக நினைக்கிறார்கள். இஃது ஒரு தவறான கருத்தாகும். மேலை நாட்டுச் சிற்ப வடிவங்கள் மனித உடறகூறுகளை நூற்றுக்கு நூறு செம்மையாகக் காட்டி மனித அழகின் புறத் தோற்றத்தையே வலியுறுத்துகின்றன. பெண் தெய்வம் ஒன்றின் வடிவத்தை மிக அழகிய ஒரு பெண்ணின் வடிவ



நமது சிற்பிகள் தங்கள் சிற்ப வடிவங்களில் உடல் அழகைக் காட்டிய பாங்கே தனி. ஆடைகளை உட லோடு ஒட்டியவாறு அமைத்து, ஆடையின் எல்லையை மட்டும் உருட்டிக் காட்டி, உடல் திரட்சியை, அதன் கவர்ச்சியை நன்கு வெளிப்படுத்துகிறார்கள். கலைத்துறையில் இது ஒரு மகத்தான சாதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகவே காட்டியுள்ளார்கள். இவ்வழகில் கூடுதல் குறைவு காணப்படின் அவர்களின் கண்களை அவை உறுத்துகின்றன. அவர்களின் கண்களை அவை உறுத்துகின்றன. எனவே புற அழகையே காட்ட முயலும்பொழுது அதற்கு ஓர் எல்லையும் தோன்றி விடுகின்றது.

## கலைத்திறன்

நமது சிற்ப மரபு காவிய மரபை ஒட்டியது. ஒவ்வோர் ஆண், பெண் வடிவத்தையும் ஒவ்வொரு காவியம் என்றே கலா ரசிகர்கள் கூறுவார்கள். எடுத்துக்காட்டாக ஒரு கவிஞன் பெண் ஒருத்தியின் இனிய வடிவத்தைக் காணும் பொழுது அத்தோற்றம் அவனது உள்ளத்தில் இன்ப உணர்வைத் தோற்றுவிக்கிறது. அதனைப் பிறர் உள்ளத்தில் ஏற்றிக் காட்டுவத ற்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டும், உவமை அணிகளைக் கொண்டும், இசைத்துக் காட்டுகிறான். இதே முறையில் சிற்பியும் தன் உணர்வில் நிற்கும் வடிவத்தைக் கல்லிலே ஏற்றி அதே உவமை அணிகளை அவர் வடிக்கும் வடிவத்திலும் பொருத்தி, தான் அருவமாக உள்ளத்தில் கண்ட வடிவத்திற்கு உருவம் அளிக்கிறான். கவிஞனின் உள்ளத்தில் தோன்றியது அருவம். இதற்கு அவன் கொடுப்பது சொல் வடிவம். சிற்பியின் உள்ளத்தில் தோன்றியது அருமை இதற்கு அவன் கொடுப்பது கல் வடிவம். இவ்விருவரும் தங்கள் உள்ளத்திலே கண்டு இன்புற்ற பெண் வடிவத்தின் முகத்தை முழுமதியிலும், நெற்றியைப் பிறையிலும், கண்களை மலர்களிலும் கூந்தலை மயில் தோகையிலும், இடையைத்துடியிலும், தொடையை யானையின் துதிக்கையிலும், இங்ஙனம் ஒவ்வோர் உறுப்பையும், ஒவ்வோர் இயற்கை வடிவத்திலே காணுகிறார்கள். இவற்றைச் சிற்ப வடிவத்தில் சிறப்பாக அமைத்துக் காட்டுவதே நம் நாட்டுச்சிற்பக் கலை மரபின் ஒப்பற்ற செயலாகும்.



இங்ஙனம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான இயற்கைப் பொருள்களிலும் காணவும் கூடும். இதனால் வடிவங்களும் வெவ்வேறாக மாறும் தன்மை பெறுகின்றன. எனவே நமது கலைமரபிற்கு எல்லையென்பது இல்லை. கற்பனை விரியும் தன்மையுடையது. மேலும் தத்துவக் கருத்துக்களுக்கும், சமய உணர்வுகளுக்கும் வடிவம் காண்பதில் சிறப்பக்கலை சிறந்த பணி செய்கிறது. இக்கருத்துக்கள் எல்லையின்றி விரிந்து உயர்ந்து செல்லத்தக்கவை. இத்துறையைச் சிற்பக்கலை பற்றிக் கொண்டதால் இத்துறை விரிவும் உயர்வும் பெறுவதாயிற்று. பல நூற்றாண்டுகளையம் கடந்து நமது சிற்பக்கலை வளர்ந்து ஓங்கியதின் இரகசியம் இஃதே.


இத்தகைய அரும்பெரும் சிறப்பியல்புகள் வாய்ந்த நமது சிற்பக்கலை, மக்கள் கலையாகும். எவ்வாறெனில் சமுதாயத்தின் வாழ்க்கை நெறிகளையும், உயர்ந்த நோக்கங்களையம், பண்பாட்டின் சிறப்பையும் இக்கலை பிரதிபலிக்கிறது. தெய்வீக வடிவங்களிலும், அவற்றின் திருவிளையாடற் காட்கிளிலும் இப்பூவுலகின் இலட்சியின் நாயக, நாயகிகளையே சிற்பிகள் சித்திரிக்கிறார்கள். தனிப்பட்ட தங்கள் உணர்ச்சிகளையும், உள்ளக் கிடக்கைகளையும் சிற்பிகள் சமைப்பதால் பண்டைப் பெருமக்கள் சிற்பக் கலையைத்தங்கள் கலையாகவே கருதி ஆர்வத்தோடு பேணி வளர்த்தனர்.

- அமுதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆயுர்வேத வைத்திய முறைகளை ஆழ்ந்து கற்று, தம்மை நாடிவந்த பொது மக்களுக்கு, அன்பும் ஆதரவும் காட்டி அக்கறையுடன் வைத்தியம் செய்த வைத்தியர் கொக்குவில் கோ.க.நடராஜா அவர்கள், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார். காலக்கிராமத்தில் அன்பே உருவாய் சைவ சமயத்தில் திளைத்து, பக்தி நிலையோங்க, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய படி நிலைகளில் நின்று காரைக்காலில் சமாதி நிலைபெறும் (1967) பேறு பெற்றவர்.*

# சமாதிநிலை பெற்ற புகழ்பூத்த ஆயுர்வேத வைத்தியர் கோ.க.நடராஜா



Dr. Kanthaiya Nadarajah (Siddha Ayurveda Doctor)
Birth - 16-11-1893 Death - 04-10-1967

**யா**ழ்ப்பாணம், கொக்குவில் மேற்கு ஞானபண்டித வைத்தியசாலை ஸ்தாபகரும், அதன் உரிமையாளரும், பிரபல ஆயுர்வேத வைத்தியரும் சமாதி நிலை எய்தப் பெற்றவருமாகிய கோ.க. நடராஜா அவர்கள்.

விஜய ஆண்டு கார்த்திகை மாதம் 02 ஆம் திகதியில் (16.11.1893) வியாழக்கிழமை கொக்குவில் மேற்கு கோ.கந்தையா அவர்களுக்கு இரண்டாவது மக னாகப் பிறந்தார். கொக்குவிலில் இவரது தந்தையார் பிரபல வைத்தியர் குடும்பத்தைச் சேர்ந்தவர். சகல பண்பாடுகளோடும் சம்பத்துக்களோடும் நெடுநாள் வாழ்ந்தவர். அவருக்கு மகனாகப் பிறந்த நடராஜா சிறுபராயந் தொட்டே தன்னடக்கம், தியாகம், ஈசுரதியானம் முதலிய நற்பண்புகளை வம்மிசச் சொத்தாகச் சுவீகரித்துக் கொண்டார். தமது பாலிய வயதிலே திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த பிரபல ஆயுர்வேத வைத்தியர் இராமலிங்கம் அவர்களிடம் வைத்திய முறைகளையும் வாகடங்களையும் ஐயந்திரிபறக்கற்று சிறந்த வைத்தியராகப் பெயர் பெற்றார். உரிய வயதிலே "வைத்தியர் அவர்கள்" அவ்வூர்ப் பிரபல வியாபாரியான வை. சின்னத்தம்பி அவர்களின் சிரேஷ்ட புத்திரி தங்கம்மாவை விவாகஞ் செய்து, திருவாளர்கள் இராசரத்தினம், மார்க்கண்டு, இராசநாயகம், சண்முகராஜா என்ற நான்கு புத்திரர்களுக்கும் அட்டலட்சுமி என்ற புதல்விக்கும் தந்தையானார்.

பாலியத்தில் இவர் சர்வமத சம்மதமுள்ளவராக சமயப் பெரியோரையும் வரவேற்று உபசரித்து, விருந்தோம்பி உபகாரியாய் இருந்து வந்தார். வயது ஏற ஏற பக்தியோங்க திரு.நடராஜா சைவத்தைப் போற்றவும் நித்திய நியமமாக அதிகாலை சூரியவழிபாடு மற்றும் ஸ்நானம் செய்தல், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய படிகளில் நின்று சமாதிநிலை கூடவும் கூடிய புனிதராகத் தம்மைச் சீர்செய்து வந்துள்ளார். மெல்லிய ஆடைகளையே அணிவார். தெய்வீக சிந்தனை, ஏடுகள் படித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செய்யுள் ஆக்கும் தொழில்தனை மகிழ்ச்சியாகச் செய்தல், பாகங்களில் பக்குவம் பேணுதல், ஒழுங்குகளில் மேன்மை ஆகியன அவரிடம் ஆரோக்கியமாக அமைந்திருந்தன.

"கால்பார்த்து நட" என்று அவர் கூறுவதுண்டு. இது அவரது முதுமொழி, இன்றும் என் சிந்தைதனில் ஒலிக்கும் என மஞ்சவனப்பதி அன்பர் கணேசகுருக்கள் வைத்தியர் நடராஜா பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

கொக்குவிலூர் குலதெய்வமாய் அமைந்த மஞ்சவனப்பதியில் வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமானின் தாள் பணித்து நிற்கும் எம் கொக்குவிலூர் பாரம்பரியத்தை உரித்தாகக் கொண்டு வாழ்ந்த வைத்தியர் நடராஜா அவர்களோடு கணேச (ஐயா) குருக்கள் அவர்கள் குழந்தைப்பருவம் முதல் பெரியவரின் சமாதிநிலை வரை பழகியவர். அவரது வீட்டுப்பிள்ளையாக வளர்ந்தவர். நடராஜா வைத்தியர் தம்மை 'சுட்டிப்பயலே' என கணீர் என்ற குரலில் அழைப்பது தமது ஆழ்மனதில் பதிந்த ஒன்றாகியது என கணேச குருக்கள் கூறினார். கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு மேல் அவ்வீட்டு செல்லப்பிள்ளையாக இருந்தாராம்.

திரு.கோ.நடராஜா வைத்தியர் அவர்கள் வாரத்தில் ஒருநாள் புதன்கிழமை மௌனத்தைக் கடைப்பிடிப்பார். அந்த நாள் அவர்கள் எதுவும் பேசாது எல்லாம் செய்வார்கள். அவ்விடத்தில் பணியாளர்களின் பணி ஓங்கி நிற்கும். கணேச குருக்கள் வைத்தியர் திரு.நடராஜாவை மேலும் நினைவு கூருகையில் பின் கண்டவாறு கூறினார். "எனது தாயார் என் வருத்தத்திற்கு (தேமல்) கூட்டிப்போன காலம். என் நெற்றியில் எனது எட்டாவது வயதுதனில் (1955 - 1956) ஏற்பட்ட வெள்ளை தேமல் நெற்றியில் பாதிக்கு மேலாக படர்ந்திருந்தது. எனது தாயார் என்னை இப்பெரியாரிடம் வைத்தியம் செய்ய அழைத்துப் போனார். சில வருடங்கள் ஆகின. அவரின் வைத்திய அணுகுமுறை கட்டாயம் சனி நீராட வேண்டும் இது நியதி, நாள்தோறும் அலுக்காமல் சலிக்காமல் கூட்டிப் போவார் அம்மா. சிறுகச் சிறுக அவர்களுடன் பழக ஆரம்பித்தேன். சுமார் நான்கு வருடங்கள் கடந்தன. எனது சுத்தமான வெள்ளை நிற நெற்றி சுட்டிதனில் பொட்டு பொட்டாக தோல்நிறம் வர ஆரம்பித்தது. அவர்களுக்குப் பெரிய சந்தோஷம் "பொருள் வருவாய்" உழைப்புகள் பற்றி அவர் எண்ணியதில்லை. அதை இன்றும் நினைக்கும் போதும் அந்தக் காலத்தில் அவர் ஆற்றிய நோய் தீர்க்கும் பணியின் சிறப்பு விளங்குகிறது. இதன் காரணமாக அவர் ஓர் தெய்வமாக மக்கள் மனதில் பதிந்தார்.

பெரியாரின் தோற்றம் என் சின்னவயது முதல் நெஞ்சகலாது பதிந்திருந்தது. "அகஸ்தியர்" மாமுனிவர் போன்று அழகிய தாடி, தலைமுடி, அவருக்கே உரிய குணநடை, கணீர் என்ற குரல், வைத்திய மகிமை என்பன அவரது தனித்துவமாக விளங்கின. அதேவேளை அக்காலத்தில் ஒரு ரூபாய் என்பது பெரியகாசு (வெள்ளியானது) அந்த காலப் பகுதியில் மக்கள் கால்நடையாகத்தான் திரிந்து காரியம் பார்ப்பர். பெரிதும் தூரத்தில் உள்ளவர்கள் வண்டில்மாடு (திருக்கல் வண்டி) பூட்டி கூடாரமிட்டு பயணம் செய்து வருவர். வண்டிக்குள் நான்குபேர் இருப்பர். அன்று வைத்தியரின் வாசல் தெருவெல்லாம் மாட்டு வண்டிகளை அன்றாடம் பார்க்கலாம். நோயாளிகளையும் உற்றவரையும் அன்போடு கவனித்துப் பார்ப்பார். அவரின் நாடிபார்க்கும் திறனும், அவர் தட்டிக்கொடுக்கும் வார்த்தைகளும் "போகிற உயிர் திரும்பி வருவது" போன்று தோன்றும். அத்தனை சிரத்தை எடுத்துக் கவனிப்பார்.

இப்பெரியார் ஆயுர்வேத வைத்திய நிபுணராக இலங்கைத் தீவிலும் இந்தியாவிலும் பிரபலம் பெற்றவர். ஞானபண்டிதர், வைத்தியர் அவர்கள் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருப்பணிகளிலும் அதிக அக்கறை செலுத்தினார். சுண்ணாம்பால் கட்டப்பட்ட ஆலயத்தை 1936 ஆம் ஆண்டு சீமெந்து கொங்கிறீற் கட்டடமாக ஆக்கிக்கொடுத்தார்.

அதேவேளை 1964 ஆம் வருடமளவில் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் ஓரிடத்தில் மடம் அமைக்கவும் பணிகளை மேற்கொண்டார். பின் காரைக்கால் சிவபூமிதனில் சித்தர்களுடனான ஈடுபாட்டின் காரணமாக அவ்விடத்தை தேர்ந்துகொண்டார். காரைக்கால் என்னுமிடத்திற்குச் சென்று அங்கு தியானம், ஆத்மதரிசனம் ஆகியவற்றில் தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்தி வந்தார். அந்நாட்களிலே அங்கு வந்து சேர்ந்த அடியார் கூட்டத்திற்கு தர்மம், விருந் தோம்பல் முதலியவற்றை தாராளமாகச் செய்தது மல்லாமல் அவர்களுக்குக் குருவாகவும் இருந்தார்.

கொக்குவிலுள்ள பல கோவில் நிர்மாண வேலைகளுக்கும் பூஜைக்குமாக உதவி புரிந்தும் வந்துள்ளார். காரைக்காலிலுள்ள சிவன் கோயிலில் பலவிதமான தொண்டுகளையும் சேவைகளையும் செய்தும் செய்வித்தும் வந்துள்ளார். இக் கோவிலிற்கான சிவன் கோவிலைச் சார்ந்துள்ள அன்பர்கள் உள்ளத்தில் கோவில் கொண்டிருந்த இவர் தான் சமாதியாக இருப்பதற்கு விரும்பி அதற்காக வேண்டிய ஒழுங்குகளை அங்கேயே செய்து வைத்திருந்தார்.

இவருக்கு இணுவிலிலும், கோண்டாவிலிலும், கொக்குவிலிலும் அநேக பக்தர்களும் சீடர்களும் இருக்கிறார்கள். அவர்களுள் திரு.அம்பலவாணர் (மணியம்) சாமியார் வைத்தியரின் அருளுக்கும் அன்புக்கும் ஆளானவர்.

பணியாளர்கள் ஆற்றிய பணிகள் இவர் தம் வைத்திய முறைகளுக்கும், மருத்துவம் தயாரிக்கும் வேர் முதல் எண்ணெய் வகைகளுக்கும், செந்தூர பஸ்மம் பரிபாகங்களுக்கும் பெரிதும் உதவின. நடராஜா வைத்தியருடைய மூத்தமகன் இராசரத்தின மும் இளைய மகன் சண்முகராஜாவும் தந்தையாரு டன் கூடி நல்ல முறைதனில் வைத்திய பரிமாணங் களைப் பழகினர். மூத்தவர் தனியாகவும் இளையவர் தந்தையாருடனும் பணிவாக பணியாற்றிய பாங்கு கள் சிறப்பானவை.





*1963,1965* காலப்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற ஆயுர்வேத மருத்துவக் கண்காட்சியில் நடராஜா வைத்தியரின் செந்தூரப்பொடிக்கு விருது கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பேரோடு வாழ்ந்த பெரியவரின் தமிழ் வைத்திய முறைகள் போற்றத்தக்கவை. மூலிகைகள், எண் ணெய் வகைகள், செந்தூரப்பொடி, பஸ்மம் ஆகிய வகைகள் அவர் கையாண்டவைகளுள் சிறப்பான வையாகும். மருதோன்றி இலை அரைத்துப் பூசி தலைக்கு எண்ணெய் வைத்து குளிப்பது இன்றும் எம் சுகத்திற்கு சான்றுபகிர்கின் றது. அவரது கொடிக் கள்ளிச்சாறு அனுமானம் உடலில் ஏற்படும் சொறியைக் குணப்படுத்தும் சிறந்த வைத்திய முறையாகும்.

நாராயணன், முருகன் ஆகியோரை ஆத்மார்த்த மூர்த்திகளாக வழிபட்டு வந்த வைத்தியர் அவர்கள் தமது பிற்காலத்திலே தென்னிந்தியா, இலங்கை ஆகிய இடங்களிலிருக்கும் சிவஸ்தலங்களுக்கும் மற்றைய கோவில்களுக்கும் சென்று வழிபாடும் வந்தனையும் ஆற்றி வந்திருக்கிறார். தர்மத்திலும் சாதுசங்க இணக்கத்திலும் பெரியோர் பேணல், விருந்தோம்பல் ஆகிய சிறந்த மனிதப் பண்புகளிலும் ஈடுபட்டு சிறப்புப்பெற்றவர். ஆத்ம சாந்திக்கான மார்க்கங்களிலும் இவர் தம் வாழ்க்கையைச் சீர்செய்து சிவன் முத்தரானார். வெளிக்கு சாதாரண மானுட வேடம் தாங்கிய ஒருவராக காணப்பட்ட போதிலும் நடராஜா வைத்தியர் அவர்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கான தவத்தினர் போலவே நடமாடினார். அவர்களின் ஜோதியின் பிரவாகமாக அவர்கள் பிலவங்க வருடம் புரட்டாதி மாதம் 19ம் திகதி (04.10.1967) புதன்கிழமை சித்திரை நட்சத்திரத்தில் சிவன் தாள்களை தியானித்துச் சமாதி நிலையெய்தினார். இவரின் சமாதி காரைக்காலிலே அமைந்திருக்கிறது. அடியார்கள், தொண்டர்கள் சென்று வணங்கி வருகிறார்கள்" என கணேச (ஐயா) குருக்கள் மேலும் நினைவு கூர்ந்தார்.

**தொகுப்பு: ஆனந்தி ரஞ்சன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Saiva Paripalana Sabai

Thilaka Wijeyaratnam



## A hundred years of service to religion

After the time of Shri Arumuga Navalar, his ardent devotees continued to follow in his footsteps by spreading the principle of Veda Sivahamam and the Sidhantham of Saivism. As Shri Navalar nurtured the pure form of saivism the devotees also resolved to do so.

Shri Navalar the spiritual leader of Jaffna founded a school called "Saiva English School" at Vannarponnai in 1872 with the view to teach Tamil and English to the children along with the Saiva ways of life and living.

At the same time the devotees were concerned about a foreign religion interfering with the stable life of the saivaites. The priests of foreign missions started Christian schools and were also involved in converting people to their religion. They also published a journal called "Udaya Tharakai" (the Morning Star) in 1841, another journal called "Sathia Veda Pathukavalan" in 1876 and used these journals to spread their religion. They also used this medium to condemn and criticize Saivism.

Concerned Saiviaites, in turn, produced the journal "Ilankai Nesan" through the medium of which they continued Navalar's service to Saivism. Insipite of the attempt to convert Saiviates to Christianity many proud Hindus defied the attempt and denied the favours and remain to this day as loyal Saiviates.

The faithful followers of Shri Navalar in their time established an organisation called "Saiva Pragasa Samajam" with Mr. N.S. Ponnampalampillai as its president and also produced a journal called "Udaya Banu" (The Rising Sun) on 16.08.1885.

In the year eighteen hundred and eighty-eight on a very auspicious day and hour, some Saiva devotees started 'Saiva Samaya Paripalana Sabai' in the Navalar's Saiva Pragasa Vidiyalaya Main Hall. This organisation practically swam against the current to preserve and protect Saivism from the onslaught of a foreign mission.

## The following are the aims of the organisation:

1. To nurture Saivaism from any other religion interfering. To this date, the organisation has performed this function efficiently.

2. To establish schools to educate the children in English and Tamil and teach them to follow the Saiva ways of life.

This organisation accomplished this task by establishing a school. This was founded by Mr. Nagalingam. In 1886, Mr.William Nevins Muththukumaru Sithamparappillai started the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"The Native Town High School" in the Main Street. He handed over the school to Mr. Nagalingam who named it as "Town High School" and when the Paribalanasabai took over the responsibility it was named "Hindu High School" with about 80 students. In 1890, it grew into the present Jaffna Hindu College.

3. This aim is to get down from South India religious leaders and scholars to tour the peninsula and give lectures on Saivaism to people. This is still continued. On Sundays these scholars give talks on Saivaism, in the prison.

4. The next aim is to set up a journal to spread




and protect Saiviasm from the influence of foreign religions. On 11- 09-1989 a bilingual journal called "Hindu Organ" was published once a fortnight. Besides this, charity halls of Sithamparam and Vetharaniyam are maintained at the Temples at Chankanai, Koyilakandy and Thoppu.

The Association took charge of the Victoria library and reading hall in the year 1887, in honour of Queen Victoria's 50th year of rule. This library was established by Mr. C. Nagalingam and later it was transferred to Jaffna Hindu College. In 1910, the Paripalana Sabai undertook the responsibility of the library.

As a crowning event of the Society in 1942, the Navalar Ashramam was established. All functions of the Society were held there.

A hostel for those training for Brahmin priests and Saiva priests was built. This followed the custom of Guru kula method. That is the trainees were residents there and followed the classes.

There were several special events conducted by the Society

1. In 1889 on July 7th, the name the Saiva Samaya Paripalana Sabai was changed to Saiva Paripalana Sabai.




2. In 1890, the Association welcomed Sir Pon. Ramanathan.
3. In 1897, Swamy Vivekananthar was given a reception.
4. In 1902, Hindu College was handed over to the Hindu College administrative body.
5. In 1908, Dr. Kalayoki Anandakumaraswamy visits.
6. In 1927, Mahathma Ganthi visits.
7. In 1931, the Saiva Paripalana Sabai was registered with the government.
8. In 1940, Golden Jublee of Hindu College.
9. In 1951, Diamond Jubleee of Hindu College.
10. In 1967, Hindu Organ's 75th year of publication was celebrated.

In addition to all these achievements the Saibai conducts several examinations:-

1. All-Island religious knowledge exams
2. Siththantha Pravesa Pandithar exam.
3. Pala Pandithar exam and
4. Pandithar exam

Famous citizens like Sir Pon Ramanathan, Sir. V. Duraiswamy, S. Sivagurunathar and T. Muththusamypillai were leaders of the Society.


In addition, the Paripalana Sabai has also organised the All Ceylon Saiva Maha Sabai from September 15th to 17th with Honourable the Minister D.M. Swaminathan as Chief Guest. Lectures by popular Saiva devotees like Kamba Varuthy Jeyarajah were given.

All these activities are confined to the peninsula. There are many Saivaites and Siva devotees outside the peninsula too. It should be a welcome gesture if the Sabai extends its services to these Saivaites too.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Printed and Published By Express Newspapers (Ceylon)(Pvt.)Ltd, at No.185, Grandpass Road, Colombo-14, Sri Lanka.